வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 சித்திரைத் திங்கள் 27-ம் நாள் (9—5—1965) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 7 | இதழ் 50




# தமிழ் காங்கிரசாரின் சதி

## மாவட்ட சபைத் திட்டத்தை முறியடிக்க முயற்சி

## சுதந்திரக் கட்சியினருடன் இரகசிய உடன்பாடு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தேசிய அரசாங்கத்திற்கும் விரோதமான நடவடிக்கைகளில் தமிழ் காங்கிரசினர் இறங்கியிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன. தமிழ் காங்கிரசாரின் வட்ட மேசை மாநாடு பற்றிய யோசனையை அரசாங்கப் பாராளுமன்றக்குழு நிராகரித்து விட்டு, மாவட்ட சபை மசோதாவைக் கொண்டுவரப் போவதாக அறிவித்ததே இதற்குக் காரணமாகும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாவட்ட சபை மசோதாவை எப்படியும் தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்ற நோக்கத்தில் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து தமிழ்-காங்கிரசார் சதியாலோசனைகள் நடாத்தி வருகிறார்கள் என்றும் இத்திட்டத்தை இரு பகுதியினருக்கும் ஏற்ற முறையில் செயற்படுத்தும் பொறுப்பை அடுத்தடுத்த தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுள்ளார்கள் என்றும் தெரிய வருகிறது.

மாவட்ட சபை மசோதா பற்றி இவ்வாரம் கூடிய பாராளுமன்ற அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டபொழுது தமிழ் காங்கிரசினர் மாவட்டசபைமசோதாவை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வட்ட மேசை மாநாடு ஒன்றை நடாத்த வேண்டுமென்று வாதிட்டனராம். தமிழ் காங்கிரசாரின் இந்த யோசனையை ஆளும் கட்சிக் குழு முற்றாகநிராகரித்துவிட்டதாகவும், இதைத் தொடர்ந்து மாவட்ட சபை மசோதாவை சபையில் சமர்ப்பிக்க முடியாத நிலையைஉருவாக்கவேண்டுமென்றும் தமிழ் காங்கிரசார் இரகசிய முடிவெடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர் கட்சிகளின் துணையை நாடுவதென்றும், அதற்கான பேச்சு வார்த்தைகளை காங்கிரஸ் முக்கிய பிரமுகர் ஒருவரே பொறுப்பேற்றுள்ளாரென்றும் தெரிகிறது.

எதிர் கட்சியிலுள்ள சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் இவர் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும், பேச்சுவார்த்தையின் போது திரு. பொன்னம்பலம் மறைந்த பிரதமர் பண்டாரநாயக்காவின் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதாகவும் ஒரு சில ஆதாரத்துடன் சுட்டிக் காட்டினாராம்.

இரகசியப் பேச்சு வார்த்தைகளின் முடிவையடுத்து இரு பகுதியினரும் மாவட்ட சபை மசோதாவை சபையில் சமர்ப்பிக்காமல் எப்படியாவது தடுத்து நிறுத்துவதென்றும் தீர்மானித்துள்ளார்களாம்.

## மீனவர்களுக்கு புனர் வாழ்வு

## 68 இலட்சம் ரூபாவுக்கு திட்டம் உருவாகிறது

புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் பெறவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடற்றொழிலைப் பெருக்குவதற்கான திட்டங்களை வகுக்கவும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி வந்த செய்தியை சுதந்திரன் ஏற்கனவே பிரசுரித்திருந்து வாசகர்கள் அறிந்ததே. இதைத் தொடர்ந்து சென்ற 5-ம் திகதி புதன் கிழமை காலை 11 மணிக்கு திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், சி. எக்ஸ். மார்ட்டின், கே. துரைரத்தினம், எஸ். எம். மாணிக்கராசா ஆகியோர் கொண்ட குழு அமைச்சரை மூன்றும் முறை சந்தித்துப் பேசியது. இப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் பின்வருவனவற்றை அமுல்நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

1. புயலால் பாதிக்கப்பட்டோர்க்கு நிவாரணம் கொடுப்பதற்காக ரூபா 8 லட்சம் ஒதுக்கப்பட்டதும், இப்பணம் உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கும், சேதப்பட்ட படகுகளைத் திருத்துவதற்குமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

2. பிறநாட்டு அரசாங்கங்கள் நன்கொடையாக அனுப்பிய வலைகள், வலைகளை இழந்தோருக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

3. மீன்பிடி யந்திரப் படகுகளை வாங்குவதற்காக அரசாங்கம் வருடா வருடம் கடனுதவி அளித்துவந்தது. இக்கடனுதவி பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டோரில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்கு முதலில் இக்கடன் உதவியை வழங்குவது.

4. புயலில் தமது யந்திரப் படகுகளை இழந்தவர்கள் புதிய படகுகளை வாங்குவதற்குக் கடன் வசதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேலதிகமாக 60 லட்ச ரூபா ஒதுக்கப்படவேண்டுமென்று நிதி அமைச்சரிடம் விண்ணப்பிக்கப்படும்.

இவ்வேற்பாடுகளைப் பற்றி கொள்கை முடிவுகளை

(9-ம் பக்கம் பார்க்க)

## கணக்காளர் பரீட்சை பிற்போடப்படலாம்?

இத்திங்கள் நடுப்பகுதியில் நடைபெறவிருந்த அரசாங்க ஊழியர்களுக்கான கணக்காளர் சேவைப் பரீட்சையும், நிர்வாக வகுப்பு உயர்வு தரம் இரண்டு பரீட்சையும் ஒத்திவைக்கப்படலாமென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்க வட்டாரத்திலிருந்து தெரிய வருகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கான நிர்வாக எழுதுவினைஞர் பரீட்சைக்கும் கணக்காளர் பரீட்சைக்கும் சிங்களத் தகுதி வேண்டுமென்ற நிபந்தனையை நீக்குவதற்காக இப் பரீட்சைகள் பிற்போடப்படலாம் என்று எழுதுவினைஞர் சங்க வட்டாரங்களிலிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

இம்மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சை அறிவித்தலிலும் இந்நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்நிபந்தனையை நீக்குவதற்காக பரீட்சை பிற்போடப்படலாம் என்று எழுதுவினைஞர் சங்க வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

## வடையை வெறுத்தவருக்கு வடை

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவர் வீட்டுத் திருமணத்திற்கு வருகை புரிந்திருந்த இடதுசாரித் தலைவர் ஒருவருக்கு வடைப் பார்சல் ஒன்று கொடுக்கப்பட்டதாம்.

இத் திருமணத்திற்கு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சிங்களவரல்லாத இடது சாரிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த இடதுசாரித் தலைவியொருவரும் சென்றிருந்தார்களாம்.

இவர்களுக்குத் திருமண முடிவில் பலகாரங்கள் கொண்ட சிறு பார்சல்கள் வழங்கப்பட்டதாம். இப் பார்சல் ஒன்றிற்குள் வடையிருப்பதைக் கண்ட அந்தத் தலைவர் முகத்தைச் சுழித்துக்கொண்டாராம்.

## மத்திய வங்கியில் புதிய தொழிற் சங்கம்

### தமிழ் ஊழியர்கள் அமைப்பார்களாம்

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் தமிழ் பேசும் ஊழியர்கள் தங்களுக்கென தனியானதொரு தொழிற் சங்கத்தை ஆரம்பிப்பார்கள் என்று தெரிகிறது. இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற் சங்கம் வகுப்புவாத ரீதியில் செயற்பட்டு தமிழ் ஊழியர்களின் நலனைப் புறக்கணித்துவருவதே இதற்குக் காரணமாம்.

மத்திய வங்கி ஊழியர்களின் தொழிற் சங்கம் தமிழ் ஊழியர்களின் நலனைப் பாதுகாக்கத் தவறிவிட்டதுடன், தமிழ் மொழியைப் புறக்கணிக்கவும் முற்பட்டுள்ளதாம். அண்மையில் தமிழ் ஊழியர்களுக்கு வங்கி நிர்வாகத்தினால் விநியோகிக்கப்பட்ட, இடர்ப்பாட்டை இச்சங்

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"தங்கக் கொலுசம் கலகலென்று தாளமிசைக்க-முரசம்போல
கொங்கை இரண்டும் குத்திட்டு—கொஞ்சும் கவிதை நான்பாட
கங்கை நீரின் 'சலசல'ப்பிற கன்னி நெஞ்சம் கிளுகிளுக்க
பொங்கும் இன்பப் பெருமூச்சின் போதைபுரள அவள் நின்றாள்!"

—நாகூர் ஏ. பாவா.

## 16. 'பழக்கம்' எனும் வல்லோன்!

"குமாரி அக்கா ஒங்களிடம் இன்னொண்ணு கேக்கச் சொல்லிச்சுங்க' என்று கிருஷ்ணன் சொன்னவுடன், அந்தக் கணப்பொழுது நேரத்துக்குள் எப்படி யெப்படியெல்லாமோ கற்பனை செய்து கொண்டது கணேசனுடைய உள்ளம். அடக்க முடியா ஆர்வத்தோடு கிருஷ்ணனின் வாயைக் கிண்டினான் கணேசன்!" என்னடா கேட்கச் சொல்லிச்சு உன்னுடைய குமாரி அக்கா?"

"ஒண்ணுமில்லீங்க... அவங்க வூட்டுக்குப் பக்கத்து வூடொண்ணு காலியாக் கெடக்குதுங்களாம். ஒங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராச்சும் இருந்தா சொல்லச்சொல்லிச்சுதுங்க. கூலிக்குக் கொடுக்கிறதுக்குங்களாம்!"

கிருஷ்ணனை அப்படியே அலாக்காகத் தூக்கிப் பந்தாட வேண்டும் போலிருந்தது கணேசனுக்கு. ஏதாவது ஒரு நற்செய்தியே நம் காதில் விழுந்தால் நம் உளம் எப்படி மலர்கின்றது? அந்த நற்செய்தியே நமக்கு நன்கு பிடித்தமானதாகவும்-நாம் எதிர் பார்த்ததாகவும்—அமைந்துவிட்டால் நம் வசத்திலிருந்து நாம் இழந்து போய் ஒரு வெறி நிலைக்கு ஆளாகிவிடுகின்றோம். அந்த நேரத்தில் யார் எதைக் கேட்டாலும் செய்வதற்குரிய மனப்பக்குவத்தையும் பெற்றுவிடுகின்றோம். கிருஷ்ணன் சொன்ன நற்செய்தி கணேசனின் செவிகளில் தேனைப் பொழிந்தது. வாஞ்சைக் குரிய ஒரு பொருளாகத் தோற்றமளித்தான் கிருஷ்ணன். வீடுதேடும் படலம் இத்தனை இலகுவில் 'சுலபம்' ஆனது மட்டும் கணேசனுடைய குதூகலத்துக்குக் காரணம் இல்லை. எந்தத் தோற்றம் தன் கண்களிலிருந்து எப்பவும் மறைந்துவிடக் கூடாது என்று அவன் ஏக்கமுற்றானோ; அந்த இனிய பொருளுக்கு மிக அணிமையில் அவனுக்குக் குடியிருக்க வாய்ப்புக் கிடைத்ததுதான் அவனுக்கு அத்தனை மகிழ்வைக் கொடுத்தது!

மௌனத்தோடு தன்னுடன் நடந்துவந்து கொண்டிருந்த கிருஷ்ணனிடம் கணேசன் சொன்னான்: "கிருஷ்ணா! நான்கூட இப்போ ஒரு வீடு பார்ப்பதற்குத் தாண்டா இப்படிக் கிளம்பிக்கொண்டிருக்கின்றேன்."

"அப்படிங்களா? எங்கூட வாங்க. அக்காக்கிட்டச் சொல்லி வூட்ட ஒழுங்கு பண்ணிப்புடலாம்."

"அக்கா வீடு எங்கேடா இருக்கு?"

"அதோ பக்கத்தில தாங்க. வாங்க போயிடலாம்"

இருவரும் கால்களை எட்டிப் போட்டு விரைவாக நடக்கத் தொடங்கினர். அவர்கள் சென்றபாதை ஏற்றத்திலிருந்து கீழ் நோக்கிச் சரிந்துகொண்டு சென்றது. அந்தச் சரிவான பாதையில் செல்லும் போது, கணேசனின் கழுத்தை யாரோ பிடித்துத் தள்ளிக்கொண்டு செல்வதுபோல் இருந்தது. பின்னால், கணேசனுடைய ஆத்மாவிற்குத் தென்றல் நல்கும் சுகத்தையும், தீ தரும் கொடுமையையும் மாறி மாறிக் கொடுத்துக் கொண்டிருந்த தாமரகுமாரி என்ற காந்த மலையை நோக்கி இரும்புத் துண்டு விரைவது போல் கணேசன் அந்தச் சரிவுப்பாதையில் விரைந்துகொண்டிருந்தான்.

"இன்னும் தூரம் போகவேண்டுமா கிருஷ்ணா?"- மூச்சு வாங்கக் கேட்டான் கணேசன்.

"இல்லீங்க...இதோ இந்த றப்பர்க் காட்டைத் தாண்டினா அப்புறம் பக்கத்தில தாங்க"

'நீயும் உன் இறப்பர்க் காடும்' என்று மனதுள் சொல்லிக்கொண்டு கிருஷ்ணனைப் பின் தொடர்ந்தான் கணேசன்.

வழியில் இரண்டொரு 'லயங்'கள்; அவற்றில், தன் பாடசாலையில் படிக்கும் மாணிக்கக் குஞ்சுகளின் ஏழ்மைக் கோலம்! கணேசனைக் கண்டதும் குதூகலம் கொண்டு அவர்கள் போட்ட கூப்பாடு; சிலர் அவனைக் கண்டு பயந்து, மேடும் பள்ளமும் மிக்க அந்த மலைக் காட்டைச் சம தரையாக எண்ணிக் கொண்டு ஓடி ஒழிந்த வேடிக்கை; அதற்கும் அப்பால் இறப்பரைப் பதம் பண்ணும் தொழிற்சாலையின் பெரிய கட்டிடம்; அந்தத் தொழிற்சாலையை ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு பாதை முன்னேறிக் கொண்டிருந்த பாங்கு! தொழிற்சாலையைத் தாண்டிக் கொண்டு நடக்கும்போது கணேசன் தன் மூக்கைப் பிடித்துக் கொண்டான்! மூளையைக் கலக்கும் துர்நாற்றம் தொழிற்சாலையை ஒட்டியிருந்த சாக்கடையிலிருந்து கிளம்பிக்கொண்டிருந்தது. தன்னுடன் வந்த கிருஷ்ணனோ? அங்கு வேலைசெய்து கொண்டிருந்த மனிதர் [illegible] தாகவே தோன்றியது கணேசனுக்கு!

பழக்கத்தினால், நல்லதைப் பாராட்டும் தன்மையும் போய், கெட்டதை வெறுக்கும் தன்மையும் அற்றுப் போகின்ற தென்பதற்கு நல்லதோர் உதாரணமாக இருந்தது அந்த இடம்!

அங்கு தேயிலைத் தோட்டத்தில் என்னடாவென்றால், தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து பிறக்கும் தேயிலையின் இனிய மணத்தை ஒருகணம் தரித்து நின்று உறிஞ்சி அனுபவிப்பதற்கு எந்த ஜீவனும் இல்லை! இங்கு என்னடாவென்றால், இறப்பர்த் தொழிற்சாலையிலிருந்து பிறக்கும் மூக்கைப் பிடுங்கும் துர்நாற்றத்தை வெறுத்து மூக்கைப் பிடிப்பதற்கும் ஒரு ஜீவனும் இல்லை! இப்படி நல்லதையும், கெட்டதையும் ஒருசேர நோக்க வல்ல சக்தியைக் கொடுக்கும் பழக்கத்தின் விநோதத்தை எண்ணிக் கணேசன் தன்னுள் வியந்துகொண்டான். 'பழக்கம், அருமைக்கும் திரையிடுகின்றது; அருவருப்புக்கும் திரையிடுகின்றது! இல்லாவிட்டால், அந்த வெள்ளைக்காரத் துரைக்கு தன் அழகான இனிய மனைவியினது தோற்றத்தின் அருமை ஏன் தெரியாமல் போகவேண்டும்?'

'அதோ! அந்த நெல்லு வயலுக்கு அங்கிட்டுதாங்க குமாரி அக்காவோட வூடு இருக்குதுங்க."

கணேசனின் சிந்தனையைக் கலைத்துவிட்டான் கிருஷ்ணன். கிருஷ்ணன் காண்பித்த திசையில் பார்வையைச் செலுத்தினான் கணேசன். இறப்பர்த்தோட்டம் கடந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் பச்சைப் பசேல் என்ற நெல்வயல்களாகக் காட்சி தந்துகொண்டிருந்தன. நில அமைப்பில் கூட இப்பொழுது ஒரு மாற்றம், எங்கும் ஒரே சீராக சமபரப்பாக இருந்தது தரைத் தன்மை. தூரத்தே எல்லை கடந்த நீலவானுக்கு எல்லைக்கோடு வரைந்துகொண்டிருந்தன நீலமலைத்தொடர்கள். பச்சை வயலும், நீலமலைத் தொடர்களும், அவற்றில் படியும் வெண்ணிற முகிலும் சேர்ந்து, கிளியும், மயிலும், கொக்கும் பறக்கும் ஓர் இன்பப் பூஞ்சோலை போல் காட்சி தந்தன அந்தச் சூழல்கள்! இந்த மனோரம்மியமான சூழல், பொன்னும், மணியும், மின்னும் வைரமும் குலுங்கும் பொக்கிசச்சாலையாக மாற்றின கணேசனுடைய உள்ளத்தை! தான் கங்கையில் சந்தித்த குமாரி என்ற அந்தப் பெண்ணுக்கு எப்படி அந்தப் பெருநிலவையொத்த சுந்தர வடிவம் கிடைத்த தென்பதன் இரகசியம் தானாகவே புரிந்தது கணேசனுக்கு!

பின்னர் ஒரு சமயம் கணேசனுடைய கவிதை நண்பன் குமரன் இந்த எழில் குலுங்கும் இனிய சூழலைப் பார்த்துவிட்டு, 'ப்பூ! இந்தப் பச்சை வயலையும், நீலமலைத் தொடர்களையும் பார்த்துவிட்டுத்தானா நீ, 'ஆகா, ஓகோ! அற்புதமான இயற்கைக் காட்சிகள் குலுங்குகின்ற பகுதியடா நான் குடியிருக்கும் சூழல்' என்று வர்ணித்துக் கடிதம் கடிதமாய் எழுதினாய்? இந்தப் பச்சை வயல்களுக்குப் பசுமையையும் எது வாரி இறைத்தது என்கின்றாய்? உன் தாமரகுமாரி! இந்தச் சுற்று வட்டாரம் இத்தனை பசுமையுடனும், செழுமையுடனும் இருப்பதற்கு அவள் ஒருத்தி தான் காரணம் என்பதைத் தெரிந்து கொள்வாயாக! நீயும், உன் இரசனையும்!' என்று திட்டு திட்டென்று திட்டிவிட்டுப் போனான்.

அம்மட்டோடு அந்த 'வம்பு'க் கவிஞன் விட்டானா? ஒரு நாள் குளிப்பதற்குக் கங்கைக்கு வந்தவன், 'உடை வறுமை'யோடு தாமர

(14-ம் பக்கம் பார்க்க)

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய
மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-50

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
M. A. R. S. மனுவேல் நாடார்
அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

## பலசரக்குக் கடைகள்

ஈழத்து இலக்கிய உலகைப் பொறுத்த மட்டில், அண்மைக் காலத்தில் பெரும் மந்த நிலையே காணப்படுகின்றது. ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் இடையே ஒருவித களைப்பும், ஆக்க இலக்கியங்களில் ஒருவித இளைப்பும் தாம் காணப்படுகின்றன. 1960ம் ஆண்டிற்கும், 1963ம் ஆண்டிற்கும் இடையில் இலக்கிய கர்த்தாக்களிடையே நிகழ்ந்த காரசாரமான வாக்கு வாதங்களும் கூட ஓய்ந்தொழிந்து விட்டன. எவற்றிற்காக ஒவ்வொருவரும் கத்திக்திட்டினரோ அவற்றை எல்லாம் மறந்து போய் திரிகிறார்கள்.

இதுவும் நன்மையே. வாய் வீச்சிலொன்றுமில்லை; ஒருவரை ஒருவர் திட்டுவதனாலும் இலக்கிய கர்த்தாக்களின் குடும்பரகசியங்களைச் அரங்கிற்கு இழுத்து பரகசியப்படுத்துவதனாலும் ஆக்கவிலக்கியங்கள் உருவாகி விட முடியாது. வாயை மூடிக் கொண்டு ஆக்க பூர்வமாக எதையாவது செய்வார்கள் என்று எதிர் பார்த்தால் அதுவும் ஏமாற்றமே!

ஒருவரையொருவர் திட்டித்தீர்ப்பதில் நம்மவர்கள் வலுகெட்டிக்காரர்.

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

'சிரைக் கடைக்கும் எதிர் கடை வேண்டும்' என்று சொல்வார்கள். ஒரு நாய் குரைக்கத்தொடங்கினால், ஒன்பது நாய்களும் குரைக்கத் தொடங்கிவிடுகின்றன. இவற்றைப் போலத்தான் நமது இலக்கிய உலகும்.

ஒரு முகாம் ஏதாவது செய்யத் தொடங்கினால் மறுமுகாமும் விழிப்படைந்து விடும். நாவல், சிறுகதை, கவிதை முதலியவற்றிலிருந்து ஒருவரையொருவர் திட்டுவது வரை இதுதான் நிலை.

கொஞ்சக்காலமாக நமது இலக்கியப் பல சரக்குக் கடைகள் இரண்டும் தூங்கி வழிகின்றன. இவற்றில் சிலர் முழிப்படைந்து விடியோட்டி வருகின்றனர். மற்றப்படி ஒரே தூக்கந்தான்.

இவற்றின் தூக்கத்தைக் கலைப்பது அவசியம் போலத்தான் இருக்கிறது. ஒரு பலசரக்குக் கடையில் வியாபாரம் களை கட்டினால் போதும்; மறு பல சரக்குக் கடையும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு.

இரு பலசரக்குக் கடைக்காரரும், சிப்பந்திகளும், எடுபிடியாட்களும் ஒருவர்க்கொருவர் போட்டி மனப்பான்மையினரே தவிர, நல்ல இலக்கியச் சரக்குகளை அளிக்க விருப்பம் இல்லாதவர்கள். 'அவன் தொடங்கட்டும், நாமும் தொடங்குவோம்' என்று ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு தூங்கிவழிகிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது—

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல். எச். எம். நாதன், கம்பளை

கே: தனது மகளைத் துண்டு துண்டாக வெட்டி கடலில் போட்டாலும் அவளை எனக்கு கலியாணம் செய்து கொடுக்க மாட்டேன் என்று எனது மாமனார் கூறுகிறார். குயுக்தியாரே, இவ் விடயத்தில் நீங்கள் கொஞ்சம் எனக்கு உதவி செய்ய முடியாதா?

ப: உதவி ஏன்? துண்டுகளை ஒன்று சேர்க்கவா?

ஃ

எம். ஆர். ஏ. அலீஸ், மாத்தளை

கே: நான் ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறேன். காதல் நிறைவேறுமா?

ப: நிறைவேறினால் நீர் ஒரு பணக்காரராகி விடுவீர். இல்லையேல் ஒரு பைத்தியகாரராகிவிடுவீர்.

ஃ

ஆர். விமலன், கொழும்பு—10

கே: உலகில் தாங்கமுடியாத பசி வயிற்றுப் பசியா? காதற் பசியா?

ப: காதற்பசிதான். காதற் பசிக்குப் பலியானவர்களின் தொகையைவிட வயிற்றுப் பசிக்குப் பலியானவர்களின் தொகை மிகக் குறைவு.

ஃ

என. மு பழனி, கண்டி

கே: காதலுக்குக் கண் இல்லை என்பது உண்மையா?

ப: கண்ணிருந்தாலும் அது குருடாகித்தான் இருக்கும்.

ஃ

எஸ். ஜி மூர்த்தி. களுவஞ்சிகுடி

கே: திருமதி சிறிமா இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: தோல்வியின் காரணமாக தனது கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பூசலைத் தீர்ப்பதில் தனது நேரத்தையும் முயற்சியையும் விரைக்கிக் கொண்டிருக்கிறாராம். அவரது கட்சி ஒரு நெல்லிக்காய் மூட்டை. மூட்டை அவிழ்ந்துவிட்டால் "பொல பொல" என்று உதிர்ந்துவிடும். மூட்டையின் வாயைக் கட்டியிருந்த கயிறுதான் அரசாங்கம். அந்தக் கயிறு இப்பொழுதில்லையே!

ஃ

வி. என். சதாசிவம், திருமலை

கே: இரண்டு மூன்று அங்குலம் வயிறு தெரியக் கூடியதாக உடை அணியும் பெண்களை என்ன செய்யலாம்?

ப: அவர்களுக்குத் துணி விற்பதைத் தடை செய்ய வேண்டும்.

ஃ

சிவா, காங்கேசன்துறை

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன் அவளும் என்னைக் காதலித்தாள். ஆனால் இப்பொழுது அவள் வேறு ஒருவனைக் காதலிக்கிறாள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: காதலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு நிம்மதியாக இருக்கலாம். அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் நீங்கள் வேறு ஒருத்தியைக் காதலிக்கலாம்.

ஃ

எம். நாதன், முள்ளியவளை

கே: தமிழ் காங்கிரசின் பலம் கூடிவிட்டதைக் கண்டு தமிழரசுக் கட்சியினர் காரியத்தில் அவசரப்பட்டு விட்டார்கள் என்று வவுனியா பிரதிநிதி கூறினாரே! உங்கள் கருத்து என்ன?

ப: காங்கிரஸின் பலம் கூடினாலுஞ்சரி, அது மூலை முடுக்குகளில் கும்பகர்ண சேவை செய்தாலுஞ்சரி, தமிழரசுக் கட்சி தன் குறிக்கோளை அடைவதற்காகக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதில் என்றுமே தாமதம் காட்டுவதில்லை. ஆனால் தீர்க்கமான ஆலோசனைக்குப் பிறகே கட்சி எந்த நடவடிக்கையையும் எடுக்கும்.

ஃ

ஆர். பி. கண்ணன், புதுவட்டகொடை

கே: சனநாயகத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்

ப: சனநாயகம் ரப்பரைப் போன்றது. தனக்குத் தேவையான அளவு ஒவ்வொருவரும் அதனை இழுத்துக்கொள்ளலாம். சர்வாதிகாரம் போன்று திட்டவட்டமாக அதனை வியாக்கியானம் செய்ய முடியாது. பணநாயகத்துக்கு மதிப்பளிக்காமல் சனங்களின் கருத்தை ஏற்று, சனங்களின் நாயகம் (தலைமை) நிலவச் செய்வதே உண்மையான சனநாயகம் என்பது என் கருத்து.

கே: ராஜரத்தினா பாராளுமன்றத்தில் இல்லாததால் இனிமேல் இந்தியத் துவேசப் பேச்சே இருக்காதல்லவா?

ப: ராஜரத்தினா மாறிவிட்டார். திருமதி ராஜரத்தினா தேசிய ஆட்சியில் பதவி ஏற்றிருப்பதால் அவரது கொள்கையும் மாறியுள்ளதாம். அவரில்லாவிட்டல் என்ன? இந்தியத் துவேஷத்தைக் கிளறிவிடத்தான் ஆர். ஜி. இருக்கிறாரே!

கே: இ. தொ. காங்கிரசில் பிளவு ஏற்பட்டதேன்?

ப: ஒரு ஸ்தாபனத்தில் இரு தலைமைகள் இருக்க முடியாததால்.

ஃ

எஸ். கே. அருணாசலம், கொக்குவில்.

கே: பொதுத் தேர்தலின் பின் தூங்கிக் கொண்டிருந்த தமிழ் காங்கிரசார் இப்பொழுது சுறுசுறுப்பாக இருக்கிறார்களே, காரணமென்ன குயுக்தியாரே?

ப: இருப்பவர்களை இறந்துவிட்டார்கள் என்று கூறுகின்ற அளவிற்கு அவர்கள் சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்கி விட்டார்கள். கடந்த வாரம் ஒரு பிரமுகர் இறந்து விட்டதாக காங்கிரசார் கதையைக் கட்டி விட்டதாகவும், அதை நம்பிய பொது மக்கள் பலர் வானொலி செய்தி ஒலிபரப்பைக் கேட்ட பின்னரே நிம்மதியடைந்தார்களாம். இத்தனைக்கும் காரணம் ஒரு தொகுதியில் அவர்கள் இடைத் தேர்தல் ஒன்றை எதிர்பார்த்திருப்பதே. முடிவில் இவர்கள் இலவுகாத்த கிளியாக ஏமாறுவார்கள் என்பதை நான் சொல்லியா நீங்கள் தெரிய வேண்டும்.

ஃ

எஸ் கே. ராஜா, களுவாஞ்சிக்குடி

கே: உடலழகு அமைந்து விட்டால் பெண்களுக்கு அகங்காரம் பிறந்துவிடுகிறதே!

ப: அகங்காரம் கூடாது. பெருமிதம்கொள்ளலாம். தனது அழகையிட்டு தான் பெருமிதமடைவதில் தவறில்லை.

கே: தற்போதைய பத்திரிகைகளெல்லாம் தேசிய அரசாங்கத்தை ஆதரித்து, அதன் குற்றம் குறைகளைப் பிரசுரிப்பதில்லையே! ஏன்?

ப: கூட்டரசாட்சிக் குழு அரசாங்கத்தைக் கைப்பற்றியிருந்தால் அவர்களின் முதலாவது மசோதா ஏரிக்கரைப் பத்திரிகைகளைத் தேசியமயமாக்குவதாகத் தான் இருக்கும். தேசிய அரசாங்கம் வந்ததால் பத்திரிகைகள் பிழைத்தன. எனவே அவை அரசாங்கத்தின் குற்றங்குறைகளையும் தவறுகளையும் மறைக்கின்றன. அதனால் அவை அரசாங்கத்துக்குத் தீமையே செய்கின்றன என்பதை அவை தெரிந்துகொள்ளவில்லை. இப்பத்திரிகைகளின் போக்கு அரசாங்கத்தின் மீது மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட வழி சமைக்கிறது.

கே: சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோல்வியடைந்ததையிட்டு சூ ஏன், லாய் கவலைப்படுகிறாராமே?

ப: அவர் ஏன் கவலைப்பட வேண்டும்? தேசிய அரசாங்கம் சீன உறவில் மாற்றங்கள் செய்யவோ, சீனத் தூதராலய அந்தஸ்தில் மாற்றங்கள் செய்யவோ முன்வரவில்லையே. சீன உதவிகளும் முன்போல வந்துகொண்டிருக்கின்றனவே!

ஃ

சுதந்திரப்பிரியன், அளவெட்டி

"மானமுள்ள தமிழ்ச் சாதி" என்று மேடைக்கு மேடை கூறிய திரு. பொன்னம்பலம் தற்போது பாராளுமன்றத்தில் ஆங்கிலத்திலே உரை நிகழ்த்துகிறாரே இதன் மர்மம் என்ன?

ப: ஆங்கில மோகம் இன்னும் அவரைக் கைவிடவில்லை. மக்களிடமிருந்து பிரிந்து தனியோர் ஆடம்பர உலகில் வசிக்கும் தமிழர் பலருக்கு ஆங்கிலமே தாய்மொழி—தமிழ் அவர்களுக்கு கூலியாள் மொழி. தங்களின் வேலைக் காரர்களுடன் மட்டும் தமிழில் பேசிக்கொள்வார்கள்.

ஃ

செல்வம், பொன்னாலை

கே: தமிழரசும், தமிழ்க்காங்கிரசும் ஒன்றுபட்டாற்தான் அதிக உரிமைகள் பெறலாம் என்று உடுப்பிட்டி பா. உ கூறுகிறாரே! இதுபற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இது மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்வதற்கான ஒரு தந்திரமான பிரசாரம். தமிழரசுக் கட்சி சேர்ந்துள்ள தேசிய அரசாங்கத்தைக் காங்கிரசும் ஆதரித்து நிற்கிறதே! இதைவிட வேறு எப்படி ஒன்றுபடுவது? இந்த ஒற்றுமைப் பிரசாரம் அந்தரங்க சுத்தியுடன் செய்யப்படுவதல்ல.

ஃ

கணேஷ், காரைதீவு

கே: நான் ஒரு பெண்ணை நேசிக்கிறேன். அவளும் என்னை நேசிக்கிறாள் ஆனால் இதனை என் பெற்றார் நிராகரிக்கின்றனர். இதற்கு நான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

ப: முதலில் நிராகரிப்புக்கான காரணங்களை கண்டறியுங்கள். அக்காரணங்களை முறியடிப்பதற்கான சமாதானங்களையும் நண்பர்களின் உதவியுடன் கண்டுபிடியுங்கள். பின்னர், பெற்றோர் யார் பேச்சுக்குச் செவி சாய்ப்பார்களோ, அவரை அணுகி அவரிடம் சாங்கோபாங்கமாக விடயங்களை எடுத்துக் கூறி, அவரைக் கொண்டு பெற்றோருக்குச் சொல்லுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இது ஒரு வழி!

ஃ

தமிழகன், மந்திகை

கே: தியாகசீலர்களாம் தமிழரசாரையும் சுயநலப் புலிகளாம் காங்கிரஸாரையும் ஒன்று சேர்த்தால் எப்படி இருக்கும்?

ப: தியாகமும் சுயநலமும் ஒன்று சேரமுடியாதே! இரண்டும் ஒன்றுக்கொன்று மாறானவை. சுயநலத்தைக் கைவிட்டாலன்றி தியாகம் செய்யமுடியாதே!

தேவை

இன்ஷூரன்ஸ் துறையில் தொழில் வாய்ப்புகள் உண்டு. தொழிலற்ற இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

விபரங்களுக்கு
விண்ணப்பிக்கவும்
இன்ஷூரன்ஸ்,
மே/பா சுதந்திரன்.

'எமது தோல்வி தற்காலிகமானதே

—திருமதி சிறிமாவோ

நிரந்தர தோல்விக்கு இடமிருக்கிறது என்கிறீர்கள் போலும்.

"முதன் முறையாகச் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை ஆட்சி செய்கின்றனர். இந்நிலை நீடிக்க பௌத்தர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள்"

—டாக்டர் என். எம்.

இதுதான் பேராசிரியர் லாஸ்கியிடம்படித்த டிராக்ஸியவாதமாகும். இந்த மகத்தான உண்மையைக் கண்டுபிடித்ததற்காக மேலும் ஒரு கலாநிதிப் பட்டம் தங்களுக்குக் கிடைக்கலாம்.

"நாம் இனத் துவேசத்தைக் கிளப்பவில்லை'

—திரு பீட்டர் கெனமன்

'அரசாங்கக் கட்சியினர் இந்நாட்டைத் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரசிற்கும் விற்று விட்டார்கள்' என்று பாராளுமன்றத்திலேயே பகிரங்கமாகக் கூறினீர்களே; அது எந்த வேசமோ?

"வெளி நாட்டு உள்நாட்டுச் சுயநலவாதிகளின் உதவியுடன் அதிகார பீடத்திலிருந்து வந்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி."

—திரு. சண்முகதாசன்

தாங்கள் சீனாவின் சுயநல வாதத்திற்காக இலங்கையில் இயக்கம் வளர்க்கிறீர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? நீங்கள் கூறிப்பிடும் வெளி நாட்டு சுயநல வாதிகள்



என்ற பதத்திற்குள் சீனாவிற்கு இடங்கிடைக்கவில்லையென்று வயிற்றில் அடித்துக் கொள்கிறீர்கள். இல்லையா?

'மந்திரிப் பதவியை ஏற்க மறுத்தேன்'

—திரு. ஜீ. ஜீ.

ஆமாம்! எட்டாத பழம் புளிக்கத்தானே செய்யும். இல்லையா?

'என்னை எவரும் பதவியைக்காட்டி விலைக்கு வாங்கிவிட முடியாது'

—திரு. ஜீ. ஜீ.

தமிழ் பேசும் மக்களின் நினைவாற்றலைச் சோதிக்க இது ஒரு பரீட்சை போலும். தமிழ் பேசும் மக்கள் கடந்த கால வரலாற்றை அவ்வளவு கெதியாக மறந்துவிட மாட்டார்கள்.

'நாம் நிலையைச் சரியாகப் பயன்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சியினரும் நாமும் ஒற்றுமைப்பட வேண்டும்'

—திரு. மு. சிவசிதம்பரம்

இதை யாருக்குச் [illegible] தீர்கள்? உங்கள் ஆயுட் காலத் தலைவருக்கா? அல்லது வேறு யாருக்குமா?

'ஒப்பந்த விபரத்தைக் கேட்பது வகுப்புவாதமா?'

—யாழ், ஜி எச் ரதனவீரா

விபரம் கேட்பது வகுப்புவாதமல்ல, அந்த விபரத்தைக் கேட்கும் நோக்கந்தான் வகுப்புவாதம். விபரம் கிடைத்ததும் அதன் அடிப்படையில் வகுப்புக் கலவரத்தைக் கிளறி விடலாம் என்ற நோக்கத்துடனேயே விபரம் கேட்கிறீர்கள்.

'ஸமசமாசக் கட்சித் தலைவர்கள் தமிழ் மக்களின் விடயத்தில் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ளவில்லையா?'

—திரு. பி. நாகலிங்கம்

ஆமாம். அவர்கள் 'நல்லெண்ணத்'துடன் தான் யார் தலையில் 'நல்லெண்ணெய் மணக்கிறது' என்று தேடுகிறார்கள்.

'தமிழினத்திற்காக நாம் தனித்தாவது பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும்போராடியே தீருவோம்'

— திரு. மு. சிவசிதம்பரம்

பழைய தொடர்பின் நினைவா? அல்லது பொறுத்தது போதும் என்று 'பொன்னர்' பொங்கியெழுந்து விட்டாரோ?

'தமிழரசுக் கட்சியினர் நம்முடன் ஒற்றுமைப்பட வேண்டும்.'

—திரு. மு. சிவசிதம்பரம்

ஆறு கடலுடன் கலப்பதா? [illegible] யோடு ஒன்றியது?

காலம் சரியில்லை என்ற கவலையா?

அல்லது!

★ வாழ்க்கையில் நினைத்த காரியங்கள் நிறைவேறவில்லை என்ற நினைப்பா?

★ எதுவானால் என்ன! எல்லாக் காரியங்களையும் தெய்வ பலத்தினாலும்

★ மந்திர சக்தியினாலும் நிவாரணஞ் செய்து கொடுக்கப்படும்.

இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது.

பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி

பி. எம். திசாநாயக்க,

அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம், கம்பளை.

தொலைபேசி : 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தொழிலாளரின் மே தின விழா

## கற்காலத்தை நாடினர் கார்ல்மார்க்ஸ் வாதிகள்

## வட-கிழக்கில் விழாக் கோலம்

மே முதல் நாள் காலை யாழ்ப்பாண நகரத்தைப் பார்த்தவர்கள் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு ஏதாவது அங்கு நடைபெற இருப்பதாக முடிவு கட்டியிருப்பார்கள். பார்க்குமிடமெல்லாம் நீக்கமறப் பறந்துகொண்டிருந்த மூவர்ணக் கொடிகள் யாருக்கும் த. அ. கட்சியின் தேசிய மாநாட்டைத்தான் ஞாபகப் படுத்தியிருக்கும்.

நகரத்தில் உள்ள வாடகை வண்டிகள் சுமார் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு மூவர்ணக் கொடிகளை தாங்கிய வண்ணம் ஓடிக் கொண்டிருந்தன. இந்தக் காட்சி அன்று மாலை நடைபெற்ற மொழிவழித் தொழிற் சங்கங்கள் - த. அ. வாலிப முன்னணியினரின் பிரமாண்டமான மே நாள் ஊர்வலத்திற்கு காலையிலேயே 'களை' கொடுக்கத் தொடங்கிவிட்டது!

இந்த ஆண்டு மொழிவழித் தொழிற் சங்கங்களது மே நாள் ஊர்வலங்களும் கூட்டங்களும் ஐந்து முக்கிய பட்டினங்களில் ஏககாலத்தில் நடைபெற்றிருக்கின்றன.

### ஒன்பதின்மர் எழுந்தருளினர்

மூன்று ஆண்டுகளுக்குமுன் மொழிவழித் தொழிற் சங்கங்களும் தனது சார்பு இயக்கங்களும் மே நாள் விழா கொண்டாடிய பொழுது, இடதுசாரித் தோழர்கள் — கம்யூனிஸ்ட் சமசமாஜிஸ்ட் நண்பர்கள் கேலி பேசினார்கள். 'இவர்களாவது மேநாள் கொண்டாடுவதாவது. மே நாள் எங்கள் தனியுரிமை' என்றார்கள்.

'மே நாள் எங்கள் தனியுடைமை' என்று சொந்தம் கொண்டாடிய பொதுவுடமை வாதிகளால் இம்முறை மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் மே நாளை கொண்டாட முடியவில்லை! வெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்டார்கள்! திருகோணமலையில் மே நாள் கூட்டம் வைக்க அரசாங்க லிகிதர் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி படுதோல்வியில் முடிந்தது. எண்ணி 9 பேர் மட்டும் கூட்டத்துக்கு 'எழுந்தருளியதால், கூட்டம் கைவிடப்பட்டது.

தமிழ் பிரதேசங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டும் இடதுசாரிகளால் மேநாள் ஒப்புக்கு கொண்டாட முடிந்தது. அங்கிருந்தும் அடுத்த ஆண்டு பின்வாங்கிவிடுவார்கள் என்று நம்பலாம். அப்படிப் பின்வாங்கவைப்பது தமிழ் பேசும் தொழிலாளர்கள் ஒவ்வொருவருடைய கடமை.

### சோசலிசம் இங்கே தோசை வடை அங்கே

யாழ்ப்பாணத்தில் மொழிவழித் தொழிற் சங்கங்கள் — த. அ. வாலிப முன்னணி இவற்றின் கூட்டு மே நாள் ஊர்வலம் சென்ற ஆண்டை விட மிகப் பிரமாண்டமாக அமைந்திருந்தது. ஒரு முக்கியமான அம்சம் - திருப்பம் என்னவென்றால் ஊர்வலத்தில் தொழிலாளர்கள் மட்டுமல்ல - ஆயிரக்கணக்கான கமக்காரர்களும் கலந்துகொண்டார்கள். எனவே ஊர்வலமும்-அதைத் தொடர்ந்து நடந்த கூட்டமும் தொழிலாளர்கள் - கமக்காரர்களது ஐக்கியத்தைப்பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. எதிர்காலத்தில் இந்த ஒற்றுமை - உறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்பதில ஐயமில்லை.

ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், நூற்றுக் கணக்கான மாட்டுவண்டிகளும், ஈருருளிகளும், வாடகை வண்டிகளும் பங்குபற்றின. ஒவ்

**தாமரைமணாளன்**

வொரு வாகனங்களிலும் மூவர்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன.

'எமது மார்க்சியவாதிகள் அசல்வகுப்புவாதிகள்' 'சோசலிசம் இங்கே — தோசை - வடை அங்கே' 'எமது இலட்சியம் இணைப்பாட்சி' 'நீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் வாலிபர்கள் ஏறு நடைபோட, 'இன்றைய கென்மன் அன்றைய குணசிங்கா' 'மக்கள் கோரிக்கை இருபத்தொன்று - மந்திரிப் பதவி எலும்புத்துண்டு' 'மொழிவழி பிரிவோம் — உரிமைகள் பெறுவோம்' என்ற முழக்கங்கள் வானைப் பிளக்க ஒரு மைலுக்கு மேலான ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. தெருவின் இருமருங்கிலும் குழுமியிருந்த மக்களுக்கு ஊர்வலம் பெருவிருந்தாக அமைந்திருந்தது என்பதை அவர்களது புன்னகை பூத்த முகங்கள் எடுத்துக்காட்டின. பல இடங்களில் வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

### 'தோழர்கள்' முழித்தனர்

ஊர்வலத்துக்கு முன்னணியில் பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைரத்தினம், தமிழ் அரசு வாலிப முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. சின்னத்துரை, அ. ஏ. சங்க பொதுச் செயலாளர் வே. தங்கவேலு, யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் திரு. வித்தியானந்த சர்மா, திரு. முத்துலிங்கம் மற்றும் தொழிற் சங்க வாலிப முன்னணிப் பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

கோப்பாய் பா. உ. திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள் ஊர்வலத்தின் நடுவில் வந்த மாட்டுவண்டிகளில் ஒன்றின் மேல் 'பவனி' வந்தார்.

மாவிட்டபுரம், தெல்லிப்பளை, உடுவில், நெல்லியடி வாலிப முன்னணிக் கிளைகள் தங்கள் கொடியோடு ஊர்வலத்தில் வந்தார்கள்.

காங்கேசன்துறை தமிழ் பேசும் சசசேவைத் தொழி[illegible] தங்கள் [illegible] உரிமை முழக்கமிட்டுக் கொண்டு வந்தார்கள்.

மண்டைதீவு த அ வாலிப முன்னணி கிளை 20 மாட்டு வண்டிகளோடு ஊர்வலத்தில் கலந்துகொண்டது. இதை திரு பாலசிங்கம் ஒழுங்குசெயதிருந்தார்.

தமிழ் பேசும் பொதுமக்களுக்குப் பெருவிருந்தாக அமைந்திருந்த எழில் ஊர்வலம் கம்யூனிஸ்ட் - சமசமாஜிஸ்ட் தோழர்களுக்கு கசப்பான மருந்தாக இருந்திருக்க வேண்டும்.

அவர்களது ஊர்வலம் — கூட்டம் இரண்டையும் பார்த்தவர்களுக்கு 'ஐயோ பாவம்' என்ற பரிதாப உணர்ச்சிநிச்சயம்பிறந்திருக்கும். வழக்கமாக அவர்களிடம் காணப்படும் எழுச்சியோ-வேகமோ துளிகூடத் தென்படவில்லை. 'பூமாலை போட்டு கோவிலுக்குப் பலியிட இழுத்துச் செல்லும் ஆடு விழிப்பது போன்று தோழர்கள் முழித்துச் கொண்டு போனார்கள்.

### கையாலாகாதவர்கள்

தென் இலங்கையில் அவர்களது குருமார்கள் சக்கும் இனத்துவேசத்தின் நெடில் அவர்களது உள்ளங்களை கலக்கி, சிந்தனையைக் குளப்பியிருக்க வேண்டும். இருந்தும் பழக்க தோசத்தால் 'மதவாளித்துவ தமிழரசு ஒழிக' என்று தங்களது கிளிப்பிள்ளைப் பாடத்தை ஒப்படைத்துக் கொண்டு, பொம்மைகள் மாதிரிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இந்த அப்பாவித் தொழிலாளர்களை 'சுரண்டி' அரசியல் வியாபாரம் நடாத்தும் தொழிலாளத் தலைவர்களுக்கு மொழி வழித் தொழிற் சங்கங்களது ஊர்வல எழிலையும், தங்களது ஊர்வலத்தின் 'கண்றாவியை'யும் பார்த்து பொறுமையால் உடம்பும்-வயிறும் பற்றி எரிந்திருக்க வேண்டும். அதன் எதிரொலிதான் தெருவில் கிடந்த கற்களிடம் தஞ்சம் புகுந்தார்கள். பாவம் விஞ்ஞான மார்க்சியதத்துவத்தை ஆளக்குழி தோண்டி நீளப்புதைத்துவிட்டு தோழர்கள் 'கற்காலத்துக்கு' பின் வாங்கிவிட்டார்கள்.

கம்யூனிஸ்ட் - சமசமாஜிஸ்ட் கூட்டத்தைப்பற்றி ஒரு முதியவரின் தீர்ப்பு: பழைய பஸ் ஸ்ராண்டில் கொஞ்சம் சர்க்கரை கொட்டுண்டு போச்சு அதை மொய்த்துக் கொண்டு சில ஈக்கள் நிற்கின்றது!'

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியாவில் நடந்த மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேநாள் ஊர்வலங்களும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

மட்டக்களப்பில் உறுமி மேளம், சிலம்பு ஊர்வலத்தில் சிறப்பான அம்சங்களாக விளங்கியது. மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை, அ. எ. வி. சங்கத்தலைவர் திரு. கோடீசுவரன் மற்றும் கிளைச் செயலாளர் திரு. அ. புவனேசன், ஆசிரியர் திரு. வணசிங்க, திரு. பாலசிங்கம், திரு. பேதுருப்பிள்ளை முதலியோர் ஊர்வலத்துக்கு தலைமைதாங்கிச் சென்றனர். பதினைந்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

### திருமலையில்

திருகோணமலையில் நடந்த ஊர்வலத்தில் நகரசுத்தித் தொழிலாளர்கள் ஏராளமாகக் கலந்துகொண்டார்கள். மாலை 4 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் 6 மணிக்கே திடலை அடைந்தது. திருகோணமலை பா. உறுப்பினர் திரு. மாணிக்கராசா, அ. எ. விளைஞர் சங்க பிரமுகர்கள் திரு. கணேசன், திரு சிவலிங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்க பொதுச் செயலாளர் திரு. கனகரத்தினம் முதலியோர் ஊர்வலத்துக்கு முன்னணியில் நின்றனர்.

இங்கு நடந்த மேதின விழாவின சிறப்பு அம்சம் ஒரு நகரசுத்தி தொழிலாளியான திரு. காசி அவர்களே கூட்டத்துக்குத் தலைமைதாங்கி நடாத்தியது.

### வவுனியாவில்

மேநாள் விழா வவுனியாவில் இம்முறையே முதல்முதலாகக் கொண்டாடப்பட்டது. அதற்குரிய பெருமை அ. எ. வி. சங்க பிரமுகர் திரு. பீட்டரைச் சார்ந்ததாகும். ஊர்வலத்தில்மாட்டு வண்டிகள் இடம்பெற்றன.

நியாயவாதி ஆலாலசுந்தரம், மன்னார் கரவைக் கிளான் திரு. கைலாசபிள்ளை, திரு. வின்சந், திரு. செல்லசாமி முதலியோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றினர்.

திரு இ. இராமநாதன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

சென்ற இரண்டு ஆண்டுகளை விட இவ்வாண்டுநடந்த மொழிவழித் தொழிற்சங்கங்களின் மேநாள் விழா எழிலோடும்—பொலிவோடும் கொண்டாடப்பட்டாலும், இன்னும் பல தமிழ் பேசும் தொழிலாளர்கள் இடதுசாரிகளது பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை மறப்பதற்கில்லை. அவர்களை அவர்களது பிடிக்குள் இருந்து விடுவித்துக்கொண்டு எங்களது அணிக்குள் கொண்டு வருவதே தமிழ்பேசும் தொழிலாளர்களது தலைமைப்பீடத்துக்குரிய அவசர—அவசியமான பணியென்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மொழிவழி தொழிற்சங்கத் தலைவர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பவேண்டும்.

### 'முற்போக்கின்' முரண்பாடு

தென் இலங்கையில் அசல் வகுப்புவாதத்தின் உறைவிடமான சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி—பண்டார நாயக்காவின் தலைமையில் கம்யூனிஸ்ட்—சமசமாசிஸ்ட் கட்சிகள் மேநாள் கூட்டம் நடாத்துகிறது அதுமட்டுமல்ல கம்யூனிஸ்ட்—சமசமாசிஸ்ட்—எஸ். எல். எவ். பி. கட்சிகளது ஆதிக்கத்துக்குள் இயங்கும் தொழிற்சங்கங்கள் கடந்த பல ஆண்டுகளாக ஐக்கிய முன்னணி அமைத்து இயங்கிவருகின்றன.

அதே நேரத்தில் வடக்கில்மட்டும் கம்யூனிஸ்ட்-சமசமாசிஸ்ட் கட்சிகள் தங்களது ஆதிக்கத்துக்குள் இருக்கும் தமிழ்பேசும தொழிலாளர்களை தமிழரசு சார்புடைய தமிழ்பேசும் தொழிலாளர்களோடு அரசியல் நோக்கோடு மோதவைத்து வேடிக்கைபார்க்கிறார்கள்,

(9-ம் பக்கம் பார்க்க)


மங்கையர் விரும்பும் மகோன்னத
'மினேர்வா'
சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த
தையல் மெஷின்
இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



MINERVA
நுண்ணிய தயாரிப்பு, நாகுக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக்கொள்ளலாம்.
புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.
சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
5|6, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு—0
டெலிபோன் : 4261-2, 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் இலங்கையர் மயமாக்கும் கொள்கை தளரும்

—————°°—————

## சிங்கள ஏடு தரும் தகவல்

## நிந்தகம் ஒழிப்பால் சீமாட்டியின் 30,000 ஏக்கருக்கு ஆபத்து

'நிந்தகம் என்று கூறப்படும் நிலப்பிரபுத்துவ முறையை ஒழித்து விடுவதாக டட்லி அரசாங்கத்தின் அரியணை உரையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியும் குப்பைக் கூடையில் போடப்பட்டு விட்டது.

இதற்குக் காரணம், நிந்தகம் முறை ஒழிக்கப்பட்டால் பிரபுத்தவ சீமாட்டியும், பெல்மதுல்ல தொகுதியில் யு. என். பி. மாதுர் சங்கத் தலைவியுமான திருமதி சிதா சேனவரத்னவுக்கு பலத்த அடிவிழும் என்பதே.

இந்நாட்டில் சுமார் 60,000 ஏக்கர் நிலம் நிந்தகம் முறையின் கீழ் உள்ளது. இதில் பாதிக்குமேல் திருமதி சிதா சேனவரத்னவுக்குச் சொந்தமானது என்பதை அரசாங்கம் இப்பொழுது கண்டு பிடித்துள்ளது. திருமதி சிதா சேனவரத்ன காலஞ்சென்ற ஏ. எப். மொலமுரேயின் புதல்வியாவார். அவரது மரணத்தின் பின் சுமார் 30,000 ஏக்கர் நிலத்தைக் கொண்ட இந்த நிந்தகம் திருமதி சிதா சேனவரத்னவுக்கு சொந்தமாகியுள்ளது.

அவருடைய நிலங்களைப் பாதுகாப்பதற்காக நிந்தகம் ஒழிப்புத் திட்டத்தை ஐஸ் பெட்டிக்குள் போட்டிருப்பதற்கு 'டெய்லி நியூஸ்' பத்திரிகை 27-4-65ந் திகதி கிழக்காணும் சமாதானத்தைக் கூறியது.

'நிந்தகம் நிலங்களை அளந்து முடிப்பதற்கு பத்து வருடங்களாகும். அதற்கு ரூ. 2,00,0000 செலவாகும்.'

இச் செய்தியிலிருந்து நிந்தகம் ஒழிப்புத் திட்டம் அமுல் நடைபெறாது என்பது தெளிவாகிறது.

இது பொய்ச் செய்தியாகும். நிந்தகம் நிலங்களை அளக்க வேண்டிய அவசியம் கிடையாது. பழைய யு. என். பி. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிந்தகம் கமிசனின் அறிக்கையில் இது பற்றிய சகல விபரங்களும் அடங்கியுள்ளன'.

—எத்த (29-4-65)

### யாழ்ப்பாண அரசாங்க அதிபர்

'யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் சிங்கள பௌத்தரான திரு. நெவில் ஜயவீராவை அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றி விட்டு, அந்தப் பதவிக்கு ஒரு தமிழரையோ ஒரு கத்தோலிக்கரையோ நியமனம் செய்ய யு. என். பி - சமஷ்டி கூட்டரசாங்க எம். பிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது'.

—ஜனசத்திய (2-5-65)

### இரகசிய பேச்சு நடத்த வருகிறாராம்

'அண்ணாதுரை தலை வரவிடாதீர் என்ற தலைப்பின் கீழ் எத்த பத்திரிகை 27-4-65ல் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடுவதாவது:-

'கிளிநொச்சியில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டுக்குத் தி. மு. க தலைவர் திரு. அண்ணாதுரையும் உதவித் தலைவர்களான திரு. நெடுஞ்செழியன், திரு. மதியழகன் ஆகியோரும் இலங்கைக்கு வரவிருக்கின்றனர். இச்செய்தியை 'சுதந்திரன்' 25-4-65ம் திகதி வெளியிட்டுள்ளது.

சமஷ்டி எம். பி. திரு. கே. பி. இரத்தினம் இவர்களை இலங்கைக்கு அழைத்துள்ளார். தொண்டமான்களாலும், சமஷ்டி வாதிகளாலும் ஏற்பட்டுள்ள தொல்லைகள் போதாததற்கு தி.மு.க. தலைவர்களும் வருகின்றனர். திருக்குறள் மாநாட்டுக்கு

"இலங்கைப் பிரசாவுரிமை பெறும் இந்தியர்களுக்கென தனி இடாப்பு தயாரித்தல், வியாபாரத்தை இலங்கையர் மயமாக்குதல் ஆகிய இரு விசயங்கள் பற்றிய கொள்கையைத் தளர்த்தும் வரை சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்த வேண்டாம் என இந்தியப் பிரதமர் சாதநிரி இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அறிவித்துள்ளார் என அறியப்படுகிறது" என்று 'ஜனசத்திய' என்னும் சிங்கள வாரப் பத்திரிகை 2-5-65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'இலங்கைப் புதிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்ற திரு. தொண்டமான் விடயங்களை எடுத்துக் கூறியதின் விளைவாகவே இந்தியப் பிரதமர் இந்த முடிவைச் செய்துள்ளார் என்று அறியப்படுகிறது.

யு. என். பி—சமஷ்டி ஒப்பந்தத்திலும் இவ்விரு விடயங்கள் பற்றி நிவாரணம் வழங்க இணங்கியிருந்தாலும், அதனை இப்பொழுது இந்தியப் பிரதமரின் வேண்டுகோளின்படி செய்யும் ஒரு காரியமாகக் காட்டுவதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறதெனத் தெரிகிறது' என்று இப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

தென்இந்தியாவிலிருந்து இலக்கிய மேதைகள் அழைக்கப்படலாமேயன்றி இந்தியாவில் தனி திராவிடஸ்

(9-ம் பக்கம் பார்க்க)

### மீண்டும் மேளுட்டு கலாச்சாரம்

'இந்நாட்டு தேசிய கலாச்சாரம், தேசிய நடனம், தேசிய சங்கீதம் ஆகியவைகளுக்கு அந்தஸ்து வழங்கும் நோக்கத்துடன் கூட்டரசாங்கம் மேளுட்டுச் சங்கீதம் படிப்பிக்கும் ஆசிரியர்கள் நியமனங்களை அடியோடு கைவிட்டிருந்தது. ஆனால் யு என். பி—சமஷ்டி ஆட்சி ஏற்பட்டு சில வாரங்களில் அந்தக் கட்டளையை ஒழித்து விட்டனர்.

அண்மையில் வெளியான கெசட் அறிவிப்பின்படி மீண்டும் மேளுட்டுச் சங்கீதத்தை போதிப்பதற்காக ஆசிரியர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு கலப்பு சமுதாயத்தை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கம்'.

—ஜனசத்திய (2-5-65)

**சிங்கள இதழ்களில்...**

# மொழிவழித் தொழிற் சங்கத்தில் இணைய தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு அழைப்பு

—————°|°—————

## மே தின விழாவில் இ. தொ. க. தீர்மானம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மேதினக் கூட்டம் அட்டன் டன்பார் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. கழகத்துணைத் தலைவர்களில் ஒருவரும், தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும், வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு அ. அமிர்தலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். மொழிவழித் தொழிற் சங்கப்பிரதிநிதிகள் உட்பட தமிழரசுத் தந்தை செல்வநாயகம், மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் முதலானோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற ஊர்வலத்திலும், கூட்டத்திலும் பத்தாயிரக் கணக்கில் மலையகத் தொழிலாளர்கள் திரண்டு நின்றனர். அட்டன் நகர வீதிகளில் தமிழரசு மூவர்ணக் கொடிகள் பட்டொளி வீசிப்பறந்தன. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன!

"சர்வதேசத் தொழிலாளர் தினமான இன்று இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் அட்டன் நகரிலே கூடியுள்ள இம்மேதினக் கூட்டம்:—

அ. கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் சக்தி அளித்த தீர்ப்பின் பலனாக கடந்த ஒன்பது வருடங்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பல்வேறு வழிகளிலும் பறித்து வந்த சக்திகள் மீண்டும் ஆட்சி பீடம் ஏற வாய்ப்பு ஏற்படாத நிலை உருவாகியதில் திருப்திப்படுகிறது.

ஆ. தமிழ் பேசும் மக்கள் உட்பட சிறுபான்மை மக்கள் அனைவரினதும் உரிமைகள் சிலவற்றையேனும் வழங்க முன்வந்ததன் மூலம் நாட்டிலே இனவகுப்பு ஒற்றுமைக்கு வழிகோலியிருக்கும் தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இம்மேதினக் கூட்டம் மனப்பூர்வமாக வரவேற்கிறது.

அதே நேரத்தில் முற்போக்கு வாதிகளாக தம்மைக் கூறிக்கொண்டிருக்கும் சக்திகள் மாக்சிய தத்துவத்துக்கே முரண்பாடான, அருவருக்கத்தக்க முறையில் நாட்டில் வகுப்புவாதக் கிளர்ச்சிகளைத் தூண்ட முனைவதை வன்மையாகக் கண்டிப்பதோடு; இச்சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்தும் இருந்து வரும் தமிழ் பேசும் தொழிலாளர்களை மொழிவழித் தொழிற் சங்கங்களின் கீழ் ஒற்றுமைபடும்படி வேண்டுகிறது.

இ. நாட்டிலே இத்தகைய இன வகுப்பு ஒற்றுமைகள் ஏற்படுவதற்கும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கும் வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் வதியும் தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி அயராது போராடி வரும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும்,

(9-ம் பக்கம் பார்க்க)





அருந்துக

**நுவரெலியா**

இது சிறந்த பியர்

ஏனெனில்

- 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
- 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
- இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு

பேல் ஏல்

லயன் லாகர்

ஜுபிலி ஏல்

சிக்ஸ் பில்ஸனர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சி தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை

## அரியணை உரை விவாதத்தில் அமிர்தலிங்கம் முழக்கம்

**அரியணை உரைமீது நடைபெற்ற விவாதத்தில் அழகாகவும் ஆணித்தரமாகவும் பேசியவர் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் என்பதை நாடும் ஏடும் ஏற்றுள்ளது. எதிர்க் கட்சியினர் கொட்டிய வகுப்பு வாதக் கருத்துக்களுக்கு சுடச் சுடப் பதில் கொடுத்து, சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையிலிருந்த ஒப்பந்தத்தைப் பற்றியும், அவ் வொப்பந்தம் பற்றி தமிழரசுத் தந்தை பாராளுமன்றத்தில் முன்னர் பேசிய பேச்சுக்களையும் எடுத்துக் காட்டிப் பேசினார் திரு. அமிர்தலிங்கம். 1960ம் ஆண்டின் பின்னர் ஆளும் கட்சிகள் தமிழரசுக் கட்சியின் உதவியைப் பல தடவைகள் நாடியதை எடுத்துக் காட்டி, தமிழரசுக் கட்சியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் விளக்கினார். இரு தினங்களாக திரு. அமிர்தலிங்கம் பேசிய பேச்சின் விபரம் வருமாறு:**

துணைச் சபாநாயகர் அவர்களே, இச் சந்தர்ப்பத்தில் நான் ஆங்கிலத்தில் பேச விரும்புகிறேன். காரணம் எதிரிலுள்ள மதிப்புக்குரிய நண்பர்கள் நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பில் என்ன சொல்லப் போகிறேன் என்பதைத் தவருகப் புரிந்து கொள்ளாது இருக்க வேண்டும்.

### கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை

தேசிய அரசாங்கத்தின் அங்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினன் என்றமுறையில் பேச எழுந்துள்ளேன் என்பதை முதற் கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எதிரிலுள்ள மதிப்புக் குரிய உறுப்பினர்களோ அல்லது இந்நாட்டிலுள்ள எவரேனும், எமது கட்சி இந்த அரசாங்கத்தின் அங்கமாக இணைந்தமையினால் எங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுத்துவிட்டதாக எண்ணுவது தவருகும் என்பதை பகிரங்கமாக அடித்துக் கூறுகிறேன்.

இச் சபையின் முதலாவது கூட்டத்திலேயே கொழும்பு மத்திய தொகுதியின் மூன்ருவது உறுப்பினர் பிரச்சினையைக் கிளப்பியுள்ளார். ஆசன ஒழுங்குகள் பற்றிய பிரச்சினையில் அவர் கூறியவற்றை பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து படித்துக் காண்பிக்கிறேன்:

"எதிர் வரிசையில் உள்ள மதிப்புக்குரிய உறுப்பினர்கள் நாட்டை மட்டுமல்ல, எதிர் வரிசையின் ஆசனங்களையும் தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரசிற்கும் விற்றுவிட்டார்கள்"

இச் செய்தியை 'டைம்ஸ்' பத்திரிகை பிரசுரித்த பொழுது மதிப்புக்குரிய உறுப்பினர் விரைந்து சென்று மறுத்துள்ளார். உண்மையில் அன்று பிற்பகல் அவர் என்னைச் சந்தித்த பொழுது 'தான் அப்படிச் சொல்லவில்லை' யென்ருர். நான் பாராளுமன்ற பதிவேட்டைப் படித்துப் பார்த்த பொழுது பத்திரிகைச் செய்தி உண்மையாக விருந்தது. மதிப்புக்குரிய நண்பர் நிச்சயமாக அதைக் கூறியிருக்கிருர்.

மதிப்புக்குரிய கொழும்பு மத்தியின் மூன்ருவது பிரதிநிதி கூறியவற்றை எதிர் வரிசையில் பேசிய ஒவ்வொருவரும் திருப்பித் திருப்பிக் கூறியிருக்கிருர்கள். ஆனல் எதிர் வரிசையில் ஒரு நியாயமான பேச்சை நிகழ்த்திய தேவிநுவரப்பிரதிநிதி மட்டும் அதைக் கூறவில்லை.

### தம்பியின் மனநிலை

தமிழரசுக் கட்சியை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டமைக்கு எதிர்க் கட்சியினர் தெரிவித்திருக்கும் கண்டனம், தான் காதலித்துக் கடிமணம் புரியவிருந்த கன்னியை தனது மூத்த அண்ணன் கலியாணம் செய்துகொண்டதை எதிர்க்கும் வாலிபன் ஒருவனின் ஆட்சேபனையைப் போன்றிருக்கிறது. எதிர்க் கட்சியில் விற்றிருப்போரின் நினைவாற்றல் மங்கியிருப்பது போற் தோற்றமளிக்கிறது. ஆனல் நினைவாற்றலும் இச் சபையின் பதிவேடுகளும் 1960 மார்ச் தேர்தலின் பின் தமிழரசுக் கட்சியின் பின்னல் யார் ஓடியது என்பதைப் புலப்படுத்தும். 1960-ம் ஆண்டிற்குப் பின் நடைபெற்ற சம்பவங்கள் சில

# கெனமனுக்கு ஒரு சூடு

வற்றை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1960-ம் ஆண்டில் ஒரு தடவையல்ல பல தடவைகள் சுதந்திரக் கட்சி தமிழரசுக் கட்சியைக் காதலித்தது. அதை இவர்கள் மறுப்பார்களா?

திரு. பீலிக்ஸ் டயஸ்: நாம் அதை மறுக்கிறேம்?

திரு அமிர்தலிங்கம்: துணைச் சபாநாயகர் அவர்களே, 1960-ம் ஆண்டிற்குப் பின் நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிடுவது எனது கடமை.

பாராளுமன்றப் பதிவேடு தொகுதி 45 லிருந்து சில பகுதிகளை வாசிக்க விரும்புகிறேன். அன்று நடைபெற்ற சம்பவங்களின் ஒரு குறிப்பாகும் இது. இந்தப் பேச்சு மதிப்புக்குரிய காங்கேசன்துறைத் தொகுதி உறுப்பினரால் இச் சபையில் நிகழ்த்தப்பட்டு தொம்பே பிரதிநிதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். திரு. பீலிக்ஸ் டயஸ்: நாங்கள் மொழி பற்றிய கோரிக்கையை ஓரளவு ஏற்றுக் கொண்டோம்.

திரு. அமிர்தலிங்கம்: மன்னிக்க வேண்டும், நீங்கள் ஏற்றுக் கொண்டது என்ன என்பதற்கு வருகிறேன்.

திரு. பீலிக்ஸ் டயஸ்: மதிப்புக்குரிய அங்கத்தவர் திரு. செல்வநாயகத்தின் பேச்சை வாசிக்க வேண்டும். ஐயா, மதிப்புக்குரிய உறுப்பினர் இடங்கொடுத்தால் நான் விளக்க விரும்புகிறேன்.

திரு. அமிர்தலிங்கம்: நான் இடங்கொடுக்கப் போவதில்லை. மதிப்புக்குரிய உறுப்பினர் இருக்கட்டும்.

திரு. பீலிக்ஸ் டயஸ்: அப்பகுதிக்கு வர முன்னர், மதிப்புக்குரிய உறுப்பினர் 1960 மே 28ம் திகதிய 'டெயிலி நியூஸ்' பத்திரிகையை வாசிக்கட்டும்.

திரு. அமிர்தலிங்கம்: நான் இடங்கொடுக்கப் போவதில்லை.

திரு. பீலிக்ஸ் டயஸ்: பின்னர் நாங்கள் உமக்குப் பதில் கொடுப்போம். நீர் திரு. செல்வநாயகத்தின் அறிக்கையை 1960 மே 28ம் திகதிய 'டெயிலி நியூஸ்' லிருந்து வாசிக்கவும்.

திரு. அமிர்தலிங்கம்: நான் பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து வாசிக்கிறேன். நான் ஆரம்பத்தில் கூறியதுபோல் நீர் மதிப்புக்குரிய காங்கேசன் துறைப் பிரதிநிதியின் பேச்சை ஏற்றுக் கொண்டீர்.

திரு. பீலிக்ஸ் டயஸ்: எனது பேச்சையும் வாசிக்கவும்.

துணைச்சபாநாயகர்: மதிப்புக்குரிய உறுப்பினர் பேசட்டும்.



த. அ. தலைவர் அன்று கூறியது

திரு. அமிர்தலிங்கம்: மதிப்புக்குரிய காங்கேசன் துறைப் பிரதிநிதி —பாராளுமன்றப் பதிவேடு தொகுதி 45, கலம் 1804ல் —கூறியதாவது:

# பீலிக்சுக்கு ஒரு ஆப்பு

"அந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் எமது ஆதரவைக் கோரினர், சுதந்திரக்கட்சியினரும் கோரினர்கள். உண்மையில் நாங்கள் சுதந்திரக் கட்சியினருடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தோம். சுதந்திரக் கட்சியினர் எமது ஆதரவைக் கேட்ட பொழுது ஐ. தே. கட்சினருக்கு கூறியவற்றையே சுதந்திரக் கட்சியினருக்கும் கூறினேம். ஐ. தே. க. அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து [illegible] பினருக்கு ஆதரவு கொடுத்து [illegible] இ. தே. க. அரசாங்கத்தை அகற்றிவிட்டு சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை உருவாக்க ஆதரவு வளங்கினேம்.

"சுதந்திரக் கட்சியினர் எமது கோரிக்கை பற்றிக் கேட்ட பொழுது ஐ. தே. கட்சியிடம் கொடுத்ததையேசுதந்திரக் கட்சியினரிடமும் கொடுத்தோம்.

"சுதந்திரக் கட்சியிடம் நமது கோரிக்கையைக் கொடுத்தநேரத்தில்,சுதந்திரக் கட்சியின் சார்பில் எம்முடன் பேச்சு வார்த்தை நடாத்தியவர்கள் திருவாளர்கள் சி.பி.டி சில்வா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, ஏ. பி. ஜெயசூரியா ஆகியோராவர். முதல் நாள் திரு. ஏ. பி. ஜெயசூரியாவும், ஜனூப் பதியுதீன் மாமூத் அவர்களும் நம்மைக் கலந்து கொண்டார்கள், அதன் பின்னர் ஜனூப் பதியுதீன் மாமூத் கலந்து கொள்ளவில்லை.

'இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமான எமது மூன்ருவது கோரிக்கைக்குசுதந்திரக் கட்சியினர் இணங்க மறுத்து விட்டார்கள்.

"எங்கள் நாலாவது கோரிக்கையான குடியுரிமையற்ற மலையக மக்கள் சார்பில் —ஆறு நியமன உறுப்பினர்களில் — நால் வரை நியமன உறுப்பினர் களாக்கும் வண்ணம் கோரினேம். நாலு அதிகப் படியானது என்றும் இரு பிரதிநிதிகளை நியமிப்பதாகவும் கூறினர்கள்."

திரு. பீலிக்ஸ் டயஸ்: அடுத்த பந்தியையும் வாசிக்கவும்.

### பள்ளி மாணவன் திரு. பீலிக்ஸ்

திரு. அமிர்தலிங்கம்: மேலும்:

"எங்கள் முதலிரு கோரிக்கைசம்பந்தமாக— அவர்களை ஆட்சிஅமைக்க அழைத்தால் கொள்கை சம்பந்தமான அறிக்கையில் இவற்றைக் குறிப்பிடுவதாகக் கூறினர்கள்.

'எமது முதலாவது கோரிக்கையின்படி மாவட்ட சபைகளை அமைக்க சம்மதம் தெரிவித்தார்கள். இரண்டாவது கோரிக்கை பற்றி கொள்கை விளக்கத்தில் குறிப்பிடுவதாகக் கூறினர்கள்.எமது மொழி பற்றிய கோரிக்கையை வளங்குவதில் பிரச்சினை இல்லையென்றும்,திரு. பண்டாரநாயக்கா எங்களுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் நகல் ஒன்றைத் தரும் வண்ணமும் கேட்டுக் கொண்டார்கள்."

துணைச் சபாநாயகர் அவர்களே, இச் சந்தர்ப்பத்தில் செல்வா—பண்டா ஒப்பந்தம்பற்றிகதைக்கப்பட்டதுடன், அவர்கள் பண்டாரநாயக்காவின் கொள்கையைப் பின் பற்றவும் தயாராஞர்கள். அச் சந்தர்ப்பத்தில் அவர்களிடம் இவ் வொப்பந்தப் பிரதியிருக்கவில்லை.

திரு. பீலிக்ஸ் டயஸ்: இல்லை ஐயா.

திரு. அமிர்தலிங்கம்: ஒரு நிமிடம். மதிப்புக்குரிய தொம்பே பிரதிநிதி சரியான நேரத்தில் தான் கூறவிரும்புவற்றைக் கூறட்டும். சும்மா பள்ளிமாணவன் மாதிரி 'இல்லை ஐயா! இல்லை ஐயா!' என்று கூற வேண்டாம். மேலும் பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து:

'நான் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு ஒப்பந்தத்தின் இரு பிரதிகளை ஒரு கடிதத்துடன் அனுப்பிவைத்தேன்.'

திரு. பீலிக்ஸ் டயஸ்: முற்றிலும் சரி ஐயா!

திரு. அமிர்தலிங்கம்: அக்கடிதம் கூறுவதாவது:-

'எனது அன்பு டயஸ்'

'கடந்தவாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி திரு. பண்டாரநாயக்காவுடன் நாம் செய்துகொண்ட உடன்பாட்டின் இரு பிரதிகள் அனுப்பிவைக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

சா. ஜே. வே. செல்வநாயகம்.'

'இவை கிடைத்த நேரத்தில் திரு. டயஸ் திருமதி பண்டாரநாயக்காவுடன் இதுபற்றிக் கதைத்துள்ளார், திருமதி. பண்டாரநாயக்கா, எனக்கும் திரு. பண்டாரநாயக்காவுக்குமிடையில் உருவான உடன்படிக்கையின் உண்மைப் பிரதி ஒன்றைக் கொடுத்துள்ளார் திரு. டயஸிடம்.'

இதிலிருந்து ஒரு உண்மை புலனுகிறது. எதிர் வரிசையிலிருக்கும் மதிப்புக்குரிய எழிலரசியாரும் இப்பேச்சு வார்த்தைகளின் திரை மறைவில் இருந்துள்ளார்.

[1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி நடைபெற்ற சம்பவங்கள்பற்றி காங்கேசன்துறைப்பிரதிநிதி பாராளுமன்றத்தில் கூறியவற்றை பதிவேட்டிலிருந்து திரு. அமிர்தலிங்கம் மேலும் வாசித்தார்.]

துணைச் சபாநாயகர் அவர்களே, கூட்டுக் கட்சியினர் அன்று பாராளுமன்றத்தின் இரண்டாவது பெரிய கட்சி என்ற காரணத்தினுல் எங்களுடன் சேர்ந்து அரசாங்கத்தை உருவாக்கத் தயாராஞர்கள்.

### உடன்பாட்டை நாடேயறியும்

திரு. எம். கருணரத்ன-சமூக சேவை அமைச்சர்: அவர்கள் உங்கள்முன் முழந்தாளிட்டார்கள்.

திரு. அமிர்தலிங்கம்: அச்சம்பவம் பின்னர் நடைபெற்றது.

இவற்றிலிருந்து எங்களுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் ஒரு விளக்கம் இருந்தது வெளிப்படையாகத் தெரிகிறது. 1960 யூலையில் சுதந்திரக்கட்சி அரசாங்கம் அமைத்த பின்னர் ஒப்பந்தம்பற்றிய சில விளக்கம் கோரி திரு செல்வநாயகம் திரு. பீலிக்ஸ் டயஸ் அவர்களுக்குக் கடிதம்எழுதினர்.

[கடிதத்தைப் படித்துக் காண்பித்த திரு. அமிர்தலிங்கம், மேலும், அன்றைய நிலை பற்றி திரு. செல்வநாயகம் பேசியவற்றைப் பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து மேலும் படித்துக் காண்பித்தார்.]

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிலக்கியம் கற்க ஐந்தாண்டுத் திட்டம்

உலக நாடுகளில் மக்கள் முன்னேற்றத்துக்குப் பற்பல திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. உருசிய நாட்டில் 1917 அக்டோபரில் பெரும் புரட்சி ஏற்பட்டதால் முடியாட்சி தொலைந்து, தொழிலாளர் குடியாட்சி தோன்றியது. 45 ஆண்டுகளில் சில திட்டங்களால் நாட்டு மக்கள் இன்று நலம்மிக்க வளம் பெற்று விட்டார்கள். நம் பாரத நாடு 1947 ஆகஸ்டு திங்களில் விடுதலை ஏற்பட்டதும் 15 ஆண்டுகளில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் 45 கோடி மக்கள் ஓரளவு வாழ்வு நலம் பெற்றிருக்கிறார்கள். இளம் எழுத்தாளர்களும்—ஏன்? முதிய எழுத்தாளர்களும், வணிகர்களும், அலுவலர்களும் தமிழிலக்கியம் கற்க ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துக் கொண்டால், தமிழிலக்கியம் கற்றுக் கொள்ளலாம்; தனிமையை இனிமையாக்கிக் கொள்ளலாம்; வாழ்வையும் பண்புடையதாக்கிக் கொள்ளலாம்.

ஓரளவு அடிப்படைக் கல்வியடைந்ததும் ஒருவர் வித்துவானாக ஐந்தாண்டாகும்; பள்ளி இறுதித் தேர்வில் வாகை சூடியிருந்தால், நான்காண்டாகும். முதுகலைஞராக, இளங்கலைப் பட்டம் பெற்ற பின்பு, இரண்டாண்டாகும். ஆனால், இந்த ஐந்தாண்டுத் திட்டம் ஓரளவு அடிப்படைத் தமிழ்க் கல்வி பெற்றுத் தொழில் துறையில் ஈடுபட்டு, எழுத்தாளராக விரும்பும் இளைஞர்களுக்கும் அந்திமாலையில் இருக்கும் முதியோருக்கும், ஏற்றதாகும். 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்பது தவறான பழமொழி. திட்டமிட்டுக் கற்றால்தான் தமிழறிவு பெறுதல் இயலும்.

## தமிழ் மொழிச் சிறப்பு

தமிழ் மொழி மிகவும் தொன்மை மிக்க பெருமொழி; உயர் தனிச் செம்மொழி; திராவிட மொழிகளுக்குத் தாய் மொழி, வடமொழியின் வேறான மொழி, பேரிலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும், அறிவிலக்கியங்களையும், உணர்ச்சி இலக்கியங்களையும்கொண்ட மொழி; பக்திப் பாடல்களை மிகுதியாக உள்ள தெய்வ மொழி.

இத்தகைய தன்மை வாய்ந்த தமிழ்மொழியின் அருமை பெருமைகளைத் தமிழ்க் கவிஞர்களும் தமிழ் கற்ற ஐரோப்பிய அறிஞர்களும், நன்குஎடுத்துக் காட்டியுள்ளார்கள். மாணிக்கவாசகர் 'ஒண்திந்தமிழ்' என்றும், 'தண்ணார் தமிழ்' என்றும் பாடியிருக்கிறார். கம்பர் 'என்றுமுள்ள தென்தமிழ்' எனப் பாராட்டியுள்ளார். தஞ்சைவாணன் கோவை ஆசிரியர் 'தேருந்தொறும் இனிதாந் தமிழ்' என்றார். திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் 'மன்னிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப்படக்கிடந்தா எண்ணவும் படுமோ'? என்று பாடினார். வேறொரு கவிஞர் 'தன்நேரிலாத் தமிழ்' என்றார்.

பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார். வின்சுலோ என்ற ஐரோப்பிய அறிஞர், 'செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியினையும் வெல்ல வல்லது தமிழ் மொழி' என்றார். டெய்லர் என்பவர் 'அது(தமிழ்) நிறைந்து தெளிந்து ஒழுங்காகியுள்ள மொழிகளுள் மிகவும் சிறந்த தொன்றாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். டாக்டர் போப் பாதிரியார், 'தமிழ் மொழி எம்மொழிக்கும் இழிந்த மொழி அன்று' என்றார். மொழி நூலறிஞர் கால்டுவெல் 'தமிழ்பண்டையது; விரும்பினால் வடமொழி உதவியின்றி இயங்கவல்லது' என்றுதமது திராவிடமொழி ஒப்பிலக்கண நூலில் குறிப்பிட்டிருக்கிறார், கிரியர்சன் என்ற மொழிநூலறிஞர் 'திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும், பெருவளம் பொருந்தியதுமாகும்; மிகவும் சீர் திருத்தியதுமான உயர் தனிச் செம்மையுமாகும்; செல்வ வளமும் மிகுந்தது; அளவிடவொண்ணாப் பண்டைக் காலம் முதல் பயின்றும் வருவது' என்றார். யான்மரிடாக் என்பவர் 'சீரிய மொழியாயும் அழகிய இலக்கியங்கள் உள்ளதாயும், விளங்குவது தமிழ் மொழியே' என்றார். கெல்லட் என்பார் 'எந்த நாட்டினரும் பெருமை கொள்ளக்கூடிய இலக்கியம் தமிழிலக்கியம்' என்றார்.

பைந்தமிழ்ப் பாவலர்
**அ. கி. பரந்தாமனார் எம்: ஏ.**

வடமொழி மறைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மாக்சுமுல்லர் 'தமிழ் மிகப் பண்பட்ட மொழி தனக்கே உரியதாக இயல்பாய் வளர்ந்த சிறந்த இலக்கிய செல்வமுள்ள மொழி' என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழிலக்கணமும் இலக்கியமும்

இப்படித் தமிழ்க் கவிஞர்களாலும் தமிழ் கற்ற ஐரோப்பிய அறிஞர்களாலும் பாராட்டப்பட்டு எத்திசையும் புகழ் மணக்க இருந்து வரும் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் ஒல்காப் புகழ்மிக்க தொல்காப்பிய இலக்கணமும் பின் நூல்களுள் என்றாலும் இதற்கு இணையுண்டோ என்று பாராட்டப்படும் நன்னூல் இலக்கணம் முதலிய அரிய இலக்கண நூல்களும் எட்டுத் தொகை பத்துப் பாட்டு, பதினென் கீழ்க்கணக்கு முதலிய சங்க இலக்கியங்களும், ஐம்பெருங் காப்பியங்களும். ஐஞ்சிறு காப்பியங்களும், தேவார, திருவாசக, நாலாயிரப்பிரபந்த, அருட்பாடல்களும் தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், திருவருட்பா முதலிய பாடல் நூல்களும், கோவை, உலா, கலம்பகம், பள்ளு,குறவஞ்சி, மடல் முதலிய சிற்றிலக்கியங்களும், இராமாயண-பாரத இலக்கியங்களும், பெரிய புராணம், கந்தப்புராணம்,திருவிளையாடற் புராணம், தணிகை புராணம், முதலிய புராண இலக்கியங்களும், யாப்பிலக்கண நூல்களும் பற்பலவகையான உரைநடை நூல்களும் உள்ளன.

இவையனைத்தையும் ஒருவர் கற்பது என்பது கடினமானது. இவையனைத்தையும் கற்றார் ஒருசிலரே இருப்பர். புலவர் பெரு மக்களே இவற்றுள் பெரும்பாலனவற்றைக் கற்பார்கள். இவற்றைக் கற்க வாழ்நாள் முழுதும் போதாது என்றால் மிகையாகாது.

## பண்டைமுறை

தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற விரும்பினவர்கள் குருகுல முறையில் வரிசையாகத் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப் புலமை பெற்று விளங்கினார்கள்; ஆத்திசூடி, கொன்றை வேந்தன் படித்து, அந்தாதி, கலம்பகம், சதகம் படித்து, நிகண்டு படித்து, கிருஷ்ணன் தூது படித்து, சிற்றிலக்கணம்படித்து, நன்னூல் படித்து, தொல்காப்பியம் படித்து, அகப்பொருள் புறப்பொருள் தெரிந்து, தண்டியலங்காரம் படித்து, காரிகை படித்து, யாப்பருங்கல விருத்தி படித்து, கவிபாடத் தொடங்கி, சங்க இலக்கியம் படித்து, இராமாயணம் படித்து, வில்லி பாரதம் படித்து மொழித் தேர்ச்சி பெற்றார்கள். அண்மைக் காலம் வரையில் ஓர் ஆசிரியரை அடுத்துப் பாடம்கேட்பது மரபாய் இருந்தது. ஆசிரியர்களும் தம்மிடம்அடுத்த மாணாக்கர்களுக்குப் பணத்தாசையின்றிப் பாடம் கற்றுக் கொடுத்தார்கள்.

## இன்றைய நிலை

இன்றைய சூழ்நிலை மாறி விட்டது. அலுவல் பார்ப்பவர்களுக்கு நேரம் கிடைப்பது அருமையாய்விட்டது. நாளிதழ் படிப்பதிலும் திரைப்படம் காண்பதிலும் குடும்ப வேலைகளைக் கவனிப்பதிலும் ஒய்வு நேரம் செலவாகிறது. கல்விக்கோ கரையில்லை. கற்பவர் நாட்களோ குறைவு. ஆதலால், கீழ் வரும் நாலடியார் வெண்பா கூறுவது போன்று நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அவ்வெண்பா இது:

'கல்வி கரையில; கற்பவர்
நாள் சில
மெல்ல நினைக்கிற்
பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய
கற்பவே நீர்ஒழியப்
பாலுண் குருகின்
தெரிந்து'

இவ்வெண்பா எக்கருத்துக் கொண்டு கூறியிருப்பினும் இந்நாளில் தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கும் பொருந்தும். ஆங்கில அறிஞர் யான் ரஸ்கின் என்பார், 'ஒருவர் லண்டன் மாநகரத்து நூலகத்தில் இருக்கும் எல்லா நூல்களையும் கற்பதைப் பார்க்கிலும் ஒரு சில நூல்களை மட்டும்தேர்ந்தெடுத்து ஆராய்ந்து கற்பது நன்று' எனத் தமது 'சிமேம் அன்டு லில்லிஸ் (Sesame and Lillie's)' என்னும் சொற்பொழிவு நூலில் அறிவுரை கூறியிருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

அந்தக் காலத்தில்—ஏன்? அண்மைக் காலத்திலும் நூல்கள் மிகுதியாக வரவில்லை. ஒரு சில நூல்களே கிடைத்தன. இந்தக் காலத்தில் இலக்கியங்களும் இலக்கண நூல்களும் உரையுடன் வந்திருக்கின்றன. வந்து கொண்டிருக்கின்றன. மலிவுப் பதிப்புக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சொல்லப் போனால் உரையில்லாத நூல்களே இல்லை எனலாம். ஓரளவு அடிப்படைத் தமிழறிவுள்ளவர்கள் ஆசிரியர் உதவியின்றித் தமிழ் கற்கலாம்; கற்க முடியாது என்பதில்லை. மனத்திரித்திரம் இன்றிப் பணம் செலவு செய்து நூல்களை வாங்கித் திட்டமிட்டுப் படிக்க வேண்டும். பணத் தரித்திரம் இருந்தால், நூற்றுக்கணக்காக இருக்கும் நூலகங்களில் உறுப்பினராகி வேண்டிய நூல்களை எடுத்து வந்து கற்கலாம்.

வறுமை என்று சொல்லி வாளா இருக்கும் நிலைஇன்று இல்லை. 'இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்' என்றது தமிழ்க் கல்விக்கும் பொருந்தும். ஓரளவு பண வசதியுள்ளவர்கள் சிறிது சிறிதாக ஏறக்குறைய 300 நூல்களை வாங்கிச் சேர்த்துச் சொந்த நூல் நிலையம் வைத்துக் கொள்ளலாம்; வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொந்த நூல் நிலையம் வைத்திருப்பது குடும்பத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படும். கவிஞர்கள் நூல் வடிவில் எந்த நேரத்திலும் நள்ளிரவிலும் கூட உங்களுக்குத் தொண்டு புரியக் காத்திருப்பார்கள். அவர்கள் முணுமுணுக்காமல் தமிழறிவை அள்ளி வழங்குவார்கள்.

நூல் நிலையத்தில் நூல்களைத் தொகுத்து வைப்பதால் மட்டும் பயனில்லை, அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

'புத்தகமே சாலத்
தொகுத்தும் பொருள்
தெரியாது
உய்த்தகம் எல்லாம்
நிறைப்பினும்—
மற்றவற்றைப்
போற்றும் புலவரும்
வேறே;
பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும்
வேறு'

என்று நாலடியார் வெண்பா கூறுகிறவாறு, நூல்களைச் சேர்த்து வைத்தலினும் அவற்றைக் கற்றுணர்தலே சிறந்தது. இதற்குத் தமிழ்ப் பற்று வேண்டும், இல்லை—தமிழ் வெறியே வேண்டும். வெறி மட்டும் போதாது; பொறுமையும் விடாமுயற்சியும் வேண்டும். ஆழ்வாரும் நாயன்மார்களும் அரிதின் முயன்று பயின்றவர்களே. கம்பரும் சேக்கிழாரும் கடும் முயற்சி செய்து மொழித் தேர்ச்சி பெற்றுக் காப்பியம் இயற்றியவர்களே. இவர்கள் முறையே காளியின் கருணையாலோ தில்லைக் கூத்தப் பெருமான் சொல்லெடுத்துக் கொடுத்ததாலோ காப்பியம் இயற்றிவிடவில்லை. அருட்பிரகாச வள்ளலாரும் அரிதின் முயன்று இலக்கண இலக்கியங்களைப் பெரிதும் முயன்று கற்று ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றினார். கருவிலே அமைந்த திரு இவர்களது கவிதைத் திறனைப் பெருக்கியது. ஆதலால், விடா முயற்சியுடன் தமிழிலக்கியங்களைத் திட்டம் வகுத்துக் கற்க வேண்டும். சிலர் போலித் தமிழ்ப் பற்று மீதுரப் பெற்றுச் சிறிது படித்தும் பின்பு முயற்சி குன்றி அயர்ச்சியுற்றுப் படிப்பதைக் கைவிட்டுத் தமிழிலக்கியத்தையே குறைகூறத் தொடங்குகின்றனர். இத்தகைய போலிப் பற்றுடையார்க்குத் தமிழிலக்கியம் கற்பது முடியாது, முடியாது.

## திட்டம் வேண்டும்

தமிழிலக்கியம் கற்பதற்கு இப்போது மிகுந்த வசதி உண்டு. எழுத்தாளர்களும் பிறரும் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துத் தாமே தமிழிலக்கியங்களைக் கற்கலாம்; கற்கமுடியும். ஓரளவு அடிப்படைத் தமிழ்க் கல்வியுள்ளவர்கள் இத் திட்டத்தைக் கைப்பற்றி விடாமுயற்சியுடன் ஒய்வு நேரத்தைப் பயன்படுத்தினால் தமிழ்ப் புலமை எய்துவது எளிது.

முதலாவது சந்தி பிரித்துப் பாடல்களைப் படிக்கத் தெரிந்துகொள்ளவேண்டும். இதனை எந்தப் பள்ளிக்கூட இலக்கண நூலைப் படித்தும் தெரிந்து கொள்ளலாம். 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என்னும் நூலைப் படித்தும் அறிந்து கொள்ளலாம். பிழையறத் தமிழ் எழுதுவதற்கும் இது பயன்படும். சந்திபிரித்துப் படிக்கத் தெரிந்து கொண்டு, பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் இயற்றியுள்ள திருவரங்கத்தந்தாதியை உரையுடன் கற்கவேண்டும். திருவரங்கத்தந்தாதி அச்சடப்பிரபந்தத்திலுள்ளது. இதற்கு நல்ல உரையுண்டு. இதற்கு மலிவுப் பதிப்பும் உண்டு. இம் மலிவுப் பதிப்பில் ஒவ்வொரு செய்யுளையும் சந்தியுடனும் சந்திப்பிரிப்புடனும் அச்சிட்டிருப்பதைக் காணலாம். இதுநல்லபயிற்சியளிக்கும்.

அடுத்து முத்தொள்ளாயிர வெண்பாவை உரையுடன் கற்க வேண்டும். இதற்குப் பின்பு நல்ல உரையுடன் கூடிய திருக்குறளைக் கற்க வேண்டும். 'கற்கும்போது இது இடைச் செருகல்; இது தவறு' என்னும் ஆராய்ச்சியில் இறங்குவது தவறு. இதை அடுத்து நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைப் படிக்கவும். இதற்கு நாட்டார் உரை உண்டு. இவ்வுரையை முதலில் படிக்க வேண்டும்; பின்பு மூலத்தைப் படித்துப் பொருள் தெரிகிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்துப் பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் இயற்றிய புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலைக் கற்க வேண்டும். புறப் பொருள் என்பது பெரும்பாலும் போர்முறையைக் கூறுவது. இதைப் படித்து முடித்ததும் பேராசிரியர் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய உரையுடன் கூடிய இரு பகுதிகளாக உள்ள புறநானூற்று இலக்கியத்தைக் கற்க வேண்டும். இது பண்டைத் தமிழகத்தின் அரசர்கள், வீரர்கள், மகளிர், வீரம், அரசியல் வணிகம் இவற்றைக் கூறுவது. சிறிது கடினமாக இருப்பினும் படிக்கச் சுவையுள்ளதாக இருக்கும். புறப்பொருள் தெரிந்து கொள்ளப் புறப்பொருள் வெண்பா மாலையும் புறநானூறும் போதுமானவை.

இனி அகப்பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு டாக்டர் உ. வே. சாமிநாதஐயரவர்

(10-ம் பக்கம் பார்க்க)

## இலக்கியப் பூஞ்சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 மே மாதம் 9-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# திரு. பொன்னம்பலம் உணர்வாரா?

நீண்ட காலமாக இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பு சிங்கள வகுப்புவாதிகளின் கையில் சிக்கியதன் காரணமாக தமிழ்பேசும் மக்கள் அனுபவித்துவந்த இடர்பாடுகள் மிகப்பல. இவற்றிற்கு ஓரளவு பரிகாரம் காணக்கூடியமுறையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து நாட்டில் ஒரு தேசிய அரசை நிறுவியுள்ளது.

இரு தேசிய இனங்களுக்குமிடையில் நிலவிய வேற்றுமை சிறிதளவு மாறி ஒரு பொது அடிப்படையில் ஒற்றுமை உருவாகிவருகிறது. இத்தனைக்கும் காரண கர்த்தாக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் என்பதை அனைவரும் ஒரு முகமாக ஏற்றுள்ளார்கள். இந்த சுமுக சூழ்நிலையைச் சின்னாபின்னப்படுத்த இடதுசாரிகளும் சிங்களத் தீவிரவாதிகளும் ஒன்று திரண்டு செயற்பட்டு வருவதையும் சகலரும் அறிவார்கள்.

இந்த நிலையில் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளவேண்டும். குறிப்பாக இப்பணியில் தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை பகுத்தானதாகும்.

தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவ இயக்கமான இலங்கைத் தமிழரசுக்கட்சியோ அல்லது ஏனைய தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களோ மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். இவர்கள் தெரிவிக்கக் கூடிய ஒவ்வொரு கருத்தும் ஆழ்ந்த சிந்தனையின் பின்னரே வெளியிடப்படவேண்டும். தேர்தல் காலங்களில் பேசுவதுபோன்று இச் சமயத்தில் நடந்துகொள்வது பாரதூரமான அரசியல் விளைவுகளை நிச்சயம் ஏற்படுத்தும்.

தேர்தல் காலங்களில் தமிழரசுக்கட்சி மீது பொன்னம்பலம் கட்சியினரும், பொன்னம்பலம் கட்சிமீது தமிழரசுக் கட்சியினரும் கண்டனக் கணைகளைத் தொடுத்தார்கள். இப்பொழுது தேர்தல் முடிந்துவிட்டது. இரு கட்சியினரும் ஒரு தேசிய அரசில் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

இந்த நேரத்தில் இரு பகுதியினரிடமும் பொறுப்புணர்ச்சி வேண்டும். பொறுப்பற்ற முறையில் இவர்கள் கருத்துத் தெரிவிப்பது நானாய தமிழ்ச் சந்ததியினரை பாதிக்கவே செய்யும். இந்த உண்மையை யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொன்னம்பலம் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை.

தேசிய அரசாங்கத்தின் முன்வரிசை உறுப்பினரான திரு. பொன்னம்பலம் பொறுப்பற்ற முறையில் தேசிய அரசின் முக்கிய அங்கமான தமிழரசுக்கட்சிமீது கண்டனக்கணைகளை தொடுத்துள்ளார். எந்த அரசாங்கத்தில் திரு. பொன்னம்பலம் உறுப்புரிமை வகிக்கிறாரோ, அந்த அரசாங்கத்தின் அமைச்சர்மீதும் பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஓர் அரசாங்கக் கட்சி உறுப்பினர், அந்த அரசாங்கத்தின் அமைச்சர் மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியதாக பாராளுமன்ற அரசியல் வரலாறு இல்லை. கட்டுப்பாடு குறைந்தவர்கள் என்று அரசியல் விமர்சகர்களால் கணிக்கப்பட்ட சுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில்தானும் இத்தகைய ஒரு சம்பவம் நடைபெறவில்லை.

குறிக்கப்பட்ட ஒரு அமைச்சர்மீது குற்றஞ் சுமத்துவதாயின் அதை அரசாங்கக்கட்சிக் குழுக்கூட்டத்தில் சுமத்தியிருக்கலாம். அப்படியில்லையென்றால் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர் அதைச் செய்திருக்கவேண்டும். இதுதான் பாராளுமன்ற சம்பிரதாயம்.

இவையனைத்தும் திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு நன்கு தெரியும். என்றாலும் திரு. பொன்னம்பலம் உள்ளூராட்சி அமைச்சர்மீது பகிரங்கமாக பொதுமேடையில் குற்றஞ் சுமத்தியிருப்பதுடன், தேசிய அரசாங்கத்தின் முக்கிய அங்கமான இ. த. அ. கட்சி மீதும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் இன்றுவரை திரு. பொன்னம்பலம் மீதோ அல்லது அவர் கட்சியின் மீதோ குற்றஞ் சுமத்தியதாக ஒரு சம்பவம்தானும் இல்லை. இ. த. அ. கட்சி உறுப்பினர்களில் மாற்றுக் கட்சிகள் மீது கண்டனக்கணைகளைத்தொடுப்பதில் வல்லவர் என்று கூறப்படும் திரு. அமிர்தலிங்கம் அவர்களே கடந்த 4ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத்தில் திரு. பொன்னம்பலத்தைப் பாராட்டிப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இ. த. அ. கட்சியினர் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடக்கும் வேளையில் திரு. பொன்னம்பலம் பொறுப்பற்ற முறையில் அவர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டு ஐக்கியம் பற்றியும் பேசுகிறார்.

திரு. பொன்னம்பலம் மேலும் ஒருபடி சென்று 'இவர்களது (இ. த. அ. க) குடுமிகளையும், களைகளையும் பிரதமருக்கு சொல்லிக் கொடுத்து (கெடுத்து) விடுவேன்' என்றும் கல்லூரி மாணவர்களை போன்று பயம் காட்டியுள்ளார். இதுதான் திரு. பொன்னம்பலத்தின் ஐக்கியத்துக்கான நேசக் கரமா என்று கேட்க விரும்புகிறோம்?

"இ. த. அ. கட்சியினருக்கும் ஐ. தே. கட்சியினருக்குமிடையில் எத்தகைய உடன்பாடும் கிடையாது, அப்படியொன்று இருப்பின் வட இலங்கையில் கூறுவதை ஏன் பாராளுமன்றத்தில் கூறத் தயங்குகிறார்கள்" என்றும் திரு. பொன்னம்பலம் கேட்டுள்ளார். செல்வா—பண்டா உடன்படிக்கை கிழித்தெறியப்படுவதற்கு திரு. பொன்னம்பலத்தின் பிரச்சாரமே முக்கிய காரணம் என்பதை பலரும் அறிவார்கள். அன்றும் தொடர்ச்சியான திரு. பொன்னம்பலத்தின் [illegible]களுக்கு பதில் கூற முற்பட்டமையினாலேயே தூங்கிக்[illegible] சிங்கள வகுப்புவாதிகள் விழித்தெழுந்தனர். முடிவு, உடன்படிக்கை கிழித்தெறியப்பட்டதுடன் நாட்டில் பெரிய இனக் கலவரமே நடைபெற்றது.

அப்படியொரு நிகழ்ச்சியை மீண்டும் தோற்றுவிக்கவே திரு. பொன்னம்பலம் முயற்சிக்கிறார் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. இதை திரு. பொன்னம்பலம் மறுப்பாரா?

உள்ளூராட்சி அமைச்சரின் முதலைப் பேச்சுப் பற்றி பெரிய பிரச்சினையைக் கிளப்பி விட்டதாகவும், ஏதோ ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டதாகவும் போர்க்குரல் எழுப்புகிறார் திரு. பொன்னம்பலம். திரு. திருச்செல்வம் கூறியது என்ன? "ஆட்சி மொழிச் சட்டத்தை தேசிய அரசாங்கம் மாற்ற மாட்டாது." அப்படியென்றால் "தமிழ் பேசும் மக்கள் சிங்களத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதா அதன் அர்த்தம்?' அப்படிக் கூறவில்லையே திரு. திருச்செல்வம். சட்டத்தை மாற்றாமல் வேறு மார்க்கம் காண முடியாதா? இவற்றிலுள்ள சட்ட நுணுக்கங்கள் திரு. பொன்னம்பலத்திற்குப் புரியவில்லையென்று யாரும் கூற முடியாது. வேண்டுமென்று திரு. பொன்னம்பலம் போர்க்கோலம் பூண்டுள்ளார்.

1956ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் "சிங்களம் மட்டும்" சட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று திரு. பொன்னம்பலம் கூறவில்லையென்பதை மறுப்பாரா?

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரான திரு. திருச்செல்வம் அமைச்சர் பதவியேற்றதையும் பொன்னம்பலம் கட்சியினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் 'சுகாதார அமைச்சர் பதவி—உள்நாட்டு அமைச்சர் பதவிகளின் மூலம் தன்னை வாங்கிவிட முடியாது' என்றும் திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார். ஆனால் மீன் பிடி-கைத்தொழில் அமைச்சர் பதவியின் மூலம் அவரை விலைக்கு வாங்கி விடலாம் என்பதை அவர் மறுக்கவில்லை?

தேர்தல் முடிவு வெளியாகியதும் திரு. பொன்னம்பலம் நிபந்தனையெதுவுமற்ற ஆதரவை ஐ. தே. கட்சிக்கு வழங்கினார் என்பதை மறுக்கவில்லை.

முதலில் சுகாதார அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டதும் 'அறுபத்தைந்து வயதுக் கிழவனால் மருத்துவப் பெண்களின் பின்னால் ஓட முடியுமா?' என்று கூறியப்பதவியை ஏற்க மறுத்ததை அவர் மறுக்கவில்லை.

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் பதவி கேட்டும் கிடைக்கவில்லையென்பதை அவர் மறுக்கவில்லை.

இரு தினங்களின் பின்னர் சுகாதார அமைச்சர் பதவியை வேண்டுமானால் ஏற்கிறேன் என்று கூறியதையும் மறுக்கவில்லை.

'எந்த அமைச்சர்பதவியையும்தற்பொழுது கொடுக்கக்கூடிய நிலையிலில்லை, வேண்டுமானால் உமது கட்சி உறுப்பினர்களுக்கு அரை அமைச்சர் பதவி கொடுக்கலாம்' என்று கூறப்பட்டதை அவர் மறுக்கவில்லை.

அப்படிக் கூறியபொழுது 'எனது கட்சியினருக்கு அரை அமைச்சர் பதவியா?' என்று கூறியதை அவர் மறுக்கவில்லை.

அவர் மறுப்பதெல்லாம் 'சுகாதார அமைச்சர் - உள்நாட்டு அமைச்சர் பதவிகள் மூலம் தன்னை வாங்க முடியாது என்பதைத்தான்.

திரு. பொன்னம்பலம் தான் இருக்கும் நிலையை உணராது பொறுப்பற்ற முறையில் பேசுகிறார் என்றே கூற வேண்டியிருக்கிறது. செல்வா — பண்டா உடன்படிக்கைக்கு ஏற்பட்ட முடிவே, தேசிய அரசாங்கத்திற்கும் ஏற்பட வேண்டுமென்ற முயற்சியில் திரு. பொன்னம்பலம் ஈடுபட்டுள்ளார் என்றே சந்தேகப் படவேண்டியிருக்கிறது.

அண்மைக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட விருக்கும் மாவட்ட சபை மசோதாவை தடுத்துநிறுத்துவதே திரு. பொன்னம்பலத்தின் இன்றைய ஒரே இலட்சியம் என்று கூறப்படுகிறது. இதற்காக அவர் எதிர்வரிசையினருடனும் தொடர்புகொண்டுள்ளாரா?

கடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலத்தைப் பாராட்டிப் புகழ்ந்து திரு. கெனமனும், திரு. பீலிக்ஸ் டயசும் பேசியது ஏன்?

பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்த வவுனியாப் பிரதிநிதி மதவாச்சிப் பிரதிநிதி திரு. மைத்திரிபாலாவுடன் நெருங்கிப்பழகுவதாகக் கூறப்படுவது ஏன்?

வவுனியா உறுப்பினர் திரு சிவசிதம்பரம்பற்றி அரசியல் வட்டாரங்களில் அடிபடும் செய்திகளில் உண்மை உண்டா?

மாவட்டசபை மசோதாவை உருவாக்கும் பொறுப்பை யேற்றுள்ள அமைச்சரான திரு. திருச்செல்வம் மீது திடீர் தாக்குதல் ஆரம்பித்ததின் அந்தரங்கம் என்ன?

இ. த. அ. கட்சியின் கொள்கை நிறைவேற்றப்படுவதை தடுக்க வேண்டுமென்பதா? இ. த. அ. கட்சியின் உயிர்க் கொள்கையில் ஒன்று உருப்பெறுவதைத் தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கமா? இக்கேள்விகள் இன்று தமிழ் பேசும் மக்கள் அரங்கிலிருந்து கேட்கப்படுகின்றன. இவற்றுக்கு [illegible]வர் திரு. பொன்னம்பலமே [illegible]ரல்ல. இதைத் திரு. பொன்னம்பலம் உணர்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

# மே தினக் கோஷங்கள் உணர்த்தும் உண்மை

நாட்டில் மீண்டும் வகுப்புவாதக் கூச்சல் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த கூட்டரசாங்கவாதிகள் இம் முயற்சியில் முனைந்துள்ளார்கள்.

மேநாள் அன்று தலைநகரில் நடைபெற்ற சுதந்திர—சமசமாச—கம்யூனிச கட்சிகளின் ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள் இந்த உண்மையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இம் மேதினக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியவர்களின் பேச்சுக்கள் மிகவும் ஆபத்தானவை.

ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள் 1958ம் ஆண்டை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. தொழிலாளர்களின் ஊர்வலத்தில் தொழிலாளர்களுக்கு விரோதமான கோஷங்களா?

## வழி வகுத்தவர்கள் யார்?

ஊர்வலத்தை நடாத்திய தொழிலாளத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு எதிராகத் தொழிலாளர்களை அணிவகுத்தனர். தொழிலாளர்களின் உரிமை வேண்டிக் கோஷம் எழுப்பவேண்டியவர்கள் இன விரோதக் கூச்சலிட சகாக்களை அனுமதித்தனர்.

எதிர்க்கட்சிகள் நடாத்தும் ஊர்வலங்களில் அரசாங்கத்திற்கு விரோதமான கோஷங்கள் எழுப்பப்படுவது இயற்கை.

இக் கோஷங்களை எழுப்பியவர்களை மட்டும் நாம் குறைகூற முடியாது. இக் கோஷங்களை எழுப்ப வழி வகுத்தவர்கள் யார் என்பதே நமது கவனத்துக்குரியவர்கள்.

ஐக்கிய இலங்கையை வேண்டுபவர்கள், வட—கிழக்கு இலங்கையில்சென்று தமிழ் உரிமை பற்றிப் பேசுபவர்களே இக்கோஷங்களுக்கு மூலகாரணம். இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது.

'வடை—தோசை—நல்லெண்ணெய்' முதல் 'சிங்களத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்பது வரைமுழுக்க முழுக்கவகுப்புவாதக் கோஷங்களே அன்று எழுப்பப்பட்டன. இந்த முறையில் இத்தலைவர்களின் பேச்சு மாறிவிருக்கிறது.

## எதிர்காலம் என்ன?

மேதினக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய சமசமாசக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா 'முதல் தடவையாக சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஆள்கிறார்கள். இதைப் பௌத்தர்கள்பொறுக்க மாட்டார்கள்' என்று கூறியுள்ளார் என பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவரைப் போன்றே அன்று உரை நிகழ்த்திய அனைவரும் பேசியுள்ளார்கள் எனத் தெரிகிறது.

**சுதந்திரன்**
**அரசியல் விமர்சகர்**

வர்க்க ஒற்றுமையை வலியுறுத்தியவர்கள், இனவழி, மொழிவழி ஒற்றுமையை வெகு தீவிரமாகக் கடைபிடிக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் பேசும் தொழிலாளர் நிலை என்ன?

மொழிவழித் தொழிற் சங்கங்கள் அமைத்துதமிழ்த் தொழிலாளர்கள் தனியணி கண்டு விட்டனர். என்றாலும் தமிழ்த் தொழிலாளர்கள் சிலர் வர்க்க ஒற்றுமையை வலியுறுத்திக் கொண்டு தொடர்ந்தும் சமசமாச-கம்யூனிச தொழிற் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

## முதற்பணி

எனவே மொழிவழித் தொழிற் சங்கத் தலைவர்கள் இப்பொழுது, முதற் பணியாக போலி வர்க்க ஒற்றுமை பேசுபவர்களின் சுயரூபத்தை இவர்களுக்கு எடுத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

ஒரு காலத்தில் சுதந்திரக் கட்சியினரையும் தமிழரசுக் கட்சியினரையும் வகுப்புவாதிகள் என்று கூறிய சமசமாச-கம்யூனிச தலைவர்கள் இன்று சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து வகுப்புவாதக் குட்டையில் புரள்வதை எடுத்துக் காட்ட வேண்டும்.

தென்னிலங்கையில் சுதந்திரக் கட்சியுடன் சமசமாச-கம்யூனிச கட்சிகளின் தலைவர்கள் கைகோர்த்துக் கொண்டார்கள். ஆனால் வட இலங்கையில் நடப்பது என்ன? வட இலங்கையில் உள்ள சமசமாச- கம்யூனிசக் கட்சிகளின் தலைவர்கள் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்துள்ளார்களா? இல்லை, இன்றும் 'முதலாளித்துவ தமிழரசுக் கட்சி ஒழிக' என்கிறார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர்களுக்குப் பட்டதாரிகள் சம்பளம்

## கா. பொ. இ. முயற்சிக்கு அமைச்சர் ஆதரவு

ஆசிரியர்களாகக் கடமையாற்றும் தமிழ் பண்டிதர்களுக்குப் பட்டதாரிகள் சம்பளம் வழங்கப்படலாம் என்று தெரிகிறது. கல்வியமைச்சர் திரு. ஐ எம். ஆர். ஏ. இரியக்கொல்லையுடன் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக இத்திட்டத்தை அமைச்சர் கொள்கையளவில் ஏற்றுள்ளார். அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. இரத்தினம் இதுபற்றி ஒரு திட்டத்தையும் சமர்ப்பித்துள்ளார்.

இத்திங்கள் 4-ம் நாள் செவ்வாய்க்கிழமையன்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ இரத்தினம் கல்வி அமைச்சருடன் தமிழ் பண்டிதர், புலவர், வித்துவான் பட்டம்பெற்ற ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைபற்றியும், இப்பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின் பொழுது அமைச்சர் இத் தமிழ்ப்பட்டதாரிகளுக்கு ஏனைய பட்டதாரிகளுக்கு சம்பளம் வழங்கும் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்பதை கொள்கையளவில் ஏற்றுள்ளார். இதுபற்றி ஒரு விரிவான திட்டத்தைக் கொடுக்கும்படியும் அமைச்சர் திரு. இரத்தினத்தைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒரு விரிவான திட்டத்தை அமைச்சருக்கு திரு. இரத்தினம் 6-ம் திகதி அனுப்பிவைத்துள்ளார்.

பண்டிதர், புலவர், வித்துவான் பட்டம்பெற்ற வேலையற்றவர்களின் நிலைமை பற்றியும் அமைச்சருக்குதிரு. இரத்தினம் எடுத்துக்கூறியுள்ளார். இவர்களுக்கு ஒரு கோட்டா முறையில் ஆசிரியர் நியமனம் கொடுப்பதென்றும், வருடமொன்றிற்குக் குறைந்தது பன்னிரண்டு தமிழ் பண்டிதர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதாகவும் அமைச்சர் கூறியுள்ளாராம்.

## மேதினக் கோஷங்கள்........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### தலைமைப்பதவி

வட-கிழக்கு இலங்கையில் உள்ள சமசமாச - கம்யூனிசவாதிகள் பழைய கோஷத்தையே திருப்பித் திருப்பிக் கூறுவது ஏன்? தென்னிலங்கையில் உள்ள சமசமாச-கம்யூனிசக் கட்சிகளின் தலைவர்கள் சுதந்திரக் கட்சியினதும் தலைவர்களாகக் கணிக்கப்படுகிறார்கள். ஆனால் வட-கிழக்கு மாகாணங்களில் உள்ள இக் கட்சிகளின் தலைவர்கள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்தால் தங்களின் 'தலைவர் என்ற பட்டம் பறிபோய்விடும் என்று அஞ்சுகிறார்கள்.

'தலைவர்' என்ற பட்டத்தைக் காப்பாற்றுவதற்காகவே 'ஒப்பந்த விபரத்தைக் கேட்பது வகுப்புவாதமா? சமசமாச-கம்யூனிசக் கட்சிகளின் தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் உரிமை பற்றிப் பேசவில்லையா' என்கிறார்கள்.

### உண்மை என்ன?

இவர்களுக்கு நாம் கூறக்கூடியது இதுதான். வர்க்கப் போராட்டம் நடத்தியவர்கள் இன்று இனப் போராட்டத்தைத் துவக்குகிறார்கள். தொழிலாளர்களின் தோழர்கள் இன்று மொழி வெறிக்குத் தூபமிடுகிறார்கள். புரட்சியைப் புகட்டியவர்கள் இன்று பௌத்த நாட்டில் புரட்சிக்கு இடமில்லையென்கிறார்கள். சமதர்மம் என்றவர்கள் இன்று சாதி, மதம் என்கிறார்கள். பொதுவுடமை என்றவர்கள் இன்று புத்தர் உடமை என்கிறார்கள். உச்சவரம்பு கேட்டவர்கள் இன்று வரம்பு மீறிப் போகிறார்கள். சர்வ தேசியம் பேசியவர்கள் இன்று சாக்கடையில் விழுகிறார்கள்." மேதினத்தில் போனவர்கள் இதை மேதினிக்குக் காட்டினார்கள்.

எனவே, தமிழ் பேசும் தொழிலாளர்கள் குறிப்பாக வட - கிழக்கு - மலைநாட்டில் எவ்வித தமிழ் தொழிலாளர்கள் மொழிவழித் தொழிற் சங்கத்தில் அணிதிரள வேண்டும். இதுவே நமக்கு இம்முறை நடைபெற்ற மேதின விழா போதிக்கும் உண்மையாகும்;

## இரகசிய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் பெறுவதற்காகப் போராடும் ஒரு கட்சியின் தலைவர்கள் அழைக்கப்படக் கூடாது என்பது இலங்கையரின் கருத்து.

இலக்கிய மாநாட்டுப் போர்வையில் தி. மு. க. தலைவர்கள் இலங்கை வருவதின் நோக்கம் சமஷ்டி வாதிகளுடனும் தொண்டமான்களுடனும் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கே என அறியப்படுகிறது.

தி. மு. க. தலைவர்களோ நாம் தமிழர் இயக்கத் தலைவர்களோ இந் நாட்டு மண்ணில், கால் வைக்கக்கூட முன்னுள் அரசாங்கம் அனுமதிக்கவில்லை.'

## தமிழ்த்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறன்பாட்டை-தரங்கெட்ட அரசியல் நடத்தையை தமிழ்பேசும்தொழிலாளர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

தெற்கே சிங்களத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதும், வடக்கே தமிழ்பேசும் தொழிலாளர்களை மோதவிடுவதும் முழுக்க முழுக்க அரசியல் லாபத்துக் கென்பதை நாம் உணரவேண்டும்.

தெற்கே சுதந்திரக்கட்சியுடன் தேர்தலில் போட்டியில்லை. மாறாக தேர்தல் கூட்டு இருக்கிறது. எனவே தொழிற்சங்க அரங்கிலும் மோதலில்லை.

தமிழ்பேசும் தொழிலாளர்களிடையே இந்த உண்மையை எடுத்து மொழிவழித் தொழிற்சங்கங்கள் விளக்கவேண்டும். அடுத்த ஆண்டு மேநாள் மட்டும் காத்திருக்கக்கூடாது.

## மொழிவழி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிவழி தொழிற் சங்கங்களுக்கும் உளங்கனிந்த வாழ்த்துக்களை இம் மேதினக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

ஈ. கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தின் விளைவால் மலைவாழ் தமிழ் பேசும் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்சத்தையும், பீதியையும் போக்கி — இப்பிரச்சினையை சனநாயகபண்புக்களுக்கமையவும் மனிதபிமான ரீதியிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தேசிய அரசாங்கத்தை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

உ. தொழிற்சங்க உரிமைகளைப் பேணி காப்பதற்கும், தொழிற்தகராறுகளை சுணங்காமல்—சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கும் தொழிலாளர்களின் பொருளாதார நிலை சீர்படுவதற்கும் ஏற்ற வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தொழிலாளரின் நலன்களைப் பாதுகாக்குமாறு தேசிய அரசாங்கத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்வதோடு, இத்தகைய நிலையை அடைவதற்கு ஒன்றுபட்டுச்செயல் படவருமாறு தமிழ் பேசும் தொழிலாள பெருமக்களை இம்மேதினக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

## மத்திய ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தட்டிக் கேட்கத் தவறியதினால் தமிழ் ஊழியர்கள் அனைவரும் இச்சங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர்.

மேலும் இச்சங்க அறிக்கைகள், அறிவித்தல்கள் அனைத்தும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே நடைமுறையில் இருந்துவருகின்றதாம். இதை எதிர்த்து ஆங்கிலத்தின் இடத்தில் தமிழை வைக்கும்படி தமிழ் ஊழியர்கள் சங்கத் தலைமைப் பீடத்தைக் கோரியிருக்கிறார்களாம். இதற்கு சங்கத் தலைமைப்பீடம் மறுப்புத் தெரிவித்திருப்பதாகவும், தலைமைப் பீடத்தின் மறுப்பை இடதுசாரி மனப்பான்மை கொண்ட ஒரேயொரு தமிழ் ஊழியர் மட்டும் ஆதரித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

தமிழ் ஊழியரின் கோரிக்கையை சங்கத் தலைமைப் பீடம் மறுப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதும் தமிழ் ஊழியர் தமக்கெனத் தனியாக ஒரு தொழிற் சங்கத்தை அமைத்து அச்சங்கத்தை மொழிவழித் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைப்பார்களென்று நம்பப்படுகிறது.

## மீனவர்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த அமைச்சர் இது சம்பந்தமான விபரங்களை மீன்பிடித் திணைக்கள இயக்குனருடன் தமிழரசுக் கட்சிக் குழுவினரைப் பேசித் தீர்க்கும்படி கூறியுள்ளார்.

விரைவில் இக்குழு மீன்பிடித் திணைக்கள இயக்குனரைச் சந்தித்துப் பேசுவர் என்று தெரியவருகிறது.

## இ. த. அ. க. அறிக்கை

இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைமை நிலையத்திலிருந்து வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் உறுப்புரிமை சம்பந்தமான தொடர்புகளை யாழ்ப்பாணம், 25, 2ம் குறுக்குத் தெருவிலுள்ள கட்சிப் பணிமனையுடன் வைத்துக்கொள்ளும்படி கோரியுள்ளது.

உறுப்புரிமைப் படிவங்கள், சந்தாப்பணம் அனுப்புதல் போன்ற தொடர்புகளை பொதுச் செயலாளருக்கு முகவரியிட்டு யாழ்ப்பாணப் பணிமனைக்கு அனுப்பவேண்டுமென்றும், சந்தாப்பணத்திற்கான காசோலைப் பத்திரங்களில் 'இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி' என்று மட்டும் குறிப்பிட்டு அனுப்பவேண்டுமென்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நிதியளிப்பு ஆலோசனை

இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு ஒரு வாகனம் அன்பளிப்பது பற்றி ஆலோசிப்பதற்கா ஒரு ஆலோசனைக் கூட்டம் 9ம் திகதி பிற்பகல் கொழும்பில் நடைபெறும் என்று தெரிகிறது. இக்கூட்டத்தை கொழும்பு வாழ் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவாவிபர்கள் ஒழுங்கு செய்திருப்பதாக அறியப்படுகிறது. எற்கனவே இதற்கான நிதி வட்டுக்கோட்டைத் தொகுதியில் சேர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

## திருமண அழைப்பு

**பழனியப்பன்** — **புவனேஸ்வரி**

பெருந்தகையீர்,

நிகழும் விசுவாவசு ஆண்டு வைகாசித் திங்கள் 3-ம் நாள் (16-5-65) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நடக்கவிருக்கும் எங்கள் திருமண விருந்துபசார வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்து கலந்துகொண்டு எங்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

76, நாயன் மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

பழனியப்பன்-புவனேஸ்வரி
மணமக்கள்.


மீன்பாடும்
தேன்நாட்டில்
வான்புகழ் வரவேற்பு!

★

ஆமாம்!

மட்டுநகரிலும்
மற்றேனைய ஊர்களிலும்
எமது
அருத
எண்ணெய்க்கு
அமோக ஆதரவளித்த
அன்பர்களுக்கும், வர்த்தக நண்பர்களுக்கும்
மற்றும்
பொது மக்களுக்கும் எனது நன்றியை
இத்தால் உரித்தாக்குகின்றேன்.

இப்படிக்கு,
பி. எம். திசாநாயக்க,
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை.

——அருத எண்ணெய்——

(அறுபதாம் பச்சையும், 44 மூலிகைகளும் சேர்ந்தது) அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். கூந்தலை அடர்த்தியாகவும், நீளமாகவும் வளர்க்கும். தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும். பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும். மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், நாசியில் நீர் வடிதல், ஜலதோஷம் மற்றும் தலையிடி ஆகிய நோய்களை சொஸ்தப்படுத்தும்.

—சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்—

குறிப்பு:- 5000க்கு மேற்பட்ட போத்தல்களை மாதா மாதம் தபாலில் பெற்று வந்த வாடிக்கையாளர்கள் இனி தத்தம் ஊர்களிலுள்ள அருத எண்ணெய் வியாபாரிகளிடத்தில் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைராக்கியம்

முருகுப்பிள்ளை ஒரு மூலையில் வசதியாக அமர்ந்தார். அவரின் எதிரே ஓர் இளம் பெண் குமார் இருபத்தைந்து வயது தான் இருக்கும்; மிகவும் அழகாக மூக்கும் முழியுமாக, நெற்றியில் திலகமிட்டு, அமர்ந்திருந்த தோற்றத்தைப் பார்த்த முருகுப்பிள்ளை "பெரிய இடத்துப் பெண்" என்று நினைத்துக் கொண்டார்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

காலை பதினொருமணிக்கு வவுனியாவுக்குவந்த யாழ் தேவியில் ஏறிக்கொண்டார். தன் நண்பர் ஒருவரின் மகளின் திருமணத்துக்குச் சென்று விட்டு யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தார்.

அவருடைய மகனும், அவர் விருப்பப்படி இருந்தால் எவ்வளவு ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைத்திருப்பார்? எல்லாம் கனவாகி விட்டன. முருகுப்பிள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

அவரெதிரே அமர்ந்திருந்த அந்த இளம் பெண் மிக பண்பான உடை அணிந்திருந்தாள். கைகளில் ஒரு சில தங்க வளையல்களும், கழுத்திலே தாலிக்கொடியும் தாம் அவள் அணிகள். அவள் அருகே ஒரு சிறு குழந்தை இரண்டு வயதிருக்கும். நெற்றியில் சுருண்டு விழுந்த தலைமயிரும், சதைப் பிடிப்பான கன்னங்களும், அங்கு மிங்கும் சதா அலைபாயும் கண்களுமாய் இருந்த அக்குழந்தை அவரைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

முருகுப்பிள்ளை திரும்பவும் பெருமூச்சு விட்டார். பாஸ்கரன் மட்டும் அவர் எண்ணப்படி நடந்திருந்தால், இப்படி ஒரு பேரனை அவர் பெற்றிருப்பார்.

குழந்தை அவரைப் பார்த்துச் சிரித்தான். அவர் சிரித்தபடி கைகளை நீட்டினார். குழந்தையும் தயங்காமல் உடனே எழுந்து அவர் அருகில் ஓடி வந்தான். அவர் அவனைத் தூக்கி மடியில் இருத்திக் கொண்டார்.

'உன் பெயர் என்ன. தம்பி?''

'ராசா...' மழலை பேசினான், குழந்தை.

அவள் தாய் புன்முறுவல் பூத்தாள்.

'அப்பா பேரென்ன, ராசா?'

'அப்பாட பேர், பாஸ்கர்!'

முருகுப்பிள்ளையின் இதயம் ஒரு கணம் துணுக்குற்றது. இதயப் பரப்பிலே குமுறல் தொடங்கி விட்டது.

அவருக்கு பட்டென்று ஏதோ யோசனை வரவே எழுந்து மேலே வைத்திருந்த தனது பெட்டியைத் திறந்து இரு தோடம் பழங்களை எடுத்துக் குழந்தையின் கைகளில் வைத்தார். அவனும் அவற்றைப் பெற்றுக் கொண்டு, தாயிடம் சென்றான்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. வெளியே இருபக்கமும் காட்சிகள் கடகடவென்று மறைந்து கொண்டிருந்தன. அவர் கண்களை இலேசாக மூடிக்கொண்டார்.

நினைவுகளை மூடமுடியாது.

நான்கு ஆண்டுகளாகின்றன; பாஸ்கரன் அவரை விட்டுப் பிரிந்து போய். காலத்திற்குத்தான் தயக்கம் கிடையாதே? அது யாரையும் லட்சியம் செய்வதில்லை. மனிதனின் மன ஓட்டத்தைப் புரிந்து தனதுவேகத்தைக் குறைக்கப் போகிறதா? இல்லை.

ஏராளமான செல்வத்தோடு பிறந்து வளர்ந்தவர் முருகுப்பிள்ளை. விவாகமாகி ஒரு குழந்தை பிறக்கு மட்டும் அவர் துன்பத்தைக் கண்டது கிடையாது. அழகான

**இவ்வாரச் சிறுகதை**

குழந்தையைக் கொடுத்த கடவுள் அன்பே உருவான அவர் மனைவியை அவரிடமிருந்து பறித்துக் கொண்டார்.

அதன் பிறகு குழந்தைக்குத் தாயும், தந்தையும் அவர் தான். கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த பாஸ்கரன் தான் அப்படி ஒரு எண்ணம் கொண்டான்!

அவனுக்காக மச்சாள் ஒருத்தி காத்திருக்க; அவள் திருமணத்தை வெகுசிறப்பாக நடத்தி முடிக்க இந்தத் தகப்பன் காத்திருக்க, பாஸ்கரன் தன் விருப்பட்படி கொழும்பில் ஒருத்தியை மணந்து கொண்டான்.

அன்று அவர் இதயம் உடைந்தது. பாஸ்கரனை மறக்க அவர் முயற்சிசெய்தார். தன் மகன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் ஏமாற்றத்தை அவரால் தாங்கவே முடியவில்லை.

மகன் அன்பொழுகக்கடிதங்கள் எழுதினான்.

கிழவர் அசைந்து கொடுக்கவில்லை.

இப்போது இக்குழந்தையைக் கண்டதும் தன் மகனுக்கு ஒரு மகன் பிறந்தால், தன் மடியில் ஏறித் துள்ளிக்குதித்து விளையாடுவானே என்று எண்ணம் ஓடியது.

ஏதோ ஒரு ஸ்டேசனில் ஒரு குலுக்கலுடன் வண்டி நின்றது. கண்களைத் திறந்து பார்த்தார். வண்டி மாங்குளத்தைத் தாண்டி பரந்தனை அடைந்திருந்தது.

மீண்டும் வண்டிக்குள் கண்களைத் திருப்பினார். தாய் உரித்துக் கொடுத்த பழச் சுளைகளை தன்பிஞ்சு விரலால் வாயில் வைத்து குதப்பிக் கொண்டிருந்தான், அவன்.

முருகுப்பிள்ளை குழந்தையையும், தாயையும் ஒரு கணம் பார்த்து விட்டுக் கேட்டார்:

'நீங்கள் யாழ்ப்பாணமா போகிறீர்கள்?'

'ஓம்!' என்றாள், முறுவலுடன், சுருக்கமாக.

'தனியாகவா?...'

'ஓம், தங்கச்சிக்குக் கலியாணம்! அவருக்கு லீவு கிடைக்கவில்லை! பிறகு தான் வருவார்!'

சுபாவத்தில் மற்றவர்களைப் பற்றி அறிய ஆவல் இல்லாதவர். இருந்தும் ஏதோ ஒன்று மனதைக் குடைய அவர் மீண்டும் கேட்டார்.

'உங்களுடையவர் எங்கே வேலை செய்கிறார்?'

'திறைசேரியில் அக்கவுண்டன்ட்...'

திகைப்பு ஏன் முருகுப்பிள்ளையை ஆட்கொள்ள வேண்டும்? ஒரு வேளை...?

'வட்டுக்கோட்டை முருகுப்பிள்ளையின் மகனா?'

'ஓமோம்! உங்களுக்குத் தெரியுமா அவரை?'

அவரின் சந்தேகம் சரிதான். முருகுப்பிள்ளை பலதரப்பட்ட உணர்ச்சிகளுக்கு ஆளானார். எதிரே இருப்பது தன் மருமகளும் பேரனும்!

என் மருமகள்! என் பேரன்! அவர் மனம் தனக்குள் சொல்லிக் கொண்டது. தான் யாரென்று தெரியாமல் தன் மடியில் இருந்து தன்னுடன் மழலையில் பேசி மகிழ்ந்தபேரனை மறுபடியும் தன் கண்களால் ஆசை தீரப் பார்த்துக் கொண்டார்.

அவருடைய வைராக்கியம் சிதறியுடைந்தது!

அவர் கண்கள் கலங்கின. 'எவ்வளவு மகிழ்ச்சியை நான் இழந்து விட்டேன்! பாஸ்கரா...பாஸ்கரா?'

'ஐயா, என்ன இது? ஏன் அழுகிறீர்கள்?' - கேட்டது அவர் மருமகள்.

கிழவர் சிரிக்க முயன்றார். முடியவில்லை.

'நான்தானம்மா, முருகுப்பிள்ளை!'

றெயில் ஓடிக்கொண்டிருந்தது.

அவள் கண்கள் இப்போது கலங்கின.

மாமா!—அவள் அவருடைய பாதங்களில் விழுந்தாள்.

(யாவும் கற்பனை)

நா. வைத்திலிங்கம்

**முருகுப்பிள்ளைக் கிழவர் எதிர்பார்த்தபடி மகன் நடக்கவில்லை! அவன் கொழும்பில் தன் விருப்பப்படியே ஒருத்தியை மணந்து கொள்கிறான்!**

**நான்கு ஆண்டுகள்—**

**கிழவரின் மனதில் வைராக்கியம்!**

**கடைசியில்—**

**"நான் தானம்மா, முருகுப்பிள்ளை!"**

**"மாமா...!"**

# தமிழிலக்கியம் கற்க . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இயற்றிய உரையுடன் கூடிய குறுந்தொகை நூலைக் கற்கவேண்டும். இந்நூலின் முன்னுரையில் அகப்பொருள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாட்டின் அடியிலும் துறை விளக்கம் இருக்கிறது. குறுந்தொகை படிக்கப் படிக்கத் தெவிட்டாது.

இனிச்சிற்றிலக்கியங்களைக் குறித்துத் தெரிந்து கொள்வதற்காக உரையுடன்கூடிய திருவரங்கக் கலம்பகம், தமிழ்விடுதூது, மூவர் உலா, தஞ்சைவாணன் கோவை, குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, இவற்றைப் படிக்கவும். தமிழ்விடு தூது, மூவர்உலா ஆகிய இரண்டிற்கும் குறிப்புரை மட்டும் உண்டு. இக்குறிப்புரையைக் கொண்டு இவற்றைப் படித்து விடலாம்.

தொல்காப்பியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள உரைநடையில் இருக்கும் திரு. வெள்ளைவாரணர் இயற்றிய தொல்காப்பியமும், பேராசிரியர் இலக்குவனார் இயற்றியுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியும் மிகவும் பயன்படும். திரு. வெள்ளைவாரணர் இயற்றிய உரைநடைத் தொல்காப்பிய நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப் பெற்றுள்ளது.

இவையெல்லாவற்றையும் கற்றபின், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் கம்பராமாயணத்தையும் தொடர்ந்து படிக்கலாம். இடையிடையே தமிழக வரலாற்றைப் படிக்க வேண்டும். பண்டாரத்தார் இயற்றிய பாண்டியர் வரலாறும், சோழர் வரலாறு, டாக்டர் இராசமாணிக்கனார் இயற்றியிருக்கும் பல்லவர் வரலாறும், கட்டாயம் படிக்க வேண்டியவை. வரலாறும் இலக்கியமும் இரட்டைப் பிள்ளைகள், பிரிக்க முடியாதவை. இலக்கியச் சுவையைத் தெரிந்து கொள்வதற்கு காலஞ் சென்ற [illegible] கடசாமி நாட்டார் [illegible] ரைகளையும், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் கட்டுரைகளையும் படிக்கவும். யாப்பிலக்கணமும் ஓரளவு தெரிந்து கொள்வது இன்றியமையாதது. இதுவெண்பா, இது ஆசிரியப்பா, இது விருத்தம் என்று தெரிந்து கொள்ள வேண்டு மன்றோ? ஆதலால் சுண்ணாகம் குமாரசாமிப் புலவர் யாப்பருங்கலக்காரிகைக்குஎழுதியுள்ள புத்துரையைப் படிக்கவும்.

ஓரளவு அடிப்படைத் தமிழறிவுள்ளவர்கள் நான் கூறியுள்ள நூல்களை இவ்வாறு ஐந்தாண்டு திட்டமிட்டுச் செவ்வையாக படித்தால், தமிழறிவு பெறுவது உறுதி. அவரவர் அறிவுத் திறனுக்கும் முயற்சிக்கும் ஏற்ப இத்திட்டம் நான்காண்டிலும் முடியலாம்; மூன்றாண்டிலும் முடியலாம். முயற்சி செய்தால் முடியாத துண்டோ? முயற்சி திருவினையாக்கும் [illegible] உளவோ?' என்றார் பட்டினத்தார். எனவே முயன்று கற்கவும்.

## முடிவுரை

பாட்டை எப்படிப் படிக்க வேண்டும் என்பதைக் கீழ் வரும் பாடல் நமக்கு அறிவிக்கிறது. அருட் பிரகாச வள்ளலார் சுந்தரர் பாடலைப் படித்தபோது தமக்கு உண்டான அனுபவத்தை இப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடல் வருமாறு:

"தேன் படிக்கும்
அமுதா உன்
திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான் அறியேன்;
நாஒன்றோ
நான் படிக்கும் போது
என்னை
ஊன் படிக்கும்;
உளம் படிக்கும்;
உயிர் படிக்கும்;
உயிர்க்குயிருந்
தான் படிக்கும்;
அனுபவங்காண்
தனிக்கருணைப்
பெருந்தகையே!"

இப்படிப் படித்தால் தமிழிலக்கியம் தனிமையில் இனிமை தராமல் இருக்குமா?

ஆதலால், எழுத்தாளர்களும் பிறரும் தமிழ் வரலாற்றை அறிந்து அகப்பொருள் புறப் பொருள் தெரிந்து, மேலே கூறியவாறு இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து, ஆராய்ச்சிக்குள் நுழையாமல், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தித் தமிழிலக்கியத்தில் தோய்ந்து படித்து வந்தால், ஒருவருக்குத் தமிழிலக்கியம் உண்மையில் புலமை உண்டாக்குவதோடு இனிய பண்பையும் அரிய இன்பத்தையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. தேருந்தொறும் இனிதாம் தமிழிலக்கியத்தைக் கற்றுத் தண்டமிழ் இன்பத்தை எய்துவீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌமனுக்கு கோளாறு ஏற்பட்டு விட்டதோ?

## தோழர்கள் மொஸ்கோ செல்லலாம் தொண்டமான் இந்தியா செல்லலாகாதா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய அமைச்சரும் இன்றைய தொம்பே பிரதிநிதியும் இவற்றை என்றுமே மறுக்கவில்லை.

திரு. பிலிக்ஸ் டயஸ்: எனது பேச்சில் இவற்றை மறுத்திருக்கிறேன்.

திரு. அமிர்தலிங்கம்: மேற்காட்டிய கடிதம் 1960ல் எழுதப்பட்டது. நீர் இதை மறுக்கவில்லை.

துணைச் சபாநாயகர்: தயவு செய்து தொம்பே பிரதிநிதிக்குப் பேசவேண்டாம், தலைவரைப் பார்த்துப் பேசவும்.

திரு. அமிர்தலிங்கம்: அப்படியானால் மதிப்புக்குரிய தொம்பே பிரதிநிதி தனது வாயை மூடிக்கொள்ளட்டும்.

துணைச் சபாநாயகர்: தொம்பே பிரதிநிதி சரியான நேரத்தில் பதில் கொடுக்கலாம்.

திரு. பிலிக்ஸ் டயஸ்: அவர் என்னைப் பார்த்துப் பேசினால் நான் பதில் கொடுக்க வேண்டும் ஐயா.

திரு. அமிர்தலிங்கம்: இச்சம்பவங்கள்பற்றி நமது தலைவர் எழுதிய கடிதங்களுக்கு 1960 செப்டம்பர் 29ம் திகதி தொம்பே பிரதிநிதியின் செயலாளர்—அவரின் துணைவியார்—நமது தலைவருக்குக் கடிதம் எழுதினார்.

எங்களுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் ஒரு உடன்பாடு இருந்ததை நாடு அறியும்.

### அலரிமாளிகை மாநாடுகள்

1960 அக்டோபர் 13ம் திகதி அன்றைய பிரதமரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவியுமானவருக்கு நமது தலைவர் ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் எமக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு மாநாட்டை ஏற்படுத்தும் வண்ணம் கேட்டிருந்தார்.

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை ஆராயவும் இருபகுதியினருக்குமிடையில் உள்ள உடன்பாடுபற்றிக் கதைப்பதற்குமே மாநாடு கூட்டும் வண்ணம் கேட்டிருந்தார்.

எதிர்வரிசையிலிருக்கும் மதிப்புக்குரிய எழிலரசியார் இவற்றை மறுப்பாரா? 'அலரிமாளிகை'யில் இது பற்றி எங்களுக்கிடையில் மாநாடுகள் நடைபெறவில்லையென்றுகூறமுடியுமா? ஐ. தே. கட்சியைத் தோர்க்கடித்துவிட்டு மாற்று அரசாங்கம் அமைக்க எம்முடன் உடன்பாடுசெய்யவில்லையா?

எமது தலைவர் பலதடவைகள் அன்றைய பிரதமரின் கவனத்தை இப் பிரச்சினையில் திருப்பினார். அச்சமயத்தில் நீர் ஒரு அமைச்சராகி உம்மை 'டயஸ் பண்டாரநாயக்கா' என்று அழைக்க ஆரம்பித்துவிட்டீர்.

உடன்பாட்டை கௌரவிக்க தவறுவதை எமது தலைவர் பலதடவைகள் சுட்டிக் காட்டினார்.

இக்கடிதங்களை படித்துக் காண்பிப்பதன் காரணம்; எதிர்க்கட்சித் தலைவியாரும், தொம்பே பிரதிநிதியும் தமிழரசுக்கட்சியுடன்யாராவது உடன்பாடு செய்வதை மிகுந்த அச்சத்துடன் நோக்குவதாகப் பேசியுள்ளாதே.

திரு. பிலிக்ஸ் டயஸ்: இல்லை ஐயா. நான் அப்படியல்ல.

திரு. அமிர்தலிங்கம்: நீர் செய்தீர், ஏன் இரத்தக்களரியை ஏற்படுத்துமளவிற்கு எச்சரிக்கை விடுத்தீர்.

திரு. பிலிக்ஸ் டயஸ்; இல்லை ஐயா.

திரு. அமிர்தலிங்கம்: நான் சரியான நேரத்தில்உம்மைப் பிடிப்பேன்.

நமக்கும் சுதந்திரக்கட்சிக்குமிடையில் உள்ளஉடன்பாட்டுக்கு விரோதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி எமது தலைவர் 1960 நவம்பர் 29ம் திகதி கடிதம் எழுதினார்.

[மேலும் இந்த உடன்பாடு பற்றிய சம்பவங்களை பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து திரு. அமிர்தலிங்கம் எடுத்துக்காட்டினார். ஒரு சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட திரு. பீலிக்ஸ் டயசைப் பார்த்து 'அமைதியின் வில்லன்' என்றார் திரு. அமிர்தலிங்கம். 'இச் சமபவங்களையிட்டு சுதந்திரக்கட்சியினர் வெட்கித்தலைகுனியவேண்டுமென்றார்' திரு. அமிர்தலிங்கம் மேலும்]

### இரண்டாவது சம்பவம்

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி இப்பொழுது கூறவிரும்புகிறேன். கூட்டரசாங்கம் தோல்வியடையப்போவதை உணர்ந்ததும் நாலு அமைச்சர்கள் எங்களிடம் விரைந்து வந்தார்கள். அவர்கள் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, ஜனாப் பதியுதீன் மாமுத், திரு. அனில் முனசிங்கா, திரு. சம்னி குணவர்த்தன ஆகியோர்.

தொம்பே பிரதிநிதி வராமைக்குக் காரணம், அவர் கூட்டரசாங்கத்தில் பற்று வைத்திருக்கவில்லை. இது ஒரு ஏமாற்று வரலாறு. சுதந்திரக் கட்சியின் இழிவான வரலாற்றின் ஒரு பகுதி இது.

திரு. பீலிக்ஸ் டயஸ்: சரியல்ல.

திரு அமிர்தலிங்கம்: மதிப்புக்குரிய தொம்பே பிரதிநிதி எதையும் செய்வார்.

1964 டிசம்பர் 3ம் திகதி இந்த நான்கு மதிப்புக்குரியவர்களும்—நான் இவர்களை 'மதிப்புக்குரியவர்கள்'என்று அழைக்கிறேன், ஆனால் அது அவர்களுக்கு பொருந்துமோ இல்லையோ—என்றாலும் சம்பிரதாயத்தின் பிரகாரம் இந்த மதிப்புக்குரிய நால்வரும்—எங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்கள். எங்கள் தலைவரிடம் போக அவர்களுக்கு துணிவு இல்லை. எனவே வாலிப அங்கத்தினர்களாகிய என்னிடமும் திருவாளர்கள் துரைரத்தினம், தருமலிங்கம், வ. ந நவரத்தினம் ஆகியோரிடம் வந்தனர். வந்து "உங்கள் கோரிக்கைகளைத் தருகிறோம், எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களை மீட்க உதவுங்கள்" என்றார்கள். இதை அவர்கள் மறுப்பார்களா?

இந்நாடகம் அன்று பிற்பகல் ஐந்து மணியளவில் நடைபெற்றது. இன்று அவர்கள் "மீனாட்சி, தோசை, வடை" என்ற பதங்களைப் பிரயோகிக்கிறார்கள். அந்த நேரத்தில் 'தோசை' நல்ல சுவையாக இரு[illegible] வேண்டும். அவர்களுக்குப் [illegible]டகி, எனவே. தமிழ்த் தோசை'க்கு வந்தார்கள். எங்கள் இளைஞர்களிற் சிலர் காசில்லாத நேரத்தில் தோசைக் கடைக்குப் போவது போல.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா: நீங்கள் எங்கே சந்தித்தீர்கள்?

திரு அமிர்தலிங்கம்: அன்றைய பிரதமரின் அறையில் சந்தித்தோம். அந்த நேரத்தில் அவர் அங்கு இல்லை. சில நிமிடங்களின் பின்னர், பிறிதொரு இடத்தில் அன்றைய தெகிவளை - கல்கிசைப்பிரதிநிதி வந்து "பிரதமர் வந்துவிட்டார் நீங்கள் அவர்களுடன் கதைக்கலாம்' என்றார். அவருடன் கதைப்பதற்கு எதுவுமில்லை யென்று நாம் கூறிவிட்டோம். நாங்கள் ஒரு முறை நம்பி ஏமாற்றப் பட்டவர்கள். மேலும் நாங்கள் 'ஒரு முறை அடிபட்டவர் இரு முறை வெட்கப்படுவார்; நாங்கள் ஒரு போதும் அவர்களைநம்பமாட்டோம்" என்றோம். நாங்கள் கேட்பதைசுதந்திரக்கட்சிஅமைச்சர் மூலம் அறிக்கையாக சமர்ப்பிப்பதாக திரு. கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார்.

### தமிழ்க் குமரியின் தகுதி

இவற்றை எங்கள் தலைவரிடம் தெரிவித்தேன். அவர் "நாம் எதையும்இழக்கலாம், ஆனால் எங்கள் நேர்மை நிலையானது. அதை நாம் இழக்கத் தயாராக இல்லை" என்றார். மீண்டும் அவர்களை சந்தித்ததும் எமது தலைவரின் முடிவைக் கூறினேன். இது 1963 டிசம்பர் 3ம் திகதி நடைபெற்றது.

அந்த நேரத்தில் அவர்கள் எங்கள் பின்னால் ஓடுவதற்கு நாங்கள் தகுதி பெற்றிருந்தோம். அந்த நேரத்தில் அவர்கள் மணக்க விரும்பிய 'தமிழ் குமரியி'டம் நல்லெண்ணை மணக்கவில்லை. அவள் பின்னால் சுற்றித்திருந்து அவளை மணக்க விரும்பினார்கள். இன்று அவள் வேறு யாரையோ மணந்த பின் அவளைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கூறுகிறார்கள்.

திரு. பீலிக்ஸ் டயஸ்: அப்படியொரு திருமணம் உண்டா?

திரு. அமிர்தலிங்கம்: நாட்டைச் சர்வாதிகாரத்திலிருந்து காப்பாற்றுவதற்காக மட்டும் நாம் தேசிய அரசாங்கத்தில் சேரவில்லை; நாட்டை சீனாவுக்கு விற்க விருந்த துரோகிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகவும் சேர்ந்தோம்.

திரு. பீலிக்ஸ் டயஸ்: திருமண உடன்பாட்டைப் பற்றிக் கூற முடியுமா?

ஒரு உறுப்பினர்: அதற்குக் காலதாமதமாகிவிட்டது.

### மூன்றாவது சம்பவம்

திரு. அமிர்தலிங்கம்: அந்த குமரியின் கையைப் பிடிப்பதற்கு இவர்கள் மூன்றாவது முறையாகவும் முயற்சி எடுத்த சம்பவம் ஒன்று உள்ளது. மார்ச் மாதம் 23-ம் திகதி பிற்பகலும் 24-ம் திகதியும் நடைபெற்றதைக் கூட்[illegible] பார்க்களா? திரு. அனில் முனசிங்காவும், திரு. கொல்வினும் 'அலரி மாளிகை'க்கு முன் திரண்டிருந்தவர்களிடம் 'தமிழரசுக் கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்றும் பிரதமர் விலகமாட்டார்' என்றும் கூறவில்லை யென்பதை மறுப்பார்களா? எங்களுக்குத் தூது அனுப்பியதை இவர்களால் மறுக்க முடியுமா?

திரு. பீலிக்ஸ் டயஸ்: யார் அந்த தூதுவர்கள்?

திரு அமிர்தலிங்கம்: எங்கள் கட்சித் தலைவரின் இல்லத்திற்கு அகலவத்தைப் பிரதிநிதியும் யட்டியாந்தோட்டைப் பிரதிநிதியும்—அன்றைய பிரதமர் விலக முன்னர்—வந்தார்கள். இதை மறுக்க முடியுமா? இன்று பெரிதாகக் குரல் எழுப்பும் இவர்களை நாம் நம்ப மறுத்தோம். இச் சபையின் முதல் நாள் அமர்வின் போது தொம்பே பிரதிநிதி கெட்டித்தனமான, ஆனால் ஆபத்தான ஒரு பேச்சை நிகழ்த்தினார்.

[தொம்பே பிரதிநிதியின் பேச்சை பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து வாசித்துக் காட்டிய திரு. அமிர்தலிங்கம்:] 'இத்தகைய ஒரு எச்சரிக்கையை அவர்விட வேண்டியதன் அவசியம் என்ன' என்று வினவி ஒரு இரத்தக்களரியை உருவாக்க அவர்கள் முயற்சிக்கின்றார்கள் என்றார்.

1958-ல் அன்றைய பிரதமர் வானொலியில் நிகழ்த்திய பேச்சைப் பற்றி எமக்குத் தெரியும். அன்றைய பிரதமரின் பேச்சைக் கண்டித்த இடதுசாரி[க]ளும் இன்று அவர்களுடன் இணைந்துவிட்டார்கள்.

(சபை மறுநாள் காலை 10 மணி வரை ஒத்திவைக்கப் பட்டது. மீண்டும் மறுநாள் காலை சபை கூடிய பொழுது திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசினார்.)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும், கூட்டரசாங்கத்தில் இணைந்தவர்களும், கடந்த தேர்தலுக்குப் பின்னர் அத்தனகலைத்தொகுதி உறுப்பினரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை மீண்டும் பிரதமராகக்கொண்ட ஓர் அரசை அமைக்க இச்சைப்பட்டவர்களும், நான் சார்ந்த தமிழரசுக்கட்சியின் உதவியை எவ்வாறு நத்திவந்தார்கள் என்பதை நேற்று சபை ஒத்திவைக்கப்படும் வேளையில் கூறினேன். 1960ம் ஆண்டு மார்ச்சுமாத தேர்தலின் பின்னர் ஏற்பட்ட நிலைமையுவிளக்கும்பொருட்டு 'ஹன்சார்டு' புத்தகத்திலிருந்து இரு பந்திகளை வாசித்துக்காட்டுகிறேன். தொம்பே தொகுதிபிரதிநிதியான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காபேசும்போது அவர் விட்ட தவறைச் சுட்டிக்காட்ட இடைமறித்த காங்கேசன்துறை உறுப்பினர் திரு. செல்வநாயகம் கூறியதாவது:-

'குடியுரிமை பிரச்சினை சம்பந்தமான 3வது குறியீடு நிராகரிக்கப்பட்டது என்று கூறினேன். 4வது குறியீடு சிலருடைய பிரதிநிதிகளை நியமிப்பது சம்பந்தமானது என நான் தெரிவித்தேன், நான்கு பேரையல்லாமல் இருவரைமட்டும் நியமிக்கலாமென்று நீங்கள் கூறினீர்கள். பிரதேச சபைகள்சம்பந்தமான முதலாவதுகுறியீடுபற்றி நீங்கள் கூறுகையில், மாவட்டசபைகளை அமைப்பதற்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்துவதே உங்கள் நோக்கம் எனக் கூறினீர்கள். 2 வது குறியீடான மொழிப்பிரச்சினையில் நாங்கள் தெரிவித்தபடியே செயலாற்றுவதற்கு விருப்பந் தெரிவித்தீர்கள்.' — (உத்தியோக அறிக்கை, 23, நவம்பர், 1961-தொகுதி- 45, பி இ, 1824-25.)

1960ம் ஆண்டு மார்ச்சு மாதம் நாங்கள் சுதந்திரக் கட்சிக்கு விடுத்த நான்கு அம்சத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு உடன்பாடு இருந்தது என்பதை காங்கேசன்துறை உறுப்பினர் தெளிவாக்கியிருக்கிறார். பிரசா உரிமை பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட முதலாவது கோரிக்கையை நிராகரித்தார்கள் எனினும் ஏனையவற்றை சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டனர்.

### 'செல்வா நேர்மையாளர்'

இந்தவிவாதத்தில், தொம்பே பிரதிநிதி திரு. டயஸ்

(12-ம் பக்கம் பார்க்க)

## தேசியத்தையும் மொழியையும் தமிழரசார் மறக்க மாட்டார்கள்


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழிந்து அசதி, சோம்பல் மேல் கால், கை, மனுக்கவில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். இலகானம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர்: 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்கத்தில் அங்கத்துவம் பெற பீலிக்ஸ் முயன்றார்"

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா உரை நிகழ்த்தும்போதுஎத்தகைய ஒரு உடன்பாட்டுக்கும் அவர்கள் ஒத்துக்கொண்ட உண்மையை மிகுந்த சிரமத்துடன் மறுப்பார் என நான் கருதுகிறேன். காங்கேசன்துறை பிரதிநிதியின்பேச்சை யிட்டுக் குறிப்பிடும்போது திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா என்ன தெரிவித்தார்என்பதை ஹன்சார்டை வாசித்தே காண்பிக்கிறேன்.

'நாங்கள் எதிலும் இரு கருத்துக்கூறுபவர்களல்ல. ஒன்றையேதான் மீண்டும் கூறுகிறோம். காங்கேசன்துறை பிரதிநிதி கூறியதையே நானும் கூறுகின்றேன். இதுபற்றி மறுதலிப்பு வேண்டியதில்லை. காங்கேசன்துறை பிரதிநிதி வெகு பலரைவிட நேர்மையாளர். அவரைப் புரிந்து கொள்ளுவதில் எனக்கு எள்ளளவு சிரமமும்கிடையாது.'

[—உத்தியோக அறிக்கை, 23, நவம்பர், 1961, தொகுதி: 45 சி 1925 )

காங்கேசன்துறை பிரதிநிதியை' நேர்மையாளர்—அவரைப் புரிந்துகொள்ளுவதில் சிரமமில்லை என்றுகூறிய தொம்பே பிரதிநிதி தமது உரையின்போது மேற்படி உடன்பாட்டை மறுப்பதுடன், காங்கேசன்துறை பிரதிநிதி கூறியது தவறு என்றும் கூற முற்படலாம் என்பதனுலேயே நான் தொம்பே பிரதிநிதியின் பேச்சைவாசித்துக்காண்பித்தேன்.

### அவசரகால நிலைமை

இனத்துவேசமே இந்நாட்டின் வளர்ச்சியை முறியடிக்கும் முட்டுக்கட்டையாக விருந்து வருகிறது என்பதை சமசமாஜக்கட்சித் தோழர்களும், கொம்யூனிஸ்ட்கட்சித் தோழர்களும் ஒப்புக்கொள்ளுவர். கடந்த ஒன்பது ஆண்டுகாலமும் இனபேத உணர்ச்சிகளே வளர்ந்தமையினுல் பல இனக்கலவரங்களும் ஏற்பட்டதைக் கண்டோம். கடந்த ஒன்பது வருடகாலங்களிலும் ஆட்சி புரிந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் வகுப்புவாதத்தினுல் எழுந்த இனக்கலவரங்களை அடக்கவும் அமைதியை நிலைநாட்டவும் பலதடவைகளில் அவசரகால நிலைமையினை பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது. ஆகவே உண்மையான முன்னேற்றம் கடந்த காலங்களில் ஏற்பட முடியவில்லை. தேசிய அரசாங்கம் தேசிய ஒற்றுமையையும் சௌஜன்ய உறவையும் ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளைக் கையாள முற்பட்டுள்ளது. ஏனெனில் இத்துறையில் செயற்பட்டால்தான் இந்நாடு பொருளாதார அபிவிருத்தி அடைய முடியும். அபிவிருத்திக்கான அடிப்படைபெறப்பட்டுவிட்டால் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பட கஷ்டம் எதுவும் இருக்காது.

### கெனமன் கேட்கும் கேள்வி

1956ம் ஆண்டு மொழிச் சட்ட விவாதங்களின்போது கௌரவ சமசமாஜ, கொம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் யாவரும் மொழிச்சட்டத்தின் சில சரத்துக்கள் வகுப்புவாத அடிப்படையில் எழுந்தவை என்று சுட்டிக்காட்டி, அபிவிருத்தித் திட்டங்களை இவை எங்ஙனம் பாதிக்கும் என்பதையும் எடுத்தியம்பினர். ஆனல் இன்று—நிப்வான் விங்கிளைப்போன்று—கொழும்பு மத்தியின் மூன்ருவது பிரதிநிதியான திரு. பீட்டர் கெனமன், 'தமிழரசுக்கட்சியினர், தமிழ்பேசும் இனம் இழந்த உரிமைகளையிட்டு குறிப்பிடுகின்றனரே, அவர்கள் இழந்துவிட்ட உரிமைகள்தான் யாதோ' என்று வினவத் தலைப்பட்டுள்ளார். உண்மையில்அவர் இறுதி மரியாதைகள் என்ற பதத்தைத்தான் உபயோகிக்க எத்தனித்துள்ளார் போலும்.

சர்வாதிகார அரசாங்கம் ஒன்றினை நிறுவ எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எடுத்த முயற்சியினை முறியடித்து 'இறுதி மரியாதை' செலுத்தவே தேசிய அரசாங்கம் இன்று முனைந்துள்ளதுஎன்று நான் நம்புகிறேன்.

'நீங்கள் இழந்த உரிமைகள் என்ன' என்று கேட்கிறார் திரு. பீட்டர் கெனமன். அவருடைய கட்சித் தோழர்கள் பேசிய பேச்சுத் தொகுதிகளனைத்தையும் வைத்துள்ளேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்ததால் மாண்டு விடாமல் இன்றும அவர்களுடைய கட்சி உயிருடன் இருக்குமானுல், தாங்கள் இழந்த உரிமைகளையிட்டு அவர்கள் தோழர்கள் முன்னைய விவாதங்களில் கூறிய கருத்துக்களை வாசித்துப் பார்த்து அறிந்துகொள்ளட்டும்.

### தோழர் கந்தையா கூறியவை

கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முன்னுள் பருத்தித்துறை உறுப்பினர் திரு. பி. கந்தையா தெரிவித்த கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"இலங்கை குடிமகனையான் என்னுடைய மொழியை எனது வாழ்க்கையிலும், அரசாங்கத்துடன் கொள்ளும் தொடர்புகளிலும் பாவிப்பதற்கு உள்ள உரிமைகளையிட்டு என்ன சங்கடங்கள் குறுக்கிட முடியும்? தமிழ் பேசுவோனுகிய எனக்கு எனது தாய் மொழியை உபயோகிக்கும் உரிமையை மறுப்பீர்களானுல், எனது உரிமைகள், உடமைகள் யாவற்றையுமே மறுப்பதாகும்".

(உத்தியோக அறிக்கை 11 ஜூன் 1956; தொகுதி 24 இ-1189)

தோழர் கந்தையாவின் கூற்றை தோழர் கெனமன் பரிசீலனை செய்து பார்க்கட்டும். தமிழ் பேசும் மக்களிடமிருந்து பிடுங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் என்ன என்பது புலனுகும் அவருக்கு.

திரு. கெனமன் தன்னுடைய மூதாதையர்களின் நாடான நெதர்லாந்துக்கு யாத்திரை போய் மீண்டுள்ளார் போலும்—இத்தகைய வினுவை எழுப்புதற்கு. கடந்த ஒன்பது ஆண்டுகளிலும், திரு. கெனமனும், அவருடைய கட்சியும், சமசமாசக் கட்சியும் பொது மேடைகளில், சகல இனத்தவர்களின் உரிமைகளுக்காகவும் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுக்காகவும் போராடுகிறோம் என்று கூறி வந்தனவே. அப்படியிருந்தும் இன்று எமது நண்பர் திடீரென 'நீங்கள் இழந்த உரிமைகள் என்ன' என்று கேட்கிருரே! கடந்த ஒன்பது ஆண்டுகளிலும் தமிழ் பேசும் இனத்தவர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை இழந்ததுமன்றி' பயமின்றி வாழும் உரிமையையும் இழந்தார்கள் என்பதை திரு. கெனமன் அறியாரா? மறுக்க முடியுமா இதை? கடந்த ஒன்பது ஆண்டுகளில், சிறுபான்மை இனத்தவர்கள் சகல துறைகளிலும் சமசந்தர்ப்பம் பெறும் உரிமைகளையும் இழந்தார்கள் என்பதனையும் மறுக்க முடியுமா? சாதாரண மனிதனின் அடிப்படை உரிமைகள் தானும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. இப்படியிருந்தும் திரு. கெனமன் 'நீங்கள் இழந்தவை என்ன' என்று கேட்கிருர்.

### மொஸ்கோ செல்ல உரிமை

நியமனப் பிரதிநிதியான திரு. தொண்டமான் இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் திரு. சாத்திரிஅவர்களைக் கண்டு வந்ததையிட்டு ஆட்சேபம் தெரிவிக்கும் தோரணையில் திரு. கெனமனும் டாக்டர் எஸ். எம். [illegible] இவர்கள் இருவரும் அடிக்[illegible] கைக் குளறுபடிக்குத் தீர்வு காண அடிக்கடி போய் வருகின்றனரே. ஸ்டாலினுக்குப் பின்னர் மலங்கோவும, அவருக்குப் பின் குருச்சேவும், பின்னர் இன்று கோசிஜினும் சோவியத் ருசியாவின் பதவி மாறிய வேளைகளிலெல்லாம் மொஸ்கோவுக்கு யாத்திரை புறப்பட்டுச் சென்று கொள்கை விளக்கம் பெற இவர்களுக்கு உரிமைகள் இருக்குமானுல் நியமன உறுப்பினரான திரு. தொண்டமானுக்கு இந்தியப் பிரதமரை மட்டுமல்ல, அவர் விரும்பினுல் உலகத்தின் எந்நாட்டுப் பிரதமரையும் போய்ப் பார்த்துவிட்டு வர ஏன் உரிமையில்லை என்று கேட்கவிரும்புகிறேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் இனத்தவர்களான எமக்கு இந்த உரிமையும் மறுக்கப்பட்டுள்ளதா? அக்குறைசைப் பிரதிநிதியான டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு மா-சே-துங்கையும், கோசிஜினையும் போய்ப் பார்க்க உரிமையிருக்குமானுல், நியமனப் பிரதிநிதியான திரு. தொண்டமான் திரு. சாத்திரியையோ அல்லது அயூப்கானையோ ஏன் போய்ச் சந்திக்க முடியாது? கொழும்பு மத்தியின் மூன்ருவது பிரதிநிதிக்கு எங்கோ ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது என்று நான் நம்புகிறேன்—

தமிழரசுக் கட்சி ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை வளர்க்கவே பாடுபடுகிறது என்றும் அவர் கூறமுற்பட்டார். எமது கட்சி ஆங்கிலத்துக்காகப் பாடுபடவில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். சிங்களம் எவ்வாறு சிங்கள மக்களுக்குத் தேவையோ, தமிழ்பேசுவோருக்குத் தமிழ் தேவை என்பதையே நாம்பன்முறையும் வலியுறுத்திவருகிறோம்.

### குறையும் கெனமனின் செல்வாக்கு

இன்று கொழும்பு மத்தியின் மூன்ருவது பிரதிநிதியாக விருக்கும் திரு. கெனமன் முன்பு இத்தொகுதியின் முதலாவது உறுப்பினராகவிருந்து, பின்னர் இரண்டாவதாகி, இன்று மூன்ருவது இடத்துக்கு வந்து விட்டார். விரைவில் அந்த ஸ்தானத்தையும் முற்ருக இழந்து விடுவார். விரைவில் அவர் தமது இன்றையத்தாய் மொழியான ஆங்கிலத்தையுமே மறந்து விடுவார். அவருடைய மூதாதையர்களின் டச்சு மொழியையும் அவர் மறந்து விடுவார். ஆனல் அவர் எங்களின் போராட்டத்தின் நோக்கத்தையிட்டு எங்களுக்கு புத்தி கூறுதிருக்கட்டும்; தேசியத் தன்மையினை இழந்துவிட்ட கட்சியல்ல எங்கள் கட்சி.

எங்களுடைய மொழி பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றில் பற்றுக் கொண்டவர்கள் நாங்கள். எங்கள் மொழியை மறந்து வேற்று மொழிக்கு விமோசனமளிக்க முற்படுபவர்களல்ல நாங்கள்.

திரு. பி. எம். கே. தென்னக்கோன்—(மிகிந்தலை) —ஆனல் நீங்கள் மட்டும் ஆங்கிலத்தில் பேசுகின்றீர்கள்!

திரு. அமிர்தலிங்கம்!—

கௌரவ உறுப்பினர் [illegible] உங்களில் பெரும் பாலோருக்கு தமிழ் தெரியாது என்பதனுலேயே ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துகிறேன். மிகிந்தலை பிரதிநிதிக்கு தமிழ் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அவரும மதவாச்சி பிரதிநிதியும் தமிழ் பேசத் தெரிந்த குற்றத்துக்காக வெகுவிரைவில் அவர்களுடைய கட்சியிலிருந்துதுரத்தப்படவும்கூடும்.

தமிழுக்கு இந்நாட்டில் உரிய அந்தஸ்தை அளிக்கும்படி தான நாம் கோரிவருகிறோம.

### பிலிப்பைப் பார்த்து சிறவேண்டாம்

இன்று ஏற்பட்டுள்ள அரசாங்கத்தை தேசிய அரசாங்கமாகக் கொள்ளலாகுமா என்று எதிர்க்கட்சி நண்பர்கள் வினுவெழுப்புகின்றனர். வகுப்புவாத அடிப்படையில் செயற்பட்ட கடந்த கால ஆட்சியைப் போன்றல்லாது இது ஒரு தேசிய அரசாங்கமேதான். இந் நாட்டிலுள்ள சகல இனத்தவர்களினதும் சகல மதத்தவர்களினதும், சகல வகுப்பினரதும் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளமையினுல் இது ஒரு தேசிய அரசாங்கமேதான். வர்க்கப் போராட்டங்களில் ஈடுபட்டுழைத்தவரான மார்க்சிய வாதியையும் இந்த அரசாங்கம்தன்னகத்தே கொண்டுள்ளது.(குறுக்கீடுகள்) கௌரவ கைத்தொழில் மீன்பிடி இலாகா அமைச்சரான திரு. பிலிப்குணவர்த்தனு அரசாங்கத்தைச் சார்ந்துள்ளமையினால் நண்பர்கள் அவரின் மீது சீற வேண்டாம்.

திரு. அனில் முனசிங்கா: நீங்களே முன்பு அவர் மீது சீறினீர்களே!

திரு. அமிர்தலிங்கம்!— அவருடைய நிலைமையில் எதுவும் தப்பாகவில்லை. 1960ம் ஆண்டு மார்ச் மாதம் இதே நிலையில் இந்நாடு தவித்த வேளையில் திரு. பிலிப்குணவர்த்தனு ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க முயன்றவர்.

திரு. அனில்முனசிங்கா: அப்பொழுது நீங்கள் அவரைப் புகழவில்லை.

சபாநாயகர்:—அவர் தன்னுடைய உரையை முறையாக நிகழ்த்த விடுங்கள். அல்லது அவர் நேரத்தை வீணுக்கக் கூடும்.

திரு. அமிர்தலிங்கம்: அன்று ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க திரு. பிலிப்குணவர்த்தனு தேசிய அரசாங்கத்தை நிறுவுவதே சிறந்ததெனக் கருதினுர். இன்று அவர் எண்ணம் உரிய வேளையில கைகூடி விட்டது.

### பீலிக்சும் முயன்ருர்

கௌவர தொம்பே உறுப்பினரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அரசாங்கத்துக்குள் புகுந்து விட முயன்றிருக்கிருர். பிரதமரை சில கட்டத்தில் அவர் அணுகியதாகவும் அறிகிறேன்.

திரு டி. சொய்சாசிறிவர்த்தன:- இல்லை

திரு. அமிர்தலிங்கம்: ஆம்! அவர் தொடர்பு கொண்டார். அதை மறுக்க முடியாது.

திரு. சி. மு. இராசமாணிக்கம்: இரகசியமாக...

திரு. அமிர்தலிங்கம்: ஆனல் அது நடைபெறவில்லை. ஏனெனில் பிரதமருக்கு யார் மீது நம்பிக்கை வைப்பது என்பது தெரியும்.

திரு. டி. சொய்சா சிறிவர்த்தன: எதிர்மாருக நடைபெற்றிருக்கலாம.

திரு. அமிர்தலிங்கம்:- தன்னுடைய முதுகில், பொறுப்பான வேளையில் குத்தியவர்

(14-ம் பக்கம் பார்க்க)


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம்படிக்க சென்னை வந்தவன் சினிமாவில் நுழைந்து விட்டேன்

## புரட்சி நடிகரைப் போன்ற புதுமுகம் ஜெய்சங்கர்

**இளமைத் துடிப்பும், அழகும், அளவான அங்க அமைப்புகளும் கொண்ட புதுமுகம் ஜெய்சங்கர், தான் எப்படி சினிமா உலகில் புகுந்தார் என்பதை விளக்குகிறார். புரட்சி நடிகரின் சாயலைப் பெற்றுள்ளவரான இவ்விள நடிகர் அவரைப் போலவே சண்டைக்காட்சிகளிலும் சிறப்பாக நடித்து வருகிறார்.**

சட்டத்துறையில் என்னை பயிற்சிபெற அனுப்பவேண்டும் என்பது எனது தகப்பனாரின் ஆசை. அவரே ஒரு முன்னாள் நீதிபதி. திருநெல்வேலிதான் நான் பிறந்த ஊர்.



தந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் தான் சென்னை நியூகாலேஜில் சேர்ந்து இன்டர்வரைபடித்தேன். பின்னர் விவேகானந்தா கல்லூரியில் புகுந்து பி. ஏ. பட்டம் பெற்றபின்னர் சட்டக் கல்லூரியில் நுழைந்து ஒருவருடம் சட்டம் படித்தேன்.

இந்தக்காலத்தில் தான் புதுடில்லியிலிருந்து உத்தியோக அழைப்பு கிடைத்தது. அரசாங்க அலுவலகம் ஒன்றில் பணிபுரியலானேன். இடையில் லீவு எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்திருந்தபோது நண்பர்களின் தூண்டுதலின்பேரில் நாடகங்களில் நடித்தேன். நான் நடித்த 'ஆடிய அரசு' என்ற நாடகத்தை பல சினிமா உலகப் பிரமுகர்களும் பார்த்து இரசித்தனர்.

எனது மேடை நடிப்பை புரட்சிநடிகர் எம். ஜி. ஆர்., ஏ. என். சீனிவாசன், நாகிரெட்டி ஆகியோர் வெளிவெளியாகவே பாராட்டிப் பேசினார்கள் 'நன்றாகநடிக்கிறீர்கள், முன்னுக்கு வரவும் வாய்ப்பிருக்கிறது', என்று புரட்சி நடிகர் கூறினார். பட உலகத்தில் புகழ்வாய்ந்தவர்கள் மதிப்பித்த பாராட்டுக்களினால் எனக்கும் ஆசை மூண்டது. 'நாமும் ஏன் சினிமாவில் நடிக்கமுடியாது', என்று எண்ணமிட்டேன். இந்த ஆசை உண்டானதும் எனது தந்தையின் ஆசையும் தவிடுபொடியானது. எனது வேலையையும் விட்டுவிட்டேன்.

இசை அமைப்பாளர் டி. ஆர். பாப்பாதான் என்னை ஜிட்டாடல்ஸ் உரிமையாளர் திரு. ஜோசப் தளியத்திடம் அறிமுகம்செய்துவைத்தார். திரு. தளியத்திடம் எனது நாடக நடிப்பு முறைகளை நடித்துக் காண்பித்தேன். 'மேக் அப் டெஸ்ட்'டும் நடைபெற்றது. அவருடைய தயாரிப்பான 'இரவும் பகலும்' படத்தில் கதாநாயகனாக நடிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

திரட்டியவர்:
சென்னையிலுள்ள
**நமது நிருபர்**

மேடை நாடகங்களில் தோன்றி நடித்த எனக்கு சினிமாவில் நடிக்ககூச்சமோ உதறலோ ஏற்படவில்லை. என்றாலும் எனது நடிப்பையிட்டு இரசிகர்கள் என்ன கருதுகிறார்களோ என்றே பயந்து போயிருந்தேன். ஆனால் எனது முயற்சி வீண் போகவில்லை. முதல்படத்திலேயே எனது நடிப்பை இரசிகர்கள் பாராட்டத் தலைப்பட்டு விட்டனர்.

'இரவும் பகலும்' படத்தில் எனக்குக் கிடைத்த புகழ்மூலம் ஏ. வி. எம். முதற்கொண்டு பல பிரபல கம்பெனிகள் எனக்கு சந்தர்ப்பமளிக்க முன்வந்துள்ளன. இவற்றிலெல்லாம் கதாநாயகனாகவே தோன்றுகிறேன்.


சிறந்த நடிகன் என்று பெயர் வாங்கிவிடவேண்டுமென்பதே எனது ஆசை. இதற்காக வேறுபல பிரபலமான நடிகர்களைப்போலவே தான் நடிக்கவேண்டும் என்று நான் கருதுவதில்லை. ஆங்கிலசினிமாப்படங்களைப் பார்த்துவருகிறேன். ஆங்கில நடிகர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தனிப்பாணியைக் கடைப்பிடிக்கின்றனர் அதுபோலவே நாமும் தனியான ஒரு பாணியை எமக்காகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாட்டம் கொண்டு அதன்படிமுயன்று வருகிறேன். எனது முயற்சி வீண்போகாது. வக்கீலாக வரவேண்டிய நான் நடிகனாகிவிட்டேன். இத்துறையில் எனது வெற்றிக்கு இரசிகர்களே நல்லாசியை நல்க வேண்டும்.

## உதவிநிதிக் காட்சி

அகில இலங்கை உதைப் பந்தாட்ட மத்தியஸ்தரான தம்பையா மரியாம்பிள்ளை அல்பிரட் பொன்கலன், அவர்கள் உலக தேசிய உதைப் பந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சிக்காக இம் மாதம் 24-ம் திகதி இங்கிலாந்துக்குச் செல்கிறார்.

அவரின் பயிற்சி நிதிக்காக இம் மாதம் 9-ம் திகதி காலை 10 மணிக்கு செலிட்டி படமாளிகையில் 'கூண்டுக் கிளி' என்னும் படம் காண்பிக்கப்படும்.

இப் பயிற்சிக்காக இலங்கையில் இருந்து செல்பவர் இவரே முதலானவர் ஆவர்.



புதுமுகங்களின் காந்தக் கண்கள் ஒன்றை ஒன்று கவ்வி இழுக்கும் காட்சியைக் கண்டு செய்வதறியாது கலங்கி நிற்கிறார் போலும் நமக்கு பல தடவைகளில் பழக்கப்பட்டுவிட்ட அசோகன். என்டர்டெயின் மென்ட்ஸ் திரைகளுக்கு வரும் சிட்டாடல் 'இரவும் பகலும்' படத்தில் புதுமுகங்களான ஜெய்சங்கரும், வசந்தாவும், அசோகனும்.

## உதவாக்கரை மாப்பிள்ளையின் நிபந்தனைகள்

ஊரிலே பெரிய மனிதர் என்று பெயர் வாங்கிய வரதராஜனுக்கு உதவாக்கரை மைத்துனன் ஒருவன் வந்து வாய்த்துவிட்டான். வீட்டிலே தனது அக்காளிடம் போடும் ரகளை போதாதென்று ஊரிலேயும் அவனுடைய வாலாட்டம் அளவுக்கு மிஞ்சிவிட்டது. வரதராஜனுக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம்சென்று எப்படியாவது சாக்குப்போக்குச் சொல்லி பணம் பறித்து விடுவான். அவனால் ஏற்படும் அவமானங்களைச் சகிக்கமுடியாமல் வரதராஜன் திண்டாடினார்.

எப்படியாவது ஒரு கலியாணத்தைப் பண்ணி வைத்துவிட்டால் மைத்துனனின் கொட்டத்தை அடக்கிவிடலாம் என வரதராஜன் முயன்றார். அவனுக்குப் பெண் கொடுக்க எவர் சம்மதிப்பர்?

இதற்கிடையில் இந்த உதவாக்கரை மாப்பிள்ளை, தனக்கு பெண் கொடுப்பவர்களுக்கு நிபந்தனையும் விதிக்கத் தலைப்பட்டுவிட்டான்.

அவனுடைய நிபந்தனைகள்:-

பெண்ணுக்கு நிறைய சொத்து இருக்கவேண்டும்.

வீட்டுக்கு ஒரே பெண்ணாக இருக்கவேண்டும்.

வாய்க்கப்போகும் மாமனாரோ சாகேட்கும் வயதினராக விருக்கவேண்டும்.

வரதராஜனின் நண்பரும் பிரபல ஹோட்டல் முதலாளியுமான சர்மா என்பவர் இந்த நிபந்தனைகளைக் கேட்டு வாயைப் பிளக்கிறார்.

இந்தக்கட்டம் பட்டு பிலிம்சாரின் முதலாவது தயாரிப்புக்காக சாரதா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. உதவாக்கரை மாப்பிள்ளையாக நாகேஷ் தோன்றுகிறார் வரதராஜனாக வி. கே ராமசாமி நடிக்கிறார். சிவாஜிகணேசன், தேவிகா, ராஜஸ்ரீ, சகஸ்ரநாமம், சீதாலட்சுமி முதலியோர் நடிக்கும் இப்படத்தின் கதைவசனம் எஸ். பாலசந்திரனுடையது.

கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் எழுத விஸ்வநாதன் இராமமூர்த்தி இசை அமைத்துள்ளார். ஒளிப்பதிவை கர்ணன் கையாள பி. மாதவன் டைரக்ட் செய்கிறார்.

## கலைப் பூஞ்சோலை

### இசை மேதை ஜி. என். பி. மறைந்தார்

சங்கீதத்துறையில் தென்னகத்தில் கடந்த 35 வருடங்களாக சுடர்விட்டுப் பிரகாசித்த இசை மேதை சங்கீத கலாநிதி ஜி. என். பாலசுப்பிரமணியம் தமது 55 வது வயதில் மே 1ம் திகதி காலமானார். சில காலமாக இருதய நோயினால் பீடிக்கப்பட்டு திருவனந்தபுரம் ஆசுபத்திரியில் சிகிச்சை பெற்று வரும் காலையில் அவர் உயிர் பிரிந்தது.

ஜி. என். பி. இசைத் துறையில் மட்டுமல்ல கல்வியிலும் சிறந்தவர். கலைப்பட்டதாரியும் கூட. தனக்கென ஒரு புதுப் பாணியை அமைத்துக் கொண்டு கர்நாடக இசை உலகில் ஓர் ஒப்பற்ற வித்வானாக விளங்கினார். திருவனந்தபுரம் சமஸ்தானத்திலும் எட்டயபுரம் சமஸ்தானத்திலும் திரு. ஜி. என். பி. சமஸ்தான வித்வானாக விருந்துள்ளார்.

கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமியுடன் 'சகுந்தலை' தமிழ் சினிமாப் படத்தில் [illegible] இவர் நடித்திருந்தார்.

### கண்டி ராஜன் கதை

கண்டியின் கடைசி மன்னனை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் வரலாற்றின் சரித்திர பூர்வமான சம்பவங்களனைத்தையும் தொகுத்து, கொழும்பு சிவசக்தி கலை அரங்கினர் நாடகமாகத் தயாரித்து வருகின்றனர். சரித்திரச் சான்றுகள் அனைத்தும் கொண்ட இந்நாடகம் மாணவ மாணவியருக்கும் பெரிதும் பயன்படத் தக்க வகையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. சிவசக்தி கலை அரங்கின் செயலாளரான திரு. ஆர். ஜேகசோதி அவர்களே மேடைக்கேற்ற கதை அமைப்பு வசனம் பாடல்களை அமைத்துள்ளார்.

நடிப்புத்துறையில் முன்னணியில் நிற்கும் பல நடிக நடிகையர்கள் சேர்ந்து நடிக்கும் இந்நாடகம் கொழும்பில் முதன் முதலில் ஒரு திறந்த வெளி அரங்கில் மேடை ஏற்றப்படுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுவருகிறது.

காட்சி அமைப்பு, ஒளி, ஒலி முதலிய வற்றில் பல புதுமுறைகள் புகுத்தப்படுவதால் இந் நாடகம் ஓர் உயர்ந்த ரக நாடகமாக இருக்கும் என்று சிவசக்தி கலை அரங்கின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### "மலர்ந்தும் மலராத"...

"விடிவு தோன்றக் கூடு[illegible] நம்பிக்கையின் வாயில் நிற்கும் தமிழினத்தின் இளைஞர்கள் பழம்பெருமை மிக்க எங்கள் பாரம் பரியத்தையும், இயல், இசை, நாடகம் ஆகிய முத் தமிழையும் கண்[illegible] போற்றி வளர்ப்பார்கள்".

இவ்வாறு திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் 11-4-65-ல் யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக் கழக மாணவரின் "மலர்ந்தும் மலராத" என்ற நாடகத்திற்கு ஆசி வழங்குகையில் குறிப்பிட்டார்.

இந்நாடகத்தின் கதை—வசனம்—டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை திரு கே. எம். வாசகர் ஏற்றிருந்தார். சென்ற மாத முற்பகுதியில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் அரங்கேறி புகழ்ட்டிய இந்நாடகம் யாழ்நகர் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது.



கடந்த இரு வாரங்களாக கொழும்பு லிபர்ட்டி திரையில் நகைச்சுவை விருந்தளிக்கு 'ரொபினும் ஏழு ஹூடுகளும்' (ROBIN AND THE 7 HOODS) ஆங்கிலப் படத்தில் ஒரு காட்சி. இப் படத்தில் பிராங்க்சினட்ரா, டீன்மாட்டின், சாமிடேவிஸ், பிங் குராஸ்பி முதலானோர் தோன்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசன் உள்ளம்

# வீரத்தின் உறைவிடம் எழுச்சியின் பிறப்பிடம்

'எழில் இறை'

வீரம் என்பது வெறும் உடற் பலத்தை மட்டும் குறிப்பதல்ல. உள்ளத்தில் பிறக்கும் துணிவே வீரமாகக் கருதப்படுகிறது. கூர் வாளேந்திப் போர் செய்து குவலயம் ஆண்டவனையும் பார் முழுதும் தன் பாங்கான எழுத்து வன்மையால் மக்களை ஒங்கியெழச் செய்தவனையும், புதுமைக் கருத்துக்களைப் பொங்கும் வார்த்தைகளால் எங்கும் மக்களுக்கு எடுத்துக் காட்டினவனையும் வீரர் என்றே நாம் போற்ற வேண்டும்.

வீரம், இயற்கையாய் உயிர்களிடத்து உறைவிடமாய் உள்ளது என்பதைக் குறிக்க, "கோழியும் தன் குஞ்சுதனைக் கொல்லவரும் பருந்தைச் சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவி" என்கிறார் கவி.

கவிஞர் முதன் முதலாகப் பாடிய பாடலிலேயே வீரத்திற்கு இடம் கொடுத்திருக்கின்றார். வீரம் உள்ளவன் நெஞ்சிடை, சக்தியம்மை நடம்புரிவாள் என்கிறார்.

"ஒரு வாளைச் சுழற்றும்
விசையினிலே—இந்த
வையம் முழுதும்
துண்டுசெய்வேன்—என
நீள இடையின்றி
நீ நினைத்தால்—அம்மை
நேர்ப்படுவாள்
உன்றன் தோளினிலே."

## வீரப் பெண்கள்

மெல்லிடை மங்கையர் ஆனதால் அவரிடை வலிமையில்லை என்று சிலரிடை எண்ணமுண்டு. ஆனால், மாதர் நெஞ்சிடை அஞ்சாத வன்மையுண்டு. அவர்களிடம் வெற்றிகொள் வீரத்தன்மையுண்டு.

காதலித்தவனைச் சாதற் களத்திற்கு எடுத்துச்செல்லக் கட்டளை பிறப்பித்துள்ளான் பெண்ணைப் பெற்றவன். அந்தஸ்தில் குறைந்த ஓர் ஆணழகன் மேல் அன்பு கொண்ட காரணத்திற்காக அவ்வணங்கு மேலும்குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கூண்டில் ஏறிநிற்கும் அக்குலமகள் முன் அதிகாரமும், ஆணவமும், ஆற்றல் மிக்க படையும், கூர் வாளும், கொலை வேலும் அடக்கி நிற்கின்றன. அவற்றைக் கண்டு அணுவளவேனும் அஞ்சவில்லை அச் சென்னிற மேனியாள்.

"சாதல் எனில் இருவருமே
சாதல் வேண்டும்
தவிர்வதெனில் இருவருமே
தவிர்தல் வேண்டும்
ஓதுகஇவ் விரண்டி லொன்று
மன்னவன்வாய்!
'உயிர்எமக்கு வெல்லமல்ல'..."

இங்கு அவளின் அஞ்சாத நெஞ்சத்திலே வீரத்தைக் காணுகின்றோம்.

உற்றதைச் செய்திட வேண்டும். இல்லையேல் உயிரினை விட்டிட வேண்டும் என்ற கொள்கைப் பற்றுடைய பெண்கள் பாரிடைப் பலருண்டு. உயர்ந்த மலையொன்று. அங்கு உச்சியில் உள்ளது அவள் வேண்டிய பச்சிலையொன்று. காதலனைக் கேட்கின்றாள் பறித்துத் தரும்படி. அவன் பார்க்கின்றான் மலையின் உச்சியை. பறிப்பதன் கஷ்டத்தை உணர்கின்றான். அங்கு ஏறுவதில் தொல்லைகள், துன்பங்கள் நிறைய உள என்பதைத் தெரிந்த அக் காதலன் ஏறுவது இயலாத காரியம் இடைஞ்சல் நிறைய உள எனக் கூறுகிறான். காதலன் செய்ய முடியாத—செய்யப் பயந்த அக்காரியத்தைத் தனித்தே தான் செய்யத் துணிகின்றாள் அத்தையல்.

"சற்றுந் தயங்கேன் தனியாயச்
சஞ் சிவிமலை
உற்றேறி மூலிகையின்
உண்மை அறிந்திடுவேன்
மூலிகையைத் தேட
முடியாவிட்டால், மலையின்
மேலிருந்து கீழே விழுந்திறக்க
நானறிவேன்"

உள்ளம் ஏற்றதைச் செய்வதில் தோற்றுவிட்டால், உயிர்விட்டிடும் உயர் வீர உள்ளத்தை இங்கு காணுகின்றோம்.

கடமையில் சலித்தவர் பெண்களல்ல, கடமை செய்யும் கணவனுயிர் இடையில் பிரிந்துவிட்டால் கலங்காது கணவனின் கடமை ஏற்று நிற்பர். அவர் உடைமை காத்து நிற்பர்.

அரசனைக் கொன்றுவிட்டு, அவன் பிள்ளையை மறைத்துவிட்டு, நாட்டை ஆளுகின்றான் கெட்ட படைத் தலைவன். இதனை அறிந்த மன்னன் மனைவி, மறைந்து சென்று, பின் மணிபுரியை அவனிடமிருந்து மீட்க முயலுகிறாள். பிள்ளையைக் கண்டு அவனுக்குப் போர்த் தொழிலும் கற்றுக்கொடுக்கின்றாள். சமயம் வாய்த்த போது. தோள் வலிமிக்க சேனாதிபதியைத் தன் வாள் வலியால் தோல்வியுறச் செய்கின்றாள். வெட்டுக் காயத்தோடு ஓடிய சேனாதிபதியின் வேடத்தை வந்திருந்த வேந்தர்க்கு விளக்குகின்றாள்.

"பெற்றெடுத்த தாய்க்
குலத்தைப் பெண்குலத்தைத்
துட்டருக்கு
புற்றெடுத்த நச்சரவை
புல்லெனவே எண்ணிவிட்டான்!
பட்டாபிசேக மனைப் பால்
குடித்தான் காங்கேயன்
தொட்டவாள் துண்டித்தேன்
தோள் திருப்பி இங்குவந்தான்"

இங்கு ஒரு தாயின் வீரத்தை நாம் காணுகின்றோம்.

## தமிழர் வீரம்

"வெள்ளம் போல் தமிழர்
கூட்டம்
வீரங் கொள் கூட்டம்"

அத்தகைய வீரம் மிக்க தமிழர் படை பல நடத்தியவர் தடை பல கடந்தவர். போர்க்களம் அன்னவர் விளையாட்டு மைதானம். எதிரிகள் தோன்றிடின்...

"மண்ணிடை வாளை யேந்திப்
பகைப்புலம் மாய்ப்ப தற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்"

முன்னைத் தமிழர்கள் முன்பு மூண்ட பகைவனை முறியடித்து வாகை சூடினர். அன்றோர் "ஆட்டு சுட்டுவிரல் கண்டே ஆடிற்று வையம்". 'புயல் நிகர் பகைமையும் வேரோடு மாளும் தமிழர்கள் சமரிடைப் புகுந்தால்" அத்தகைய தமிழர்கள் தம் நாட்டின் மேல்' தம் மொழியின் மேல், மற்றவர் மாசு கற்பிக்க முனைந்தால் விரைந்தோடி அன்னார் கொட்டம் அடக்குவர்.

"தறுக்கினற் பிறதேசத்தார்
தமிழன்பால் -என- நாட்டான்
பால்
வெறுப்புறும் குற்றஞ் செய்தா
ராதலால் விரைந்தவனுரை
நொறுக்கினர் முதுகெலும்பைத்
தமிழர்கள் என்ற சதி"

கற்பனையில் கண்டு களிக்கின்றார் கவிஞர் இக் காட்சிதனை.

தமிழரின் விழியே அன்னவர் மொழி. அமிழ்தினும் இனியது அம்மொழி. அத்தகைய கன்னல் மொழிக்கு ஊறு செய்ய யாரேனும் உளம் நினைத்தால் அவருக்கு அழிவு நிச்சயம்எனத் திடமாகக் கூறுகின்றார் கவி.

"பொங்குதமிழர்க் கின்னல்
விளைந்தால்
சங்காரம் நிசமென்று
சங்கே முழங்கு"

பிறர் எம் மேல் குறை கூறிக் கறை காண முனைந்தால், செயல் அறவே கொலைவாளினை எடடா என முழங்குகிறார் புரட்சிக் கவி.

"கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒருபுலியே உயர்
குண மேவிய தமிழா!"

தமிழரைப் பற்றி அன்னார் குணம், வீரம், எண்ணம் பற்றி மற்றையோர்க்குக் கூற விழைந்த கவி சொல்லுகிறான்.

"வெங் கொடுமைச் சாக்காட்டில்
விளையாடும் தோளெங்கள்
வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரிபோல்
கருத்துக்கள் ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து
வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்!"

பாரதிதாசன் உள்ளம் வீரத்தின் உறைவிடம். அதனால் அன்றோ அவரின் கருத்துக்கள் யாவும் எழுச்சியின் இருப்பிடமாயின.

(வளரும்)

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

# "நாட்டை துண்டாட நாம் விரும்பவில்லை"

கள் யார் என்பதை பிரதமர் நன்கு அறிவார்.

வகுப்புவாதத்தை முறியடித்து அபிவிருத்திக்கான அத்திவாரத்தை இட்டுள்ள தேசிய அரசாங்கம் இன்று அமையப்பெற்றுள்ளது.

திரு. நியல் டி. அல்விஸ்:- இன்னும் ஆறு மாதங்களின் பின்னரும் இதனைக் கூறுவீர்கள் என நம்புகிறேன்.

திரு. அமிர்தலிங்கம்:- எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் வகுப்புத் துவேஷத்தை கிளறுதிருந்தால்—அவர்கள் இதற்காகமேற் கொள்ளும் முயற்சிகளில் தோல்வியே அடைவார்கள் —தேசிய அரசாங்கம் தனதுபணியைத் தொடரும். நாடு இன்று தேசிய ஒற்றுமையை விரும்புகிறது. வகுப்புவாத இனக்குரோதங்களை ஒழிக்க தங்களாலானவற்றைச் செய்வதாக சில பௌத்த சங்கங்கள் முன் வந்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

திரு. அனில் முனசிங்க:- 1960ம் ஆண்டு மார்ச் அல்லது யூலையில் அவர்கள் கூறியது இதுவல்ல.

திரு. அமிர்தலிங்கம்:- திரு. அனில் முனசிங்க மொழிப் பிரச்சினையில் தமது கருத்துக்களை மாற்றிக் கொள்வதைப் போன்றுதான் இச் சங்கங்களும் தமது முன்னையக் கருத்தை இன்று மாற்றிக் கொண்டுள்ளன.

திரு. முனசிங்கா: இல்லவே இல்லை.

திரு. அமிர்தலிங்கம்:- நீங்கள் மாறிவிட்டீர்கள். — கெடுதியான துறையில் மாறிவிட்டீர்கள். அவர்கள் நல்ல துறைக்கு மாறி விட்டனர். அதுதான் வித்தியாசம்.

1964ம் ஆண்டு டிசம்பரில் சரிந்துவிழும் அவர்கள் ஆட்சிபீடத்தைக் காப்பாற்ற எம்மிடம் உதவி கோரினர். அதற்குமக்களின் ஒப்புதலைப் பெற்றிருந்தனரா? 1965 மார்ச்சில் எங்கள் கட்சி உதவியைப் பெற்றுக் கொள்ள முயன்றதற்கு மக்களின் ஒப்புதல் அவர்களுக்கு இருந்ததா?

ஒருகட்சி மற்றொரு கட்சியின் உதவியுடன் அரசாங்கம் அமைக்க முயல்வதில் தவறு ஏதாவது உண்டா? இரு கட்சிகள் மட்டும்உள்ள ஒரு நாட்டில் இது சாத்தியமில்லை. ஒரு ஆட்சி தோற்கடிக்கப்பட்டால் மறு தேர்தல் நடைபெறும். இங்குள்ள ஆட்சி முறையை ஒத்த பிரான்சிலும் கூட்டரசாங்கமே இன்று செயற்படுகிறது. தேர்தலின் போது ஒன்றை ஒன்று எதிர்த்துப் போராடிய பல கட்சிகள் ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணைந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தியுள்ளன.

## பிரிவினை தான் வழியா?

வலப்பனைத் தொகுதி பிரதிநிதி திரு ஹோராத், சிங்கள தேசிய அரசாங்கம் மட்டுமே இந்நாட்டில் அமைய முடியும் என்று கூறினார். அவருடைய கூற்றுக்கு [சுதந்திரக் கட்சியும், சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்ட் கட்சியும் உடந்தைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

இத்தகைய தேசியமே அவர்களுக்கு வேண்டுமானால், இந்நாடு இரண்டாகப் பிரிபடுவதைத் தடுக்க முடியாது. சிங்களத் தேசியத்தையே அவர்கள் கருதுவதானால் தமிழ் பேசுவோருக்கும் தமிழ் தேசியம் இருக்கவே செய்யும். ஒரு இனம்தன்னை ஆளும் உரிமை பெற்றிருக்குமானால், மற்ற இனமும் தன்னைத் தானே ஆளும் உரிமையும் பெற்றாக வேண்டும். எதை விரும்புகிறீர்கள்? வலப்பன பிரதிநிதி போன்றவர்கள் எந்த ஆட்சி முறையை விரும்புகிறீர்கள்? அவர்கள் உண்மையிலேயே பிரிவினையையே விரும்புகின்றனர்.

தமிழரசுக்கட்சி நாட்டைக் கூறுபோடப் பார்க்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். மதிப்புக்குரிய வலப்பனைத் தொகுதி உறுப்பினர் போன்ற ஒருவரிடமிருந்து இவ்வார்த்தைகள் வருவதனால் நான் மன்னிக்கத் தயாராயுள்ளேன். ஏனெனில் அவருக்கோ சமஷ்டிகூட்டாட்சிஅமைப்பு பற்றி எதுவும் தெரியாது. மதிப்புக்குரிய கம்பகா பிரதிநிதியான திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா போன்றவர்களும் தற்போதுதான் லஸ்கி, ஜெனிங்ஸ், டிசே போன்றவர்களின் நூல்களை படிக்க ஆரம்பித்துள்ளனர். வெகுவிரைவில் இவர்கள் சமஷ்டி அமைப்பையிட்டு அறிவார்கள். பிரிவினைக்கும் சமஷ்டிக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை என்பதனையும் அவர்கள் விரைவில் [illegible] கிறேன். உண்மையில் வலப்பனைத் தொகுதி உறுப்பினர் போன்றவர்கள் நாட்டுப் பிரிவினையை விரும்புகிறார்களேயன்றி நாங்களல்ல.

சபாநாயகர் அவர்களே! மேலும் நான் எனது உரையை நீட்ட விரும்பவில்லை. இலங்கை தமிழரசுக்கட்சியைச் சார்ந்த நாங்களும் இந்நாட்டில் சகல உரிமைகளையும் பெற்று வாழ அருகதையுடையவர்கள் என்பதை அறிவுறுத்த விரும்புகிறேன். இந்நாட்டை உண்மையில் துண்டாட நோக்கங்கொண்டுள்ள மதிப்புக்குரிய வலப்பன பிரதிநிதியைப் பார்க்கிலும் இந்நாட்டை நேசிப்பவர்கள் நாங்கள். இந்நாட்டில் வாழும் சகலரும் சகல அடிப்படை உரிமைகளும் பெற வேண்டும் என்பதற்காகவும் இந்நாடு பொருளாதாரத் துறையில் வளர்ந்து, சனநாயகப் பண்புமலரவேண்டுமென்பதற்காகவுமே இலங்கை தமிழரசுக்கட்சியினராகிய நாங்கள் இத்தேசிய அரசாங்கத்தில் இணைந்துள்ளோம் என்று மீண்டும் கூறுகிறேன்.

---

## இலக்கிய உலகு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரையொருவர் திட்டிக்கொண்டு, போட்டி மனப்பான்மையில் எதையாவது எழுதித் தள்ளுவதால் ஈழத்து இலக்கியவுலகிற்கு நல்லது போலத் தெரிகிறது.

அமைதியாக எதையாவது செய்வது நல்லது தான்; ஆனால், சிலருக்குப் பாடிக்கொண்டுதான் வேலை செய்ய முடியும். எனவே, ஒருவரையொருவர் 'வசைபாடி'க்கொண்டு எதையாவது ஆக்கபூர்வமாகச் செய்தால் என்ன? இல்லாவிடின்—

மூன்றுவது பலசரக்குக் கடையொன்று நிச்சயமாகத் தோன்றிவிடும்.

---

## அழகு சுடும்


(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரி குளித்துக் கொண்டு நின்ற கோலத்தைக் கண்டு விட்டு, அந்த நதிப்படுக்கையில் வைத்தே நல்லதொரு கவிதையையும் பாடி விட்டான்.

'தொடைகண்டு வாழை நாணும்
—துள்ளுகின்ற
நடைகண்டு அன்னம் நாணும்
படைநாணும் வேல்நிகர்த்த
கண்கள் கண்டு
சடைகண்டு நாணும் வெட்கும்
'தார்' நிகர்த்த சூல்—மே
கங்கள்!'
'மூலைகண்டு குரும்பை நாணும்
—மோகம் கொள்ளும்,
இலையென்ற இடைகண்டு மின்னல்
நாணும்
கலைநாணும் கண்கள் என்ற
குவளை கண்டு
சிலைநாணும் சிந்தை கொல்லும்
தோற்றம் கண்டு!
'பல்கண்டு முல்லை நாணும்
—பாகை ஒத்த,
சொல்கண்டு தோல்வி ஒப்பும்
சுருதி வீணை
'மெல்'லென்ற தென்றல்
நாணும் மேனி தரும்
—இன்பம் கண்டு
வில்கண்டு நாணும் கோணும்
வெறியூட்டும்
புருவம் கண்டு!'


வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 1. தில்லை

முழு நிலாக்காலம். இரவு பத்துமணிக்கு மேலிராது. ஆனால், ஆனைக் கோட்டையிலிருந்து நல்லூரை நோக்கி வரும் அந்த மண் வீதியிலும், அதனைச் சூழ்ந்துள்ள வீடுகளிலும் நேரம் இரவு ஒரு மணிக்கு மேலாகப் போன்றிருக்கும்.

ஒடுங்கிய அம்மண்வீதியில், மனித சஞ்சாரமற்ற அந்த வேளையில், பதின் மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் தன்னந் தனியனாய் 'விறுவிறு' வென்று நடந்து வந்து கொண்டிருந்தான்.

மண் வீதியை இருளாக்க இருபக்கங்களிலும், கிளைகளைப் பரப்பி வானையளாவி வளர்ந்திருந்த மரங்கள் முயன்றன. எனினும், முழு நிலாக் காலமான படியினால் மண்வீதி ஓரளவு இருளடையவில்லை.

அரையில் ஒரு வேட்டியுடன் வேறெவ்வித ஆடைகளுமற்ற அச்சிறுவன் இந்நேரத்தில் எப்படி வெளியே வந்தானோ தெரியாது. அவன் பயந்தவன் போலக் காணப்படவில்லை. எதற்கும் துணிந்த அசாத்திய தன்மை அவன் முகத்திற் சுடர்விட்டது.

'விறுவிறு' என நடந்து வந்து கொண்டிருந்த அவன் இடைக்கிடையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தான். இருபக்கங்களிலும் தென்னந் தோட்டங்கள் பரந்து கிடந்தன. அத்தோட்டங்களுக்கு இடையே அமைக்கப்பட்டிருந்த சிறு சிறு குடிசைகளில் விளக்குகள் மின்னி மின்னி எரிவது 'செத்தை'களுக்கூடாகத் தெரிந்தது.

தூரத்தில் ஒரு நாய் ஊளையிடுவது கர்ணகடூரமாக அவன் காதுத்துளைகளில் இறங்கியது.

அவன் நடந்து கொண்டிருந்தான்.

'என்றைக்குமே அவனை அடித்திராத மாமா இன்றைக்கு ஏன் அப்படி அடிக்க வேண்டும்? ஒரு கிழமை அவர் வீட்டிலே தங்கச் சென்றால்... இப்படியா அடிப்பது?......'

அவன் தனக்குள் அந்த நேரத்தில் கூடச்சிரித்துக் கொண்டான். குறைந்தது மாதத்தில் ஐந்து நாட்களாவது அவன் மாமா வீட்டில் தான் தங்குவான். மாமிக்கு அவன் மேல்கொள்ளை அன்பு. 'தில்லை, தில்லை' என அன்பொழுகக் கூப்பிட்டுச் சில வேளை முத்தமுமிடுவாள். மச்சான் முத்தையா அவன் மேல் எவ்வளவு அன்பாயிருப்பான். தனக்குக் கிடைக்கும் பட்சணத்தில் மேலுமொரு பங்கை இவனுக்குக் கொடுப்பானே?...

தில்லையம்பலம் என்ற அச்சிறுவன் தன்நடையைக் கூட்டினான். தென்னந்தோட்டங்கள் கழிந்து விட்டன. இனி மேல் வரப்போவது வயல் வெளி. அவ்வயல் வெளியை அடுத்து ஒரு வீட்டையும் காணமுடியாது. வயல்வெளியை நினைத்த போது அவனுக்குத் 'திக்' கென்றது. வயல்வெளிக்குள்ளுள்ள சுடலையையும் கடந்தல்லவா செல்ல வேண்டும்?

அவன் கோழையல்லன்; அவனுடைய தாயார் வீரர்களின் கதைகளைக் கூறும் போதெல்லாம், கண்களை அகலத் திறந்து கொண்டு கேட்பான் வீரர்களின் கதைகளைக் கேட்டுக் கேட்டு அவனும் அவர்களைப் போல வீரக் கனவு காண்பான்.

மாமாவை எண்ணிக் கொண்டபோது அவனுக்கு மிருந்த கோபமே உண்டாகியது. அவருடைய பட்டு வேட்டியை அவன் ஒருக்கால் கட்டியது குற்றமா? தற்செயலாகக் கிழிந்து போனதற்காக அவனுக்கு அடிப்பதா? அடித்த பின்பும் அவருடைய வீட்டில் இருக்க அவனுக்கு என்ன வெட்கமில்லையா.

எல்லாரும் படுக்கைக்குப் போனதும் ஒருவருக்கும் தெரியாமல் படலையை அவிழ்த்துக் கொண்டு, கலட்டியிலுள்ள தனது வீட்டிற்குப் புறப்பட்டு விட்டான்.

வயல்வெளிகள் வந்துவிட்டன; அதோ பெரியதோர் ஆலமரத்தின் கீழ் தெரிவது தான் ஆறுகால் மடம்; அதை அடுத்துச் சிறிது தூரத்தில் தெரிவது தான் கோம்பயன் மணல் சுடலை. தில்லையம்பலம் தனது நடையை வேகமாக்கினான். அவனை அறியாமல் பயம் உண்டாகத் தொடங்கியது. தேவாரம் படித்தால் ஒருவித பயமும் இல்லை என்பது அவனுக்குத் தெரியும்; அவன் அம்மா கூறியிருக்கிறாள்.

அவன் 'தோடுடைய செவியன்' எனும் தேவாரத்தை மனதிற்குள் முணுமுணுத்தபடி நடந்தான். ஆறுகால் மடத்தை நெருங்கியாகி விட்டது.

இந்நேரத்தில் அம்மடத்தில் ஒருவரையும் காணமுடியாது.

'ஆனால், இதென்ன...? மடத்தில் பலர் அமர்ந்திருப்பது தெரிகிறதே?'

தில்லையின் நடை சற்றுத் தடைப்பட்டது. நின்று மடத்தையே பார்த்தான். மடத்தைக் கடந்துதான் போகவேண்டும். அவன் பிஞ்சு மனத்தில் பற்பல கற்பனைகள் தோன்றின;

அதிலிருப்பவர்கள் ஒருவேளை கள்வரோ?... அவர்கள் இப்போது என்னைக் கண்டால்...?'

அதை நினைக்கவே அவனால் முடியவில்லை.

வேகமாக ஓடத்தொடங்கினான் மடத்தை மின்னலெனக் கடந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். சற்று ஓடியவன், நின்று திரும்பிப் பார்த்தான்.

'ஐயோ...!'

யாரோ ஒரு முரடன் அவனைத் துரத்திக் கொண்டு ஓடிவருவது தெரிந்தது. தில்லையின் கால்கள் மானெனத்தாவின. பயம் பிடரியைப் பிடித்துத் தள்ளத் தன் முழுச்சக்தியையும் கால்களிற் சேர்த்து ஓடத் தொடங்கினான். கால்களில் கட்டியிருந்த வேட்டி இடறியது.

(வளரும்)

### சூழ்நிலை

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்டு கொண்டிருந்த காலம்; யாழ்ப்பாணத்திற்கூட ஆங்கிலவரசாட்சியே நடந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் பெரும் பெரும் தார் வீதிகள் மிகக் குறைவு. பெரும் கல்வீதிகள் முக்கியமான நகரங்களையும், போர் வீரர்களின் பாடிகளையும் இணைப்பனவாய் இருந்தன. மற்றையபடி எல்லா வீதிகளும் இக்கால ஒழுங்கைகள் போல மணல் வீதிகளாகவே இருந்தன.

தோட்டங்களும், வயல்களும் நிறைந்து, அழகு கொஞ்சும் எழிற் கிராமங்களில் மக்கள் குடிவாழ்ந்து வந்தனர். நகரங்களாக உருவர்காது அமைதி நிலவும் கிராமங்களின் மக்கள் பெரும்பாலும் கமக்காரர்களாக இருந்ததால், சூரியன் எழுமுன் தோட்டங்களிலோ, வயல்களிலோ வேலைக்கு இறங்கி விடுவார்கள். சூரியன் மாலையில் மேற்றிசையில் ஒளிக்கதிர்களை ஒடுக்கிச் சரிந்ததும் வீடுகளுக்குச் சென்றுவிடுவர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திற் கள்ளர் பயம் அதிகமாக இருந்தது. ஈவிரக்கமற்ற அரக்க மனம் படைத்த இக்கள்ளர்கள் கொலை செய்யவும் அஞ்சார்கள். அதனால் இருள் அரக்கனின் போர்வை கவியத்தொடங்கியதும் எவரும் வெளியே வரத்துணியார்.

அத்தகைய ஒரு காலத்தின், ஒரு நாளில் நமது கதை தொடங்குகிறது.........

## மாலைக் காட்சி

"மணிமொழி"

மேற்கு வானம் சிவந்திடவே
மெல்லக் கதிரவன் மறைந்திடவே
பூக்கள் பலவும் கூம்பிடவே
புள்ளினம் இல்லம் அகன்றனவே..!

வண்டுகள் மலரை நாடிடவே
வண்ணப் பறவைகள் பாடிடவே
இன்ப கீதம் ஒலித்திடவே
இளைஞர் இல்லம் அகன்றனரே..!

வெள்ளை(க்) கொக்குகள் நிரைநிரையாய்
அல்லி பூத்தாற்போல் அகன்றிடவே
பள்ளிச் சிறுவர்கள் மகிழ்வுடனே
பாடம் பயிலப் பகர்ந்தனரே..!

உழவர் இல்லம் அகன்றிடவே
உதய தாரகை சொலித்திடவே
அமைதி எங்கும் நிலவிடவே
அணங்கு மதியும் தோன்றினளே..!

## சந்திரன்!

—மாவிட்டபுர ஆனந்தன்—

வட்ட அப்பம் சுட்டந்த
வானில் யாரோ வைத்தனன்
தொட்டுப் பார்க்க ஆசைதான்
எட்டவில்லை என் கைக்கு!

கைக்கு எட்டி விட்டாலும்
கடிக்க மாட்டேன்
நானென்றால்
மக்கள் யாரோ அதையுண்டு
மகிழுகின்றான் நாள்தோறும்!

கண்ணைக் கவரும் அப்பத்தைக்
கடித்து விட்ட தாரோடா?
வெண்முகிலோ? பட்சிகளோ?
வேறு யாரோ கூறடா!

அப்பா சொன்னார் சந்திர
மண்டலந்தான் தெரியுதாம்!
அப்பம் அங்கே இல்லையாம்
ஆரும் கடிக்க வில்லையாம்!

உண்மை தானா சொல்கிறார்?
என்னால் நம்ப முடியாது!
என்றும் விண்ணைப்
பார்க்கின்றேன்
அது சின்னனாக மாறுதே!

## தெரியுமா?

பின் வரும் பொருட்களை யார், யார் எந்த ஆண்டில் கண்டு பிடித்தார்களென்று உங்களிற்குத் தெரியுமா?

1. ஊற்றுப் பேனா
2. நெருப்புக் குச்சி
3. சட்டைக்குக் குத்தும் ஊசி
4. சலனப் படம்
5. புகைப் படம்
6. ஈருருளி வண்டி
7. டீசல் எந்திரம்
8. ஆகாய விமானம்

தொகுப்பு:
சி. சுதந்திரராஜா,
தாவடி.

விடைகள்:

1. வாட்டர்மன் 1884
2. லண்ட்ஸ்ட்ரோம் 1855
3. கன்ற் 1849
4. பிரைஸ், கிறீனி 1889
5. நீப்ஸ் 1814
6. ஸ்டார்லி 1884
7. டீசல் 1892
8. ரைற் சகோதரர் 1903

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு, இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யில் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12; என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்

உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 1

பெயர் ____________________

பாடசாலை ____________________

முகவரி ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ____________________ கையொப்பம் ____________________




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5வது வெற்றி வாரம்!

## சென்ட்ரல் — ராணி

(மருதானை) (யாழ்ப்பாணம்)

★ கவர்ச்சி நடனங்கள்! ★ களிப்பூட்டும் காட்சிகள்!
★ உள்ளம் கவரும் இசையமைப்பு!





அஜித் — ராகினி — ஹெலன் — சிங்
நடித்த

## சிக்காரி

எண்டெர்டெயின்மெண்ட்ஸ் அளிக்கும்

## அடுத்த திரை விருந்து!

தங்கள் முதல் படத்திலேயே ஒப்பற்ற நடிகர்கள் என்று புகழீட்டிய புதுமுகங்களான

ஜெய்சங்கர், வசந்தா,
மற்றும்
அசோகன், பண்டரிபாய், நாகேஷ்
நடித்த

5264




அசோகன் தனது சொந்தக் குரலிலேயே முதன் முதலாகப் பாடியுள்ள புதுமை!

தமிழ்த்திரை இதுவரை காணாத சண்டைக் காட்சிகள்

## வெற்றி கொட்டும் 5-வது வாரம்!


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்!



## வேட்டைக்காரன்

## எமது அடுத்த வெளியீடு!

சிவாஜி கணேசன்—எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—ரங்காராவ்
எம். ஆர். ராதா—சௌகார் ஜானகி—நாகேஷ் நடிக்கும்



## பச்சை விளக்கு

## மகிழ்வூட்டும் 4-வது வாரம்!

மூன்று இள உள்ளங்களில் காதல் புயலை எழுப்பிவிட்டு, அவர்களுடன் இரசிகர்களின் உள்ளங்களையும் ஊஞ்சலாட்டுகிறாள்



## குலமகள் ராதை

இப்பொழுது
கெயிட்டியிலும் மற்றும் 7 திரைகளிலும்
காண்பிக்கப்படுகிறது!



13ம் திகதி முதல்!
செல்லமகால் திரையில்
ஜெமினி கணேசன்-பத்மினி
மற்றும் பலர் நடித்த

## வீராங்கனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆ. இலக்கத்தில் 1,965-ம் வருடம் மே மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.